பக்கங்கள் - 28
விலை - 30 ரூபா

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 35 கதிர் 13 கார்த்திகை 23ஆம் நாள் திங்கட்கிழமை 09 டிசெம்பர் 2019 வள்ளுவர் ஆண்டு 2050

24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

சர்வதேச மனித உரிமைகள் தினத்தில்
காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்காக

## மிகப்பெரும் ஆர்ப்பாட்டத்துக்கு தயாராகின்றது வடக்கு, கிழக்கு

யாழ்ப்பாணம், டிசெம்பர் 9

முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச தற்போது ஜனாதிபதியாகப் பொறுப்பேற்ற பின்னர், காணாமல ஆக்கப்பட்டோர் விடயத்தில் பன்னாட்டு அழுத்தம் அதிகரித்திருக்கும் நிலையில் மிகப்பெரும் போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளனர் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் வாழும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள். 23



file photo



## டெல்லியில் தீ: 43 பேர் இறப்பு

புதுடெல்லி, டிசெ. 9

டெல்லியில் தொழிற்சாலையொன்றில் நேற்று அதிகாலை ஏற்பட்ட தீ விபத்தில் 43 தொழிலாளர்கள் பரிதாபமாக உயிரிழந்தனர். பலர் காயங்களுடன் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் ஓரிருவரின் நிலமை கவலைக்கிடம்.

மத்திய டெல்லியில் பரபரப்பான ராணி ஜான்சி சாலையில் உள்ள அனாஜ் மண்டி என்ற பகுதியில்தான் இந்த தீ விபத்து நடந்துள்ளது. இப்பகுதியில் பல்வேறு தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. தீ விபத்து ஏற்பட்டபோது 50 பேர் தொழிற்சாலையில் இருந்துள்ளனர். அதிகாலை 5 மணி என்பதால் அனைவருமே ஆழ்ந்த உறக்கத்தில் இருந்துள்ள்னர். அதனால். மூச்சுத் திணறலாலும் பலர் உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள் 23

## பட்டமளிப்பு விழா நேற்றுடன் நிறைவு



யாழ்ப்பாணம், டிசெ. 9

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் 34ஆவது பொதுப்பட்டமளிப்பு விழா நேற்று 11ஆவது அமர்வுடன் நிறைவடைந்தது.

கடந்த 6ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் மூன்று நாள்களில் 11 அமர்வுகளாக பட்டமளிப்பு இடம்பெற்றது. பட்டமளிப்பு விழாவில் கலைப்பீடம், விஞ்ஞான பீடம், முகாமைத்துவக் கற்கைகள், வணிகபீடம், 23

## பிரியங்கவுக்கான தண்டத்தை அரசுதான் கட்டவேண்டுமாம்

கொழும்பு, டிசெ. 9

பிரிகேடியர் பிரியங்க பெர்னான்டோவுக்கு விதிக்கப்பட்டுள்ள தண்டப் பணத்தை அரசுதான் செலுத்த வேண்டும் என்று தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் கம்மன்பில. 23

## சுவிஸ் தூதரக பெண் அதிகாரி நேற்று சாட்சியம் வழங்கினார்

கொழும்பு, டிசெ. 9

இனந் தெரியாதவர்களால் கடத்தப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார் எனத் தெரிவிக்கப்படும் சுவிஸ் தூதரகத்தின் பெண் பணியாளர் இலங்கை குற்றப்புலனாய்வுப் பிரிவினரிடம் நேற்று சாட்சியம் வழங்கினார்.

சுவிஸ் அதிகாரிகளுடன் சென்றே அவர் வாக்குமூலம் வழங்கியுள்ளார். சுமார் ஐந்து மணித்தியாலங்களுக்கு மேல் அவர் வாக்குமூலம் வழங்கினார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. 23

## யாழ். பல்கலைக்குள் நுழைந்தது எஸ்.ரி.எப்

### இருவரை விரட்டினராம்

யாழ்ப்பாணம், டிசெ. 9

சிறப்பு அதிரடிப் படையினர் மற்றும் பொலிஸார் நேற்று மாலை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துக்குள் நுழைந்தனர். தாம் துரத்திவந்த இருவர் பல்கலைக் கழக 23

## தென்னை முறிந்து வீழ்ந்து பச்சிளம் குழந்தை இறப்பு!



கிளிநொச்சி, டிசெ. 9

கிளிநொச்சி - கந்தபுரம் பகுதியில் தென்னை மரமொன்று முறிந்து விழுந்ததில் ஒரு வயதான பச்சிளம் குழந்தையொன்று உயிரிழந்தது. குறித்த குழந்தையை அவரது அம்மம்மா நேற் 23

கடவுச் சீட்டுக்களில்

## தமிழ் பெண்கள் பொட்டிட தடை

கொழும்பு, டிசெ. 9

புதிதாக கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிப்பவர்கள் அல்லது பழைய கடவுச் சீட்டை புதுப்பிக்கும் தமிழ்ப் பெண்கள், நெற்றியில் பொட்டுடன் படம் எடுப்பதை தவிர்க்க வேண்டும் என குடிவரவு குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் பி.ஜி.ஜி. மிலிந்த இந்தத் தகவலை வெளியிட்டுள் 23

## வவுனியாவில் தீவிரமான டெங்கு கல்வி நிலையங்களுக்குப் பூட்டு!

வவுனியா, டிசெ. 9

டெங்குத் தொற்றின் அதிகரிப்பை அடுத்து, வவுனியாவில் தனியார் கல்வி நிலையங்கள் மறு அறிவித்தல் வரை இயங்குவதற்கு பிராந்திய சுகாதார திணைக்களத்தால் தடை விதிக்கப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டத்தில் டெங்கின் தாக்கம் தீவிரமடைந்துள்ளது. சுமார் 550க்கும் மேற்பட்டோர் டெங்குத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். டெங்குத் தொற்றைக் கட்டுப்படுத்த பிராந்திய சுகாதார திணைக்களத்தினர் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

அந்தவகையில், தனியார் கல்வி நிலையங்களை மறு அறிவித்தல் வரை மூடுமாறு பிராந்திய சுகாதார திணைக்களத்தினர் ஒலிபெருக்கி மூலம் அறி 23

இராஜாங்க

## அமைச்சின் செயலராக கிளி.மாவட்டச் செயலர்

யாழ்ப்பாணம், டிசெ. 9

கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் சு.அருமைநாயகம் இன்று முதல் முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சின் செயலராக நியமிக்கப்பட்டுள்ளார். 23




# புத்தாண்டு ராசிபலன்

## அதிர்ஷ்ட மழையில் உச்சத்துக்கு செல்லப் போறீர்கள்!

2020இல் பிறக்கப்போகும் புத்தாண்டில் பொருளாதாரம், புதிய வேலை, திருமணம், தொழில் வளர்ச்சி, இலாபம் எப்படி இருக்கும் என்று தெரிந்து கொள்ளலாம். புத்தாண்டு பிறக்கும்போதே மிதுனத்தில் ராகு, விருச்சிகத்தில் செவ்வாய் தனுசு லக்னத்தில் கேது, குரு, சூரியன், சனி, புதன், மகரத்தில் சுக்கிரன் கும்பத்தில் சந்திரன் என கிரகங்களின் சஞ்சாரம் அமைந்துள்ளது.
2020 ஆம் புத்தாண்டில் முக்கியமான கிரகப்பெயர்ச்சி சனிப்பெயர்ச்சிதான் ஆண்டின் தொடக்கமான ஜனவரியிலேயே தனுசு ராசியில் இருந்து மகரத்துக்கு இடப்பெயர்ச்சி அடைகிறார். குரு பகவான் தனுசு ராசியில் ஆட்சி பெற்று அமர்ந்திருக்கிறார்.
அதிசாரமாக மகரத்துக்கு சென்று சில மாதம் சஞ்சரிக்கிறார். பின்னர் தனுசுக்கு வந்து மீண்டும் ஆண்டு இறுதியில் மகரத்துக்கு இடம்பெயர்கிறார். ராகு கேது பெயர்ச்சி 2020ஆம் ஆண்டு கிடையாது. இந்த கிரகங்களின் இடப்பெயர்ச்சியின் படி மேஷம் ராசி எவ்வாறு இருக்கும் என்பதை தற்போது காணலாம்.




**மேஷம்**
செவ்வாயை அதிபதியாக கொண்ட மேஷ ராசிக்காரர்களே. பிறக்கப்போகும் 2020ஆம் புத்தாண்டு அதி அற்புதமான ஆண்டாக அமையப்போகிறது. சனிபகவான் தொழில் ஸ்தானமான பத்தாம் வீட்டுக்கு வரப்போகிறார். பத்தாம் அதிபதி பத்தில் அமரப்போகிறார். குருபகவான் பாக்ய ஸ்தானமான ஒன்பதாம் வீட்டில் அமரப்போகிறார். நீங்கள் நினைத்த காரியம் நிறைவேறும். உங்களின் தன்னம்பிக்கை கூடும். நீங்கள் பட்ட கடன்கள் அடைபடும். திருமணம் கைகூடி வரும் அரசு துறைகளில் வேலை செய்பவர்களுக்கு அதி அற்புதமான ஆண்டாக அமையப்போகிறது.

**யோகமான ஆண்டு**
தொழில் செய்பவர்களுக்கு இலாபம் கூடும். திருமணமாகாதவர்களுக்கு திருமணம் கைகூடி வரும் கவலைப்பட வேண்டாம். 2020ல் பலருக்கு கெட்டிமேளம் கொட்டும். திருமணம் முடிந்து குழந்தை பாக்கியத்திற்காக தவம் இருப்பவர்களுக்கு கை மேல் பலன் கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் இலாபம் அதிகரிக்கும். மொத்தத்தில் 2020ஆம் புத்தாண்டு யோகமான ஆண்டாக அமையப்போகிறது. மலைமேல் இருக்கும் முருகனைத் தரிசனம் செய்யுங்கள்.

**பணவரவு**
கிரகங்களின் இடப்பெயர்ச்சியைப் பொறுத்து பார்க்கும் போது 2020ஆம் ஆண்டின் தொடக்கத்திலேயே நன்மைகள் அதிகம் நடக்கும். அதிர்ஷ்டங்கள் தேடி வரும். திருமணம் நடைபெறும். குழந்தைப் பாக்கியம் கிடைக்கும். நட்புகள் மூலம் நன்மைகள் நடைபெறும். கடன்கள் அடைபடும் அளவுக்குப் பண வரவு அதிகரிக்கும். பயணங்கள் அதிகம் நடக்கும்.

**கிரகங்கள் சாதகம்**
சனியும் குருவும் சாதகமாக உள்ளன. அரசியல் மற்றும் அரசு துறைகளில் வேலை செய்பவர்களுக்கு நல்லது நடக்கும். இராணுவம், காவல்துறையில் உள்ளவர்களுக்கு வளர்ச்சிகள் அதிகம் நடக்கும். தொழில் துறையினருக்கு முன்னேற்றங்கள் அதிகரிக்கும். வேலையில் உள்ளவர்களுக்கு பதவி உயர்வுகள் கிடைக்கும். முதல் ஒன்பது மாதங்களில் அதிகம் நன்மைகள் நிறைந்த ஆண்டாக அமைந்துள்ளது. மூன்றாம் வீட்டில் உள்ள ராகு செப்ரெம்பர் மாதம் இரண்டாம் வீடான ரிஷபத்துக்கு நகர்கிறார். கேது எட்டாம் வீடான விருச்சிகத்துக்கு நகர்கிறார்.

**அரசு வேலைகள் கிடைக்கும்**
மாணவர்கள் கல்விக்காக வெளியூர், வெளிநாடுகளுக்குப் பயணங்கள் செல்வீர்கள். பட்டங்கள் வாங்குவீர்கள். மந்தநிலை மாறி உடல் சுறுசுறுப்பாக இருக்கும். புதிய வாய்ப்புக்கள் கிடைக்கும். தொழில் ஸ்தானத்தில் கிரகங்கள் வலுவடைந்து நன்மையைச் செய்யப்போகின்றன. அரசு வேலைக்கு முயற்சி செய்பவர்களுக்கு வேலை கிடைக்கும். சனியின் சஞ்சாரத்தினால் வளர்ச்சிகள் அதிகம் கிடைக்கும்

# இந்த 5 ராசிகளில் பிறந்தவர்கள் வசீகரமிக்கவர்கள்

ஒரு சிலரைப் பார்த்ததுமே பலருக்குப் பிடித்து விடும். அதற்கு காரணம் அனைவரையும் கவர்ந்து விடுவது அவர்களின் இயற்கையான திறமைகள் என்று கூடக் கூறலாம். அனைவரையும் கவர்பவர்கள் எப்பொழுதும் நல்லவர்களாக மட்டும்தான் இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. சில ராசிக்காரர்களுக்கு மற்றவர்களை ஈர்க்கும் காந்த சக்தி இயற்கையாகவே இருக்கும். அப்படிப்பட்ட ராசிக்காரர்களை பற்றி இன்று அறிந்து கொள்ளுங்கள்...

**மேஷம்**
மேஷ ராசிக்காரர்களை உங்களுக்குப் பிடித்தாலும், பிடிக்காவிட்டாலும் அவர்களின் வசீகரத்தை உங்களால் நிராகரிக்க முடியாது. ஏனெனில் இவர்களின் வெறுப்பேற்றும் காரியங்கள் கூட மற்றவர்களுக்கு இவர்களின் மீது கோபத்தை ஏற்படுத்தாது. இவர்களை மன்னிப்பதற்கான வாய்ப்பைத்தான் அனைவரையும் தேடுவார்கள், அதற்குக் காரணம் இவர்களின் வசீகரம் ஆகும். ஆர்வமானவர்களாகவும், புத்திசாலிகளாகவும் இருக்கும் இவர்களுக்கு மற்றவர்களைத் தங்களை நோக்கி ஈர்ப்பது என்பது அவ்வளவு கடினமான காரியமாக இருக்காது.

**சிம்மம்**
காந்த சக்தியில் முதல் இடத்தில் இருப்பது சிம்ம ராசிக்காரர்கள்தான். வசீகரத்தின் ராஜா என்றால் அது இவர்கள்தான். குழந்தைப் பருவம் முதலே இவர்கள் அனைவரையும் கவர்பவர்களாக இருப்பார்கள். குடும்பத்தினர் முதல் நண்பர்கள் வரை அனைவருக்கும் பிடித்தவர்களாக இவர்கள் இருப்பார்கள். இவர்களின் சர்வாதிகாரம் கூட பிறருக்கு வெறுப்பை ஏற்படுத்தாது. நடிப்புத்துறையில் இருக்கும் சிம்ம ராசிக்காரர்கள் பெரும்பாலும் வெற்றிகரமானவர்களாக இருப்பார்கள்.

**துலாம்**
துலாம் ராசிக்காரர்கள் வசீகரத்தின் அடையாளமாகும். மற்றவர்களை சமநிலையில் வைத்திருப்பதன் மூலமும், தங்களால் முடிந்த வகையில் மற்றவர்களை மகிழ்ச்சியாக வைத்திருப்பதன் மூலமும் இவர்கள் அனைவர்க்கும் பிடித்தவர்களாக மாறுவார்கள். இவர்களின் அமைதியான நடத்தை அனைவரையும் இவர்களின் பின்னால் வரவைக்கும், இவர்கள் யாருக்கும் அச்சுறுத்தலாக இருக்க மாட்டார்கள். தங்களின் திறமை மற்றும் அனுபவம் மூலம் தம்மைச் சுற்றியிருப்பவர்களின் பிரச்சினைகளை தம்மால் முடிந்தவரை இவர்கள் தீர்த்து வைப்பார்கள். நேர்மையை விரும்பும் அனைவரும் இவர்களின் பின்னால் வருவார்கள்.

**தனுசு**
தனுசு ராசிக்காரர்களிடம் இருக்கும் திறமை மற்றவர்களை அவர்களுக்கே தெரியாமல் அவர்களை நோக்கி ஈர்க்கும். இந்த ராசியின் கீழ் பிறந்தவர்களின் மனதில் விசித்திரமான புதிய உலகங்கள் எப்போதும் உருவாகிக் கொண்டே இருக்கும், இவர்கள் தங்களின் ஆழமான எண்ணங்களைக் கேட்க விரும்பும் அனைவரிடமும் தயங்காமல் பகிர்ந்து கொள்வார்கள். தனுசு ராசிக்காரர்கள் மந்திரசக்தி மூலம் அனைவரையும் கவர்வார்கள்.

**மீனம்**
மீன ராசிகளில் பிறந்தவர்கள் பெரும்பாலும் அரவணைப்பும், நல்ல விருப்பங்களும் கொண்டவர்களாக இருப்பார்கள். இவர்கள் எவ்வளவு அன்பையும், கவனத்தையும் பெற விரும்புகிறார்களோ அதேபோல அன்பை விரும்புகிறவர்களும் இவர்களைத்தான் தேடிவருவார்கள்.
மீன ராசிக்காரர்களின் வசீகரம் அவர்களைச் சுற்றியிருப்பவர்களுக்கு அர்ப்பணிப்பையும், விசுவா சத்தையும் காட்ட ஊக்குவிக்கும். இப்படிப்பட்டவர்களின் வசீகரத்தில் இருந்து யார்தான் விடுபட விரும்புவார்கள்?



## முன்பள்ளி சிறார்களின் ஒளிவிழா நிகழ்வு

யாழ்ப்பாணம்,டிசெ.9

யாழ்ப்பாணம் கலைவாணி முன்பள்ளி, நாவாந்துறை, சென்.யூதா முன்பள்ளி. அரியாலை பூம்புகார் முன்பள்ளி ஆகியவற்றின் ஒளிவிழா நிகழ்வு இடம்பெற்றது.

வை.எம்.சி.ஏ அமைப்பின் ஏற்பாட்டில் அமைப்பின் மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களின் அபிநய நடனம், கோலாட்டம், வில்லுப்பாட்டு, கிராமிய நடனம், கரோல் கீதம், பாலன் பிறப்பு, பாடல், நடனம், போன்ற கலைநிகழ்வுகள் இடம்பெற்றன. (ஜ)



## மன்னாரிலிருந்து கண்டிக்கு நல்லிணக்கப் பயணம்

*30 பேர் சென்று திரும்பினர்*

மன்னார், டிசெ. 9

மன்னார் மறைமாவட்ட சர்வமதக் குழு உறுப்பினர்கள் மற்றும் பயனாளிகள் சுமார் 30 பேர் இரண்டு நாள்கள் நல்லிணக்கப் பயணமாக கடந்த செவ்வாய்க்கிழமை கண்டி மறை மாவட்டத்துக்குச் சென்றிருந்தனர்.

மன்னார்கறிற்றாஸ் வாழ்வுதயத்தின் ஏற்பாட்டில் மன்னார் வாழ்வுதய இயக்குனர் அருட்பணி செ. அன்ரன் அடிகளின் வழி நடத்தலில் பயணம் நடைபெற்றது என்று தெரிவிக்கப்பட்டது.

குறித்த குழுவினரை கண்டி மறைமாவட்ட சர்வமதக் குழுவினர் வரவேற்றனர். இதில் கண்டி மறைமாவட்ட செற்றிக் நிறுவனத்தின் இயக்குநர் அருட்தந்தை டெஸ்மன் அடிகளார் கலந்து கொண்டிருந்தார்.

சர்வமத் செயற்றிட்டத்தின் நோக்கம் தொடர்பாகவும், கடந்த காலங்களில் செயற்படுத்தப்பட்ட செயற்பாடுகள் மூலம் அடையப்பட்ட விளைவுகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டன.

தொடர்ந்து கண்டியிலுள்ள சர்வ மதங்களையும் பிரதிபலிக்கும் வழிபாட்டிடங்களுக்கும் சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த-56)

## மாணவர்கள் மதிப்பளிப்பு

கொடிகாமம்,டிசெ.9

யாழ்ப்பாணம் இயற்றாலை அ.மி.த.க. பாடசாலையின் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றி சித்தி பெற்ற மாணவர்கள் மதிப்பளிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வு பாடசாலை மண்டபத்தில் அதிபர் திருமதி த.ஸ்ரீமோகன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது

நிகழ்வில் முதன்மை விருந்தினராக சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் சி.பிரபாகரன், சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி வலயக்கல்வி அலுவலக ஆசிரிய ஆலோசகர் ந. திருவாசகன், அயற்பாடசாலை அதிபர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 11 மாணவர்கள் தோற்றினர். அதில் வா.யாகீசன் 164, கு.அபிநீஸ்159 ஆகியோர் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தி பெற்றுள்ளனர். ஏனைய 9 மாணவர்களும் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்றனர். மாணவர்கள் அனைவரும் மதிப்பளிக்கப்பட்டனர். மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ஜ-159)



✦ ✦ ✦



முல்லைத்தீவு,டிசெ.9

முல்லைத்தீவு சிலாவத்தைப் பகுதியில் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்கள் மதிப்பளிக்கப்பட்டனர்.

சிலாவத்தை கிராமத்தில் கடந்த 2016ஆம்ஆண்டிலிருந்து 2019ஆம் ஆண்டுவரையில் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 19 மாணவர்கள் மதிப்பளிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வு சிலாவத்தை பொதுநோக்கு மண்டபத்தில் அண்மையில் சிலாவத்தை மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

விருந்தினர் மற்றும் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் வரவேற்புடன் நிகழ்வு ஆரம்பமானது. தொடர்ந்து மங்கல விளக்கேற்றல், கலை நிகழ்வுகள், விருந்தினர்களது உரை என்பன இடம்பெற்றன. இவற்றினையடுத்து புலமைப்பரிசில் பரீட்சையில், சித்தியடைந்த மணவர்கள் பரிசில் வழங்கி மதிப்பளிக்கப்பட்டனர்.

நிகழ்வில் விருந்தினர்களாக வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன், கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலர் திருமதி. மணிவண்ணன் உமாமகள், கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர் வைத்திலிங்கம் கெங்காதரன், சிலாவத்தை கிராம அலுவலகர் தியாகலிங்கம் ஜெயபாகு,சிலாவத்தை கிராம பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், மாணவர்களது பெற்றோர்கள், நலன்விரும்பிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஜ-246)



## வாசிப்பு மாத நிறைவும் பரிசளிப்பும் நிகழ்வும்

வவுனியா,டிசெ.9

வவுனியா தெற்கு பிரதேசசபையின் வாசிப்பு மாத நிறைவும்,பரிசளிப்பும் நிகழ்வும் அண்மையில் இடம்பெற்றன.

வவுனியா தெற்கு பிரதேசசபை மண்டபத்தில் பிரதேசசபைத் தவிசாளர் துரைச்சாமி நடராஜசிங்கம் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது.

தேசியவாசிப்பு மாதத்தை முன்னிட்டு பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்கள், புலமைபரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள், சிறந்த வாசகர் மற்றும் சிறந்த உள்ளூர் எழுத்தாளர் ஆகியோர் மதிப்பளிக்கப்பட்டனர்.

நிகழ்வின் இறுதியில் "தமிழ் ஓசை" என்ற நூல் வெளியிடப்பட்டது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வினோதாரலிங்கம், சிறப்பு விருந்தினர்களாக நாடாளுமன்ற முன்னாள் ஊறுப்பினர் சிவநாதன் கிசோர், வடக்கு மகாணசபை முன்னாள் உறுப்பினர் ஜ.ரி.லிங்கநாதன, செட்டிக்குளம் பிரதேச சபைத் தவிசாளர், வவுனியா நகரசபைத் தவிசாளர் உட்பட பலரும் கலந்துகொண்டனர். (ஜ-402)



## சிறப்புத் தேவையுடையோருக்கு பன்னாட்டுத் தின நிகழ்வுகள்

கிளிநொச்சி, டிசெ. 9

சிறப்புத் தேவையுடையோருக்கான பன்னாட்டுத் தின நிகழ்வு முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் சிவன் கோயில் வளாகத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

ஒட்டுசுட்டான் ஒளிரும் வாழ்வு அமைப்பு இதை நடத்தியது. நிகழ்வில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவிலுள்ள சிறப்புத் தேவையுடைய நபர்கள், துணுக்காய், கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு ஆகிய பகுதிகளிலுள்ள சிறப்புத் தேவையுடையவர்கள் பங்கேற்றிருந்தனர். (த-6)



## வர்ண இரவு ஒன்று கூடல்

யாழ்ப்பாணம்,டிசெ.9

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வர்ண இரவு ஒன்று கூடல் நிகழ்வு கைலாசபதி கலையரங்கில் அண்மையில் இடம்பெற்றது.நிகழ்வில் யாழ்ப்பாண மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனல்ட் கலந்துகொண்டார் என்று அவர் அனுப்பிவைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ)


**பிரத்தியேக வகுப்புக்களுக்கான விசேட அனுமதி**


அடுத்த வருடம் க.பொ.த (உயர்தரப்) பரீட்சைக்கு தோற்றவுள்ள **2020 A/L (EM&TM) 2020 A/L DAY CLASS** மாணவர்களுக்கான வகுப்புக்களை இன்று (09.12.2019) திங்கட்கிழமையிலிருந்து காலை 8.00 மணிமுதல் 4.00 மணிவரை வகுப்புக்களை நடத்துவதற்கான விசேட அனுமதி பல்வேறுபட்ட சுகாதார நிபந்தனைகளின் அடிப்படையில் யாழ்.மாவட்ட அரச அதிபரினால் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய மேற்படி பிரிவுகளுக்கான வகுப்புக்கள் 09.12.2019 இலிருந்து குறித்த அனுமதிக்கமைய ஆரம்பிக்கப்படும்.

**New Science Hall, Kannathiddy Road, Jaffna**

**New Science World, Brown Road, Jaffna**

# தர்பாரில் திருநங்கைகளுக்கு வாய்ப்பளித்த அனிருத்



அனிருத் இசையமைத்து வரும் 'தர்பார்' படத்தில் இடம் பெறும் ஒரு சிறப்புப் பாடலை திருநங்கைகள் மூவர் பாடியுள்ளனர் எனக் கூறப்படுகிறது.

ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்தில் ரஜினிகாந்த் நடித்துள்ள படம் 'தர்பார்'. இந்தப் படத்தில் ரஜினி நீண்ட இடைவெளிக்கு பிறகு பொலிஸ் அதிகாரியாக நடித்துள்ளார். இந்தப் படத்தில் நயன்தாரா நாயகியாக நடித்துள்ளார். 'தர்பார்' படத்தின் படப்பிடிப்புகள் முடிவடைந்து, தற்போது பின்னணி வேலைகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. இந்தப் படத்துக்கு அனிருத் இசையமைத்திருக்கிறார்.

'தர்பார்' படத்தின் "சும்மா கிழி பாடல்..." கடந்த சில நாள்களுக்கு முன் வெளியாகி நல்ல வரவேற்பைப் பெற்றது. எஸ்.பி.பாலசுப்ரமணியம் இந்தப் பாடலைப் பாடியிருந்தார். இந்த நிலையில், 'தர்பார்' படத்தில் இடம்பெறும் ஒரு சிறப்புப் பாடலை திருநங்கைகள் மூன்று பேர் பாடியுள்ளனர். படத்தில் இந்தப் பாடலுக்கு திருநங்கைகள் நடனமாடியுள்ளனர் என்றும் கூறப்படுகிறது.

## twitter

சப்பாணி@manipmp

"நல்லா யோசிச்சு நாளைக்குச் சொன்னால் போதும்..."
என்பதுகூட கோரிக்கையின் வன்முறைதான்!

சப்பாணி@manipmp


சம்பளம் குறைவாய் இருந்தால் வேலை அதிகமாய் இருக்கும்!
சம்பளம் அதிகமாய் இருந்தால் வேலை குறைவாய் இருக்கும்!

சிலந்தி™@nandhu_twitts

சந்தோசங்களை நகல் எடுக்கவும் முடியாது..
கவலைகளை எழுதி வைக்கவும் முடியாது, நிலையற்ற வரையறை..!!


ஊர்க்காவலன்™

வாழவேண்டும் என நினைப்பவர்கள் நிம்மதியை இழப்பதில்லை
வசதியாக வாழவேண்டும் என நினைப்பவர்களே நிம்மதியை இழக்கின்றனர்....









நீ செய்த தீமைகளின்
பலன்கள் யாவும் நீ அறிந்தோ
அறியாமலோ
உனை வந்து சேரும்

## 75 வருட நட்பு ..






ஒரு சிறிய ஓணானைப் போல
ஒரு சிறிய நத்தையைப் போல
ஒரு சிறிய எறும்பைப் போல
ஒரு சிறிய அணிலைப் போல
அந்தக் காட்டில்
மழை நீரும்
ஒரு விலங்கைப் போல
அங்குமிங்கும்
ஓடிக்கொண்டிருக்கிறது

## வெற்றியின் ரகசியங்கள்...

- வெற்றி பெறத் திட்டமிடுங்கள் சரியான திட்டமிடலே பாதி வெற்றியைத் தந்துவிடுகிறது.
- வாழ்க்கையும் எமக்கு பல நேரங்களில் தேர்வுகளையே ஞாபகப்படுத்தும். அதைச் சரியான முறையில் நாமும் கையாள வேண்டும் என்பதையே எம்முடைய ஒவ்வொரு நிமிடமும் எமக்கு ஞாபகப்படுத்தும்.
- கடைசி நிமிடத் தயாரிப்புக்கள் சில நேரங்கள் வேண்டுமானால் நமக்கு கை கொடுக்கலாம். பல சமயங்களில் அதுவே எமக்கு மிகப்பெரிய எதிரியாக வந்து நிற்கும்.
- அடுத்தடுத்த நிமிடங்கள் சிறப்பாக அமைய வேண்டும் என்றால் நிகழ் காலங்களைச் சரியான வகையில் நாம் பயன்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
- வாழ்க்கை என்பது ஒரு போர்க்களம்; விழுப்புண் பெறாமல் போர்க்களத்தில் வெற்றி காண முடியாது?
- கவலை நாளைய துயரங்களை அழிப்பதில்லை, இன்றைய வலிமையை அழித்துவிடும் என்பதை மறந்து விடாதீர்கள்.

# மரண அறிவித்தல்கள்

## வேலுப்பிள்ளை சிற்றம்பலம்



தோற்றம் 24.08.1936 மறைவு 07.12.2019


நவாலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சிற்றம்பலம் நேற்று முன்தினம் **(07.12.2019)** சனிக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை நாகமுத்து தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற குலமணியின் அன்புக் கணவரும், சரவணன் (மகப்பேற்று வைத்தியர், போதனா வைத்தியசாலை, மட்டக்களப்பு), புவனேந்திரன் (அதிபர், சான்று பெற்ற பாடசாலை, அச்சுவேலி), ரவீந்திரன் (லண்டன்), மாதினி (பிரான்ஸ்), நளாயினி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சாருஜா , தயாழினி (உத்தியோகத்தர், மாவட்ட நீதிமன்றம், ஊர்காவற்றுறை), புவனேந்திரம் ஆகியோரின் அன்பு மாமனாரும், சசிவர்ணி, மருதினி, கோசினி, சாரகி, ஷமிரா, கௌதம், அபிநயா, யௌவனா, நந்தனா, ராஜசின்மயி, ராஜஸ்ரீமன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று **(09.12.2019)** திங்கட்கிழமை நண்பகல் **12** மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் **2.00** மணியளவில் கொத்துக்கட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

C32841(16/17)

**0776099866** தகவல்:குடும்பத்தினர்



தோற்றம் 03 . 06 . 1937

மறைவு 07 . 12 . 2019

## சிதம்பரப்பிள்ளை இளையதம்பி

பலாலி கிழக்கைப் பிறப்பிடமாகவும் புத்தூர் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை இளையதம்பி 07.12.2019 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை புதினாச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் ஆச்சிப்பிள்ளையின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற வல்லிபுரம் சின்னாச்சி தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம், சிவகுமாரன் (London), விக்கினேஸ்வரன், நகுலேஸ்வரன் (லண்டன்), நகுலேஸ்வரி, இராஜேஸ்வரி (London) ஜெகதீஸ்வரன் (France) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற செல்லப்பா, சின்னாச்சி, தெய்வானைப்பிள்ளை, கந்தையா ஆகியோரின் அன்புச் சகோதரரும் கேதாரகௌரி (London), கவிதா, மைதிலி (லண்டன்), றஜீவ்மோகன், தனீஸ்வரன் (London), கலைமகள் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் சாம்பவி, கிஷோக், அகீஷன், லக்சிகன், பவித்திரா, கேஷவி, ராகவி, அக்ஷவி, அபிராமி, சங்கவி, வைஸ்ணவி, றஜீவன், துர்ஷியா, கீர்த்திகா, விஸ்னுகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.12.2019) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப 10.00 மணியளவில் பலாலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
புத்தூர் மேற்கு, புத்தூர். 077 800 2171

**கணினி அறிவுடைய பெண் ஊழியர் தேவை**

உரும்பிராய் கிட்ஸ் பார்க் பாடசாலைக்கு கணினி அறிவுடைய பெண் அலுவலக உதவியாளர்கள் தேவை. அண்மையில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(CS 29666)(04.17)

**077 656 5258/ 021 205 4626**

**ஆலயத்துக்கு பணியாளர் தேவை**

திருநெல்வேலி அரசடி
ஸ்ரீ சிவகாமி அம்மன் ஆலயத்துக்குப் பணியாளர் தேவை.

**077 386 7458**

**வேலையாள்கள் தேவை**

01. மேசன்
- ரூபா 1500.00 - 1600.00

02. தச்சு வேலை
- ரூ1300.00 - 1600.00

(திங்கள் முதல் - வெள்ளி வரை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.00 மணி வரை மட்டும் தொடர்பு கொள்ளவும்.)

(CS 29799)(14.17)

**077 724 5399**

**பணியாள்கள் தேவை (Vacancy)**

01. கணிய அளவியலாளர் (QS) - (Min 1Yr Exp)
02. QS Trainee
03. தொழில்நுட்ப அலுவலர் (T.O) - (Min 1Yr Exp)
04. T.O Trainee

(திங்கள் முதல் - வெள்ளி வரை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.00 மணி வரை மட்டும் தொடர்புகொள்ளவும்.)
E-mail : global19construction@gmail.com

(CS 29800)(14.17)

**077 724 5399**

வாழ்க வளமுடன்

**வீடு, காணி விற்க வாங்க தொடர்பு கொள்ளவும்**

- எம்மிடம் 65 காணிகள், 29 வீடுகள் உண்டு.
- வீடு, காணி வாங்குவதற்கும், விற்பதற்கும் தொடர்பு கொள்ளவும்.
- எமது சேவை நாடளாவியது.

தொடர்பு:-Green Life Real Estate
G.P.S Road, Kalviankadu, Jaffna.
077 555 9028, 077 133 8269

**இறைச்சிக்கோழி விற்பனை**

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் மிகக்குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்
சுத்தம் செய்யப்பட்டது 1Kg - 430/= மட்டுமே
கூடுதல் கொள்வனவுக்கு விசேட விலைக்கழிவு

U.S.A பாம்
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை
077 868 9500

**விற்பனைக்கு**

சவுக்கு, தேக்கு, மருது, நாவல், மலைவேம்பு, இலுப்பை, புங்கை, சமண்டலை, கயூ, கறுவா, கராம்பு, அன்னமுன்னா, சீதாபழம், வேம்பு, சித்திர வேம்பு, முழுநெல்லி, அரிநெல்லி, விலும்பி, கோப்பி, பாலை, முதிரை, நல்லஇன தென்னங்கன்று, மாங்கன்றுவகை, தேசி, தோடை, பலா, கொய்யா, மாதுளை, செவிளை, தென்னை, கமுகு, வெற்றிலை, பெசன்புறுட், ஈரப்பலா, றெட்லேடிபப்பா, முருங்கை, யம்பு, கமுகு, கத்தாளை, முந்திரிகைக்கன்று, அம்பர் லாங்கன்று மேலும் பல் இன பூங்கன்று வகை றோசா (ஒட்டு) சாடி வகைகளும் விற்பனைக்குண்டு.

நியூ லங்கா பாம் 077 612 9343 077 279 0431
பலாலி வீதி, ஊரெழு மேற்கு, கணேசா பாடசாலைக்கு அருகில்
கிளை: கே.கே.எஸ். வீதி, இணுவில்

உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com, 021493 1111

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 26.07.1929 மறைவு 05.12.2019

எமது நண்பரும், பொப்பியூலர் மோட்டோர் ஸ்ரோர்ஸ் உரிமையாளரும், யாழ் வணிகர் கழக உப தலைவரும், முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினருமான

**திரு. இரத்தினலிங்கம் செயசேகரன்**
மற்றும் T.R **குணசேகரன்** வர்த்தக நிலைய உரிமையாளர்
**திரு.இரத்தினலிங்கம் குணசேகரன்**
ஆகியோரின் அன்புத் தாயாரான

**திருமதி இரத்தினலிங்கம் பத்மாவதி**


அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

C32840(16/17)

உரிமையாளர்
ஸ்ரீ நதியா நகை மாளிகை,
N.S.R திருமண மண்டபம்.
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

# மரண அறிவித்தல்

## செல்வி பொன்னம்பலம் சிவகங்கை



மண்டைதீவு 6ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த செல்வி பொன்னம்பலம் சிவகங்கை நேற்று **(08.12.2019)** ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் வள்ளியம்மை தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வியாழாச்சி, இலட்சுமி, மாரிமுத்து, கனகம்மா, விக்கினராஜா, கண்மணி, புவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான பழனித்துரை, குமாரசுவாமி, சிவசம்பு, சதாசிவலிங்கம் மற்றும் யோகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று **(09.12.2019)** திங்கட்கிழமை பிற்பகல் **2.00** மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மண்டைதீவு தலைக்கீரி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆதிவைரவர் வீதி,
மண்டைதீவு - 06

தகவல்:
குடும்பத்தினர்.

**077 524 8549**

## மரண அறிவித்தல்

## சிறோமி பீற்றர்சன்



கொழும்பு-13ஐ பிறப்பிடமாகவும், நெடுந்தீவு மத்தி 8ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சிறோமி பீற்றர்சன் நேற்று **(08.12.2019)** ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் பீற்றர்சனின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற ஜோசப் தோமஸ் எட்விசம்மா (ரஞ்சி) அவர்களின் அன்பு மகளும், ரமேஸ் (அவுஸ்ரேலியா), சுபாஸ் (பிரான்ஸ்), அலெக்ஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், வர்ஷாயினி, டிலானி ஆகியோரின் அன்புத் தாயாரும் மரியதாசன், தேவதாசன், காலஞ்சென்ற செல்லா ஆகியோரின் அன்பு மருமகளும், டிஸ்மிலா (பிரான்ஸ்), நியூஸ்லா (பிரான்ஸ்), தர்மினி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**

| | |
|---|---|
| தாய் - எட்விசம்மா | (077 152 7378) |
| சகோதரன் - ரமேஸ் | (0061 4698 28292) |
| மாமா - ஆனந்தன் | (077 503 5549) |

CS24200(16/17)

## 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**தோற்றம் 24.12.1956**
**மார்க்கண்டு உதயகுமார்.**
(புத்தூர் உபதபால் ஊழியர்)

**தோற்றம் 08.02.1966**
**உதயகுமார் வசந்திமாலா**

**இறைவன் அடியில் : 08.12.2011**

வாழவேண்டாதார் வாழுதலும்
வாழ வேண்டியவர் சாதலும்
இயல்பாகிப்போனது இவ்வுலகினில்

அன்பான எங்கள் தெய்வங்களே
எட்டு ஆண்டுகள் ஓடி மறைகின்றன
உங்கள் நினைவுகள் மறையாது

முதன் முதலில் எங்கள் மனம்
வெந்து உருகியது
இருமலர்கள் தீயில் கருகியதால்

உங்கள் மரணத்தை நினைத்துத்
தினம் தினம் மனதளவில்
வெந்து போகிறோம்.

சொத்துக்காகப் பாசம் மறந்து
பாவியானதோ
அதற்கு நீங்கள் பலியானதோ

சிந்திக்காத குரங்கு மனம்
ஏவி விட்ட பேய்களின்
கதைகேட்டுப் பேயாக வந்து
கொன்று குவித்ததோ

ஆண்டவன் பார்த்திருக்க
அலங்கோலமாகும்
அவர் வாழ்வு சீரழிந்து பேரகும் என்பதே
இறைவனின் தீர்ப்பு

உங்கள் பாசம் புரியாமல்
உங்கள் நேர்மை விளங்காமல் போன
மனிதப் பேய்கள்
கண்முன்னே கருகிப்போவார்

தர்மமாய் வாழ்ந்து
தர்மம் செய்து
தர்மத்தைப் போற்றியவர்கள் நீங்கள்

தெய்வத்தை நீங்கள் தேடிச்
சென்றபோது
பக்தியை எண்ணிப் பெருமைப்பட்டோம்
-அந்த
தெய்வம் உங்களை கூட்டிச்
சென்றபோது
சக்தியை இழந்து வெறுமைப்பட்டோம்.

எங்களைப் பிரிந்த - உங்கள்
ஆத்மா சாந்தியடைய அனைத்தும்
செய்வோம் முறையாக
உங்களை இழந்த - எங்கள்
இதயம் சாந்தியடைய நீங்கள்
அருள்புரிவீராக.....

**ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!**

**நீர்வேலி மேற்கு, இராஜவீதி,**
**4 ஆம் மைல், நீர்வேலி**

**பிள்ளைகள்**
செந்தூரன் (பிரான்ஸ்)
குகதீபன் (கனடா),
சங்கீதன் (கனடா),
கோபிகா (கனடா)

HONDA மீண்டும் மானிப்பாயில்
ரஞ்சிற் மோட்டோர்ஸ்
(ரஞ்சிற் றிப்பியரிங் &
சேவிஸ் சென்டர்)

யாழ் மக்களுக்காக
ரஞ்சிற் மோட்டோர்ஸ்
HONDA இணைந்து
வழங்கும் பண்டிகைக்கால
மாபெரும் சலுகைகள்

01.12.2019 – 15.01.2020 வரை எம்மிடம்
மோட்டார் சைக்கிளினை கொள்வனவு செய்து
குலுக்கல் முறையில் சோபா செற்றினை
பெற்றிடும் வாய்ப்பினை பெற்றிடுங்கள்

01.12.2012 முதல் கொண்டாவுடன் சேவை முகவராக இணைகின்றார்கள்
ரஞ்சிற் மோட்டார்ஸ் நிறுவனத்தினர்

எமது சேவைகள்
- HONDA மோட்டார் சைக்கிள் விற்பனை
- HONDA அசல் உதிரிப்பாக விற்பனை
- HONDA சேவிஸ் & மெக்கானிக்

[மோட்டார் சைக்கிள் விற்பனைக்குப் பிந்திய சிறப்பு சேவைகள், இலவச சேவைகள் மற்றும் உத்தரவாத சேவைகள்]



பண்டிகைக் கால சலுகைகள்

விலைக்கழிவு
தெரிவு செய்யப்பட்ட மோட்டார்
சைக்கிள்களுக்கு 15000/- வரை

லீசிங் மூலம் விசேட சலுகைகள்
- SLS தலைக்கவசம்
- ஜக்கெற்
- காப்புறுதி
- பதிவுக் கட்டணம்
- இலவச சேவைகள் 05
- இரண்டு வருட உத்தரவாதம்

காசு மூலமான சலுகைகள்
- SLS தலைக்கவசம்
- காப்புறுதி (3ம் நபர் காப்புறுதி)
- இலவச சேவைகள் 05
- இரண்டு வருட உத்தரவாதம்
- சிறப்பு பரிசில்கள்

சிறப்பு சலுகைகள்
எம்மிடம் பழைய மோட்டார் சைக்கிளைக் கொடுத்து புதிய
மோட்டார் சைக்கிளினைப் பெற்றிடும் வசதி
(நிபந்தனைக்குட்பட்டது)

Ranjit Motors
(RRSC Motors Engineers)


Sales & Parts
No- 311/A, Jaffna Road, Manipay.
இல- 311/A, யாழ் வீதி, மானிப்பாய்.
021 492 7627, 021 225 5228

Service & Parts
No- 14 Suthumalai Road, Manipay
இல- 14 சுதுமலை வீதி, மானிப்பாய்.
021 492 7337, 021 222 3111

Mobile: 077 310 7549, 076 833 9898
E.Mail: rrscmanipay@gmail.com
F.Book: Honda Ranjit Motors

AJA2272(16/17)

## மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 04 . 08 . 1951 | 07 . 12 . 2019 |

## தங்கராசா அருட்பிரகாசம்

தம்பசிட்டி பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், 3ஆம் யூனிற் பாரதி நகர் மல்லாவியை வசிப்பிடமாகவும் கொண்ட தங்கராசா அருட்பிரகாசம் 07.12.2019 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் விநாயகாவின் அன்புக் கணவரும், **Dr.**செந்தில்குமரன் (ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை / ஜஜமுகன் **Dental Care** - நெல்லியடி), மோகனதாஸ் (கனடா), ஜெனனி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தீபா, லோகேஸ்வரி, சுதர்சன் ஆகியோரின் அன்பு மாமனாரும், அஜீஷ், ஆதித்யா, சஜீஷ், சஜீனா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (09.12.2019) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பாலியாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**3ஆம் யூனிற்,**
**பாரதிநகர், மல்லாவி.**

(IN/32839)(11,17)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**மு/புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவு பெண்கள் தொழில் முயற்சியாளர் கூட்டுறவுச் சங்கம் (வ-து)**

**கீழ்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

01. **பதவி** - **பொதுமுகாமையாளர்**
குறியீட்டு இலக்கம் - 101 / 11
சம்பள அளவுத்திட்டம் (04 / 2018 இன்படி) - 17190 - 170X10 - 185X10 - 20740

**கல்வித்தகைமை**

அ. கூட்டுறவு ஊழியர் 12 வது சம்பளத்திட்டத்தில் முகாமை / மேற்பார்வை மட்டத்திலான பதவியில் ஆகக் குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம். அல்லது கூட்டுறவு ஊழியர் 13வது சம்பளத்திட்டத்திலான பதவியில் மேற்குறித்த வண்ணம் ஆகக் குறைந்தது 6 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக பட்டம் அல்லது அதற்கு சமமான தகைமை.

அல்லது

இ. கூட்டுறவு ஊழியர் உயர்தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் 01 வருட கால அனுபவம் க.பொ.த உயர்தரப்பரீட்சையில் 3 பாடங்களுடனான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் ஆகக் குறைந்தது 01 வருட சேவையாற்றிய அனுபவம்.

02. **பதவி** - **கணக்குப் பதிவாளர்**
குறியீட்டு இலக்கம் - 301 / 13
சம்பள அளவுத்திட்டம் (04 / 2018 இன்படி) - 16365 - 140X10 - 150X10 - 19265

**கல்வித்தகைமை**

அ. கூட்டுறவு பணியாளர் 14வது சம்பள திட்ட கணக்குப் பதவியொன்றில் இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவு பணியாளர் 15வது சம்பள திட்ட கணக்கு பதவியொன்றில் நான்கு (04) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ. க.பொ.த (சாதாரணதரம்) கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ் மொழி உட்பட 05 பாடங்களில் திறமைச்சித்தியுடன் இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் 06 பாடங்களில் சித்தியும் கூட்டுறவுச் சங்கமொன்றில் எழுதுவினைஞர் பதவியொன்றில் இரண்டு (02)வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

03. **பதவி** - **கிராமிய வங்கி முகாமையாளர்**
குறியீட்டு இலக்கம் - 205 / 13
சம்பள அளவுத்திட்டம் (04 / 2018 இன்படி) - 16365 - 140X10 - 150X10 - 19265

**கல்வித்தகைமை**

அ. கூட்டுறவு ஊழியர் 14வது சம்பளத் திட்டத்தில் கிராமிய வங்கி பிரிவு பதவியொன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம். அல்லது கூட்டுறவு ஊழியர் 15 வது சம்பளத் திட்டத்தில் கிராமிய வங்கிப்பிரிவு பதவியொன்றில் ஆகக்குறைந்தது 4 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ. கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திரத்துடன் கிராமிய வங்கிப் பகுதி இலிகிதர் பதவியில் ஆகக்குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்.

04. **பதவி** - **வெளிக்கள உத்தியோகத்தர்**
குறியீட்டு இலக்கம் - 209 / 13
சம்பள அளவுத்திட்டம் (04 / 2018 இன்படி) - 16365 - 140X10 - 150X10 - 19265

**கல்வித்தகைமை**

அ. அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிறுவனமொன்றில் சம்பந்தப்பட்ட துறையிலான 2 வருட கற்கை நெறி ஒன்றினை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

ஆ. கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப் பத்திரம் / க.பொ.த. சாதாரணதரம் / தே.க.பொ.த பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது எண் கணிதம் / வர்த்தக எண் கணிதம்'/ தூய கணிதம் / கணிதம் உடன் சிங்களம் / தமிழ்மொழி என்பவற்றை உள்ளடக்கி 4 திறமைச் சித்தியுடன் கூடிய 6 பாடங்களுடனான சித்தியுடன் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் ஆகக் குறைந்தது 2 ஆண்டு கால அனுபவம்.

05. **பதவி** - **சாரதி**
குறியீட்டு இலக்கம் - 312 / 15
சம்பள அளவுத்திட்டம் (04 / 2018 இன்படி) - 15545 - 130X10 - 140X10 - 18245

**கல்வித்தகைமை**

அ. 05ம் தர கல்விச் சான்றிதழுடன் மோட்டார் கார் சாரதி அனுமதி பத்திரத்துடன் ஆகக்குறைந்தது 01 ஆண்டு கால அனுபவம்.

**மேற்குறிப்பிட்ட 5 வகையான பதவிகளுக்குமான பொதுவான நியந்தனைகள்**

01. பதவியின் தகைமை:- நிரந்தரமானதாகும்.
02. வயதெல்லை:- 18-45 தற்போது சேவையிலுள்ள கூட்டுறவு பணியாளர்களுக்கு வயதெல்லை கணிக்கப்பட மாட்டாது.
03. பால் வகை:- பெண்கள் மட்டுமே விண்ணப்பிக்கமுடியும்.
04. விண்ணப்ப படிவங்களை சுயமாக தயாரித்து பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும்.
05. விண்ணப்ப படிவம் அனுப்ப வேண்டிய முடிவுத்திகதி:- 24.12.2019.
06. விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:-
**தலைவர்,**
**புது / பெண்கள் தொழில் முயற்சியாளர் கூட்டுறவுச் சங்கம்,**
**கைவேலி, புதுக்குடியிருப்பு மேற்கு.**
**புதுக்குடியிருப்பு.**
07. கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சுற்றுநிரூபத்திற்கு அமைவாக இதரப்படிகள் இயக்குனர் சபைத் தீர்மானத்திற்கு அமைவாக வழங்கப்படும்.

(CS 29779)(14.17)

**தகவல்:**
**கூட்டுறவுச் சேவையிலுள்ள, தலைவர்,**
**மு/புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவு பெண்கள் தொழில் முயற்சியாளர் கூட்டுறவுச்சங்கம்.**



# காட்டு யானை தாக்கி இரண்டு வீடுகள் சேதம்

வவுனியா,டிசெ.9

வவுனியா வடக்கு நெடுங்கேனி மருதோடைக் கிராமத்தில் காட்டு யானைகளின் தாக்குதலுக்கு இலக்காகி, இரண்டு வீடுகள் பகுதியளவில் சுதேமடைந்துள்ளன.

மருதோடை, காஞ்சுரமோட்டை மாதிரி கிராமத்தில் பெய்து வந்த அடைமழை காரணமாக வெள்ள இடரால் பாதிக்கப்பட்ட மக்கள் மருதோடை பாடசாலையில் தங்கியுள்ளனர்.

இந்த நிலையில் காட்டு யானைகள் நேற்று கிராமத்துக்குள் புகுந்து அங்கிருந்த விவசாய நிலங்களையும் சேதப்படுத்தியுள்ளன.

இது தொடர்பாக மருதோடை கிராம அலுவலரிடம் பொதுமக்கள் தொடர்பு கொண்டு தெரிவித்துள்ளனர்.

(க-70)

# சிறப்பாக இடம்பெற்ற பூநகரி பிரதேச கலாசார விழா

கிளிநொச்சி,டிசெ.9



கிளிநொச்சி பூநகரி பிரதேச கலாசார விழா அண்மையில் பூநகரி தொழிற் பயிற்சி மண்டபத்தில் பிற்பகல் 3 மணியளவில் இடம்பெற்றது.

பூநகரி பிரதேச செயலர் கிருஸ்ணேந்திரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிளிநொச்சி மாவட்டச் செயலர் கலந்து கொண்டார்.

நிகழ்வில் பூநகரி பிரதேச மக்களின் கலாசார நிகழ்வுகள் இடம்பெற்றன. கலாபூசணம் பூநகர் பொன்.தில்லைநாதன் எழுதிய 'கிளை தவறிய இலைகள்' நூல் தொகுப்பும் வெளியிடப்பட்டது.

மேலும் நிகழ்வில் கண்டாவளை பிரதேச செயலர் த.பிருந்தாகரன், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் திருமதி பி ஜெயராணி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

(ஐ-6)



தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் ஆரம்ப பிரிவு மாணவர்களின் பாவனைக்கு அதி விவேகப் பலகை(smartbord) கையளிக்கப்பட்டது. கல்லூரி யின் பழைய மாணவர்களால், கல்லூரி.அதிபரிடம் அண்மையில் பலகை கையளிக்கப் பட்டது. (க-63)





# கூட்டுறவாளர் மதிப்பளிப்பு

கொடிகாமம்,டிசெ.9

தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 60 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு கூட்டுறவாளர் மதிப்பளிப்பு நிகழ்வு சங்க மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

கூட்டுறவுச் சங்கத் தலைவர் இ.அ.ஆனந்தராசா தலைமையில் நிகழ்வு நடைபெற்றது.

சங்கம் ஆரம்பித்த காலத்திலிருந்து இன்றுவரை கூட்டுறவுப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் அ.திருநாவுக்கரசு மற்றும் இராஜரட்ணம் ஆகியோர் மதிப்பளிக்கப்பட்டனர்.

60 ஆம் ஆண்டு நிறைவை கேக் வெட்டிக் கொண்டாடினர். தொடர்ந்து சங்க வளாகத்தில் மரநடுகை நிகழ்வும் இடம் பெற்றது. (ஐ-159)



# யாழ்.குருநகர் கடற்கரையில் துப்புரவுப் பணி முன்னெடுப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.9

யாழ்ப்பாணம் குருநகர் கடற்கரையோரமாகக் காணப்பட்ட குப்பைகள் அகற்றப்பட்டு துப்புரவு செய்யப்பட்டது. இந்த துப்புரவுப் பணி இலங்கை இராணுவத்தினர் மற்றும் அந்தப் பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் ஆகியோரால் மேற்கொள்ளப்பட்டது. நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்டச் செயலர்,தன்னார்வப் பேரிடர் மேலாண்மை அமைப்பு மற்றும் குருநகர் மீனவர் சங்க உறுப்பினர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ஐ)



# ஒளிவிழா நிகழ்வு

வவுனியா டிசெ. 9

வவுனியா துட்டுவாகை மற்றும் அடப்பன்குளம் முன்பள்ளிகளின் ஒளிவிழா நிகழ்வு அடப்பன்குளம் ஆலய வளாகத்தில் அண்மையில் இடம் பெற்றது.

செட்டிகுளம் தென்னிந்தியத்திருச்சபையின் ஏற்பாட்டில் முன்பள்ளிகளின் முகாமையாளர் அருட்பணி. யூட் எழில் அமுதன் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக செட்டிகுளம் பிரதேச மருத்துவமனையின் மருத்துவர் டி.ஆர். கமலத்தே, சிறப்பு விருந்தினராக நன்சிகா கேதீஸ் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன. சுமார் 30 ஆயிரம் ரூபா பெறுமதியான கற்றல் உபகர ணங்களும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டன. (ஐ-104)



# பரிசளிப்பும் ஒளிவிழாவும்





கோப்பாய்,டிசெ.9

கோப்பாய் வடக்கு றோ.க.த.க பாடசாலையின் 2019 ஆம் ஆண்டுக்கான பரிசில் விழாவும், ஒளிவிழாவும் அண்மையில் இடம்பெற்றன.

பாடசாலை அதிபர் பி.ஜெயரட்ணராஜா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் நா.சிவநேசன், நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர் செ.பிரதாப், மதிப்புறு விருந்தினராக வலி.கிழக்குப் பிரதேச சபை உறுப்பினர்கள் க.தர்மலிங்கம், திருநாவுக்கரசு. கோப்பாய் பங்குத் தந்தை அருட்திரு அன்ரன் மத்தியூஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர். (க)


## தொழில்சார் கற்கைகள் நிறுவனம்
## திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

தொலை தொடர்கல்வி நிலையம்
பட்ட, பட்ட மேற்படிப்பு கற்கைகளுக்கான
புதிய அனுமதிக்கு விண்ணப்பம் கோரல் - 2019

**பட்டக்கற்கை நெறிகள் (Top up, 03 வருடங்கள்)**

B.A in English
B.A in History
B.A in Political Science
B.B.A in Management (Online)
B.Sc in MLT/ MLS (Lab)
B.Ed in Education
B.Sc in Computer Science
B.Sc in ICT
B.Sc in Nursing
BSMS
B.Sc in Psychology
BA in Tamil
BA in FineArts

**பட்ட மேற்படிப்பு கற்கை நெறிகள்**

MA
MSc
MBA
M.Ed, M.FA

UGC Approved

**முது தத்துவமாணி கற்கை நெறிகள்**

M.Phill, Ph.D (நிபந்தனைக்குட்பட்டது)

குறிப்பு:-

1. கற்கைகள் யாவும் பல்கலை. மானிய ஆணைக்குழுவின் அங்கீகாரமுடையது
2. க.பொ.த உயர்தர பரீட்சை பெறுபேறுகளை எதிர்பார்க்கும் மாணவர்கள். **HND, NVQ** மாணவர்கள் உத்தியோகத்தர்கள் விண்ணப்பிக்க முடியும்.
3. ஆய்வுச் சுருக்கம். ஆய்வுக்கட்டுரை , ஆய்வுத்தாள்கள் கற்கைகளுக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.
4. பட்டக்கற்கையினை பூர்த்தி செய்த மாணவர்கள் Masters ற்கு உடன் பதிவினை மேற்கொள்ள முடியும்.

விண்ணப்ப முடிவுதிகதி : 15.12.2019

கற்கைத்துறைகளில் ஆர்வமுடைய விண்ணப்பதாரிகள் விண்ணப்பப் படிவம். சுயவிபரம் என்பவற்றுடன் அடையாள அட்டைப்பிரதி. பிறப்புச் சான்றிதழ்பிரதி. புகைப்படம்(**03**). தகைமை ஆவணங்கள் என்பவற்றினை **15.12.2019** இனுள் அலுவலகத்தில் அல்லது **degreeinfo08@gmail.com** என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**மாபெரும் கருத்தரங்கு**
15-12-2019
ஞாயிற்றுக்கிழமை
காலை 9.30மணி
இடம் : Tilko City Hotel
(முற்பதிவு அவசியம் அனுமதி இலவசம்)

**IPS**
கலாநிதி .N.தணிகாசலம்பிள்ளை
முன்னாள் கல்விப்பணிப்பாளர்.
பட்ட, பட்ட மேற்படிப்பு நிகழ்ச்சித்திட்டம்
யாழ் பல்கலைக்கழகத்திற்கு
அண்மையில், திருநெல்வேலி.
TP:- 021 434 0229, 077 602 1794
CS10040(16/17)














பழனித்துரை தர்மகுமாரன்

# பால்நிலை சமத்துவம் காலத்தின் தேவை



இறைவனின் படைப்புக்களில் ஆண், பெண் அனைத்து உயிரிகளிலும் உருவாக்கப்பட்டுள்ளது. உலக இயக்கம் தடையின்றி சங்கிலித் தொடராக இயங்கிக் கொண்டும் வளர்ந்து கொண்டும் வருகின்றது.

மனிதப் படைப்பிலும் ஆண், பெண் என்று இருபாலரும் உள்ளனர். இங்கு ஒருவரில் இருந்து இன்னொருவரைப் பிரித்துக் காட்டிவிட முடியாத அளவுக்கு இருவரது வகிபாகமும் முக்கியமானதாகும்.

ஆனால் சில கலாசார அமைப்புக்குள் பெண்களை மென்மையானவர்களாகவும் வலு அற்றவர்களாகவும் கருதி வீட்டுக்குள் முடக்கி வைத்த காலம் முடிவுற்று பெண்கள் தாமும் வலுவுள்ளவர்கள், சிந்தனைமிக்கவர்கள் என்பதனை இன்றைய சமூக அமைப்பில் பறைசாற்றி வருகின்றனர்.

ஆனாலும் பால்நிலை சமத்துவம் என்பது பொருளாதாரம், சமயம், அரசியல், கலாசாரம் என்பவற்றில் தீர்மானிக்கப்படுகின்றது. பால்நிலை சமத்துவத்தில் செல்வாக்கு செலுத்தும் பொறுப்புக்களும் நடத்தைக் கோலங்களும் பண்பாட்டு ரீதியாகவும் சமூக ரீதியாகவும் கட்டியெழுப்பப்படுகின்றன.



இவை மேலும் குடும்பம், பாடசாலை, சமயம், கலாசாரம் ஆகியவற்றால் உறுதிப்படுத்தப்படுகின்றன. குடிமக்களாகத் தங்களைத் தயார்ப்படுத்தும் ஆண், பெண் ஆகியோர் சமூகத்தில் அவர்களின் வகிபங்கு, சமுதாயப் பற்று, சமூகப்பொறுப்பு, சமூக வாழ்வின் உரிமை என்பவற்றை நடைமுறைப்படுத்தும்போது ஆண், பெண் சமூகமயமாக்கல் வலுவடைகின்றது.

பாலியல் தொடர்புடைமைகள் தொடர்பாக சமூகத்தில் ஆண், பெண் ஆகிய இருவரும் சமமாக மதிக்கப்பட்டு, போற்றப்பட்டு, பாதுகாக்கப்பட வேண்டியவர்கள் எனவும் அவர்கள் ஒருவருக்கு ஒருவர் ஒற்றுமையாகவும் விட்டுக் கொடுப்புடனும் நெகிழ்ச்சி போக்குடனும் பொறுப்புடனும் அன்புடனும் முன்னேற்றத்தில் பங்கு கொள்ள வேண்டியவர்கள் எனவும் இளம் பருவத்தில் தெரிந்து கொண்டு வளர்த்துக் கொள்ள முனைய வேண்டும்.

பாலியல் என்பதும் பால்நிலை என்பதும் வேறுவேறாகக் காணப்பட்டாலும் அது ஒன்றில் ஒன்று தங்கியே காணப்படுகின்றது. பால் நிலை என்பது ஆண், பெண் என்று வேறுபடுகின்றது.

உடலமைப்பு, நடத்தைக் கோலங்கள், ஆற்றல்கள், எதிர்கால இலக்குகள், ஆளிடைத் தொடர்புடமைகள், பண்புகள், உணர்வுகள் போன்ற தன்மைகளில் ஏற்படும் மாற்றங்களே பாலியல் இயல்புகள்.

ஆண்வேறு பெண்வேறு எனப் பாகுபாடு காட்டாது இருவரது தேவைகளும் சேவைகளும் சமஅளவில் பாதுகாத்துப் பேண வேண்டும். ஒருவரது குடும்பம், பெரியோர், சமூகம், ஆன்மிகத்தளங்கள் என்பவற்றில் ஆண்களுக்கு எனவும் பெண்களுக்கு எனவும் வழங்கப்படும் விழுமியங்கள், பாரம்பரியங்கள், மனப்பாங்குகள் என்பவற்றில் உயர்ந்த மாற்றத்தை ஏற்படுத்தி சமத்துவ சமூகமயமாதல் உருவாக்க வேண்டும்.

பெண்கள் இன்றைய நிலையில் தொழிலில் ஈடுபடுகின்றனர். உயர் பதவிகளில் இருக்கின்றனர், சிந்தனைமிக்க சமூக செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். உடல் களைப்பு, உள அழுத்தம், சமூக சவால்கள் என்பவற்றை அன்றாடம் எதிர்கொள்கின்றார்கள். இதில் இருந்து தம்மை விடுபட வைக்க ஆசுவாசப்படுத்த குடும்பத்தையே பயன்படுத்துகின்றனர்.

கணவன் அன்பானவராகவும் பிரச்சினைகளை உணர்ந்து கொள்ளக் கூடியவராகவும் மனைவியின் மனநிலையை உணர்ந்து விட்டுக் கொடுத்தும் தட்டிக் கொடுத்தும் வாழும் கணவர்மார் உள்ள குடும்பம் ஆரோக்கியமானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் காணப்படும். அந்தச் சூழலில் வளருகின்ற பிள்ளைகளும் சமூக கலாசாரப் பண்பாட்டுடன் நல்ல குடிமகனாக உருவாகின்றனர்.

பெண்கள்தான் குடும்பத்தில் வேலை செய்ய வேண்டும் என்ற நிலமையை மாற்றி ஆண்களும் வீட்டு வேலைகளில் ஈடுபடவேண்டும். இல்லையேல் பிரச்சினைகள் தோற்றம் பெற்று குடும்பம் சின்னாபின்னமாக்கப்படும்போது எதிர்காலத்தில் சிறப்பாக வாழ வேண்டிய சிறார்களின் சிந்தனை சிதைக்கப்பட்டு வன்முறையாளர்களாக தோன்றுவதற்கு வழி அமைந்துவிடும்.

இதனைஇல்லாது செய்வதற்குப் பாடசாலை மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். தாயிற் சிறந்தொரு கோயிலும் இல்லை. தந்தை சொல் மிக்க மந்திரமில்லை என்பதற்கு அமைவாக தாயை மதித்தல், சகோதரியை பாதுகாத்தல், சமமாகவும் பொறுப்புடனும் கவனித்தல் இதனை குடும்ப ரீதியாக வளர்த்தல்.

பாடசாலை ரீதியாகப் பெண்களின் தலைமைத்துவத்துக்கு முன்னுரிமை கொடுத்தல், சிந்தனைகளை முன்னெடுத்தல், பெண்களால் முடியாது இயலாது என்ற வார்த்தைப் பிரயோகத்தை பாவிக்காதுவிடல், ஆண், பெண் சமத்துவத்தை தெளிவுபடுத்தி பெண்ணை முன்னிறுத்திக் காட்டல், பெண்களின் ஆளுமையை, திறமையை வெளிப்படுத்துவதற்கு களம் அமைத்துக் கொடுத்தல்.

இருந்தபோதும் பாலியல் என்பது இயற்கையாகவே ஆணும் பெண்ணும் உடல் , உள சமூக ரீதியாக வேறுபட்டவர்களாக காணப்படுகின்றனர். இங்கு பாதிப்பு கூடியவர்களாக பெண்களின் தொகுதி அமைப்பு காணப்படுகின்றது. இதனை வைத்து பெண் சமத்துவத்தை தீர்மானிக்க முடியாது.

எமது கலாசாரப் பண்பாட்டை உள்ளத்திலிருத்தி ஒருவனுக்கு ஒருத்தி என்ற மனப்பாங்குடன் அன்புடன் ஒற்றுமையாகச் சமத்துவத்துடன் வாழ்ந்தால் எமது இனம் சுபீட்சமடையும். பெண்கள் வன்முறைக்கு உட்படுகின்றார்கள் என்ற பதம் பொய்ப்பிக்கப்படும்.

இந்த வன்முறை கலாசாரத்துக்கு முக்கிய காரணங்களான போதைப் பொருள் பாவனை, பொருத்தமற்ற அல்லது தகுதியற்ற சின்னத்திரைகள், திரைப்படங்களைப் பார்த்தல், பொருத்தமற்ற வலைத்தளங்களைப் பாவித்தல், சமூகத்துக்கு ஒவ்வாத கீழ்த்தரமான படங்களைப் பார்த்தல் இதற்கு தூண்டுதலாக அமைகின்றது. எது எவ்வாறு அமையினும் தமிழருக்கு என்ற கலாசாரம், பண்பாடு, தனித்துவம் என்பவற்றில் பெண்கள் கண்களாகவே பாதுகாக்கப்படுகின்றனர். போற்றப்படுகின்றனர். ஒரு சிலரின் மிலேச்சத்தனமான செயற்பாடுகள் ஒட்டுமொத்த ஆண்களையும் வன்முறையாளர்களாக நோக்கத் தோன்றுகின்றது.

இன்றைய நிலையில் ஆண்களின் முன்னேற்றத்தில் பெண்களும், பெண்களின் முன்னேற்றத்தில் ஆண்களும் முக்கிய பங்குதாரர்களாகஉள்ளமைஉண்மையே. இருந்தபோதும் பெண் இனத்தின் வளர்ச்சி அதிகரித்துள்ளமை இதற்குச் சான்றாகும். இந்த வளர்ச்சிக்கு ஆண்களின் பங்களிப்பு இன்றியமையாததொன்றாகக் காணப்படுகின்றது.

ஆனால் பெண் இனத்துக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல்கள், அதிகாரத் துன்புறுத்தல்கள் என்பன சில இடங்களில் ஆங்காங்கே காணப்படுகின்றன. அதனை ஆண்களும் பெண்களும் இணைந்தே கட்டுக்குள் கொண்டுவந்து பாலியல் சமத்துவத்தைச் சமூகமயமாக்க வேண்டும்.

கட்டுரையாளர்:
ஆசிரியர்,
உடுவில் மகளிர் கல்லூரி

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : .news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## பச்சை மண்ணும் சுட்ட மண்ணும்

பிரிட்டிஷ்காரர்கள் இலங்கையைக் கைப்பற்ற முன்னர் இந்தத் தீவில் மூன்று இராச்சியங்கள் இருந்தன. மொழியால், கலாசாரத்தால் அவை வேறுபட்டிருந்தன. பிரிட்டிஷ்காரர்கள் தங்கள் ஆட்சியை இலகுபடுத்த அவற்றை ஒன்றாக்கினர். இந்தத் தீவிலிருந்து வெளியேறும்போது, சிங்களவர்களிடம் ஆட்சியை ஒப்படைத்துவிட்டுச் சென்றனர்.

அன்றிலிருந்து இந்தத் தீவு பெயரளவில் ஒன்றுபட்டிருந்தாலும், நடைமுறையில் பிளவுபட்டதாகவே இருக்கின்றது. காலம் காலமாக சிங்களவர்கள், தமிழர்கள் இடையே இன முரண்பாடு தோன்றிக் கொண்டேதான் இருக்கின்றது. இரு இனத் தலைவர்களும் பேச்சுக்கள் நடத்தினாலும், ஒப்பந்தங்கள் செய்தாலும் அவையெல்லாம் செயலிழந்து போகின்றமைதான் வழமையாகி விட்டது.

30ஆண்டு காலப் போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டாலும், நாட்டில் அமைதியை, சமாதானத்தை, நல்லிணக்கத்தை நிலைநாட்ட முடியவில்லை.

தமிழர்களுக்கு ஏதாவது வழங்கினால் சிங்களவர்கள் கோபித்துக் கொள்வார்கள். அது தமது வாக்கு வங்கியைப் பாதிக்கும் என்று நாட்டின் தலைவர்கள் பயந்து த்மிழர்களுக்கு எதையும் வழங்கவில்லை. வழங்கவும் தயாராக இருக்கவில்லை.

இப்படியானதொரு சூழலில் தனிச் சிங்கள வாக்குகளால் மாத்திரம் ஆட்சிப் பீடமேறிய கோத்தபாய, சிங்கள மக்களின் விருப்பத்துக்கு மாறாக எதையும் தமிழர்களுக்கு வழங்க முடியாது என்று பகிரங்கமாகக் கூறிவிட்டார். ஆனால் அரசியலில் ஊறிப் பழுத்த கோத்தபாயவின் அண்ணன் முன்னாள் அரச தலைவரும் தற்போதைய தலைமை அமைச்சருமான மகிந்த ராஜபக்சவும் இதே கருத்தை வெளியிட்டுள்ளார்.

பெரும்பான்மை மக்கள் விரும்பாத, அவர்களின் அனுமதியில்லாத எந்தவொரு தீர்வையும் முன்வைக்க முடியாது என்று தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் இந்த நாட்டில் தம்மைத்தாமே ஆளுவதற்கு உரித்துடையவர்கள். அந்த உரித்தைக் கேட்கின்றார்கள். ஆனால் சிங்களவர்களோ, தமிழர்களை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்கவேண்டும் என்றே விரும்புகின்றார்கள். அடக்கி ஆள்வதற்கு முனைகின்றார்கள். இந்த இரண்டு வெவ்வேறு துருவ நிலைப்பாட்டுக்கு மத்தியில் இணக்கம் ஏற்படுவதாக இல்லை.

இவ்வாறானதொரு நிலையில், சிங்களவர்களின் அனுமதியுடன் அவர்கள் விரும்புகின்ற தீர்வு, தமிழர்கள் அடிமைகளாக நாட்டில் வாழ்கின்றமையை ஒத்ததாகவே இருக்கும். அதனைத் தமிழர்கள் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. அதற்கு இணங்கவும் போவதில்லை.

இப்படியான சூழலில் தொடர்ந்தும் சிங்களத் தலைவர்களின் எண்ணங்களில் மாற்றங்கள் ஏற்படாத வரையில், சிங்களவர்கள் இதே நிலைப்பாட்டில்தான் தொடர்ந்தும் இருக்கப் போகின்றார்கள் என்றால், தமிழர்கள் தங்கள் உரித்துக்காகப் போராடத்தான் போகின்றார்கள்.

சுட்டமண்ணும் பச்சை மண்ணும் ஒட்டாது. அதைப் போன்றுதான் தமிழர்களும், சிங்களவர்களும். பேசாமல் அவர்களின் வழியில் அவர்களை விடுவதே நல்லிணக்கத்துக்கு வழி.

# இனப்பிரச்சினைத் தீர்வுக்கான காலம் எப்போது கனியும்?

■ சேரலாதன்

தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டியதன் அவசியத்தை கூட்டமைப்பின் தலைவரான சம்பந்தன் மீண்டும் வலியுறுத்தியுள்ளார். தம்மைச் சந்தித்த இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவரிடம் இதனைத் தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினை நீண்டகாலமாகப் புரையோடிப் போன நிலையில் காணப்படுகின்றது. நாடு தொடர்ந்தும் அவலங்களை எதிர்கொண்டு வருகின்றது. சுமார் 30 ஆண்டு காலமாக நீடித்த கொடிய போருக்கும் இதுவே காரணமாக அமைந்துவிட்டது. போரின் வடுக்களும் ஏற்பட்ட தாக்கங்களும் இன்னமும் முற்றாக மறைந்து விடவில்லை.

எந்த நோக்கத்துக்காகத் தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்திப் போராடினார்களோ அந்த நோக்கம் நிறைவேறாமல் போனதுடன் தமிழர்களுக்குப் பெரும் பாதிப்பும் ஏற்பட்டது.

போர் ஓய்ந்துவிட்டாலும் அவர்களது வாழ்வில் ஏற்பட்ட அவலங்களும் சோதனைகளும் ஓயவில்லை. இனப்பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்குமென்ற நம்பிக்கை தமிழர்கள் மத்தியிலிருந்து மெல்ல மெல்ல அகன்று வருகின்றது. நல்லாட்சி அரசின் காலத்தில் தமக்கு ஏதாவதொரு தீர்வு கிடைக்குமென்ற நம்பிக்கை தமிழ் மக்களிடம் காணப்பட்டது.



தமிழர்களின் மிகப் பெரிய சக்தியான தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசுக்குச் சகல விதத்திலும் ஆதரவைத் தெரிவிக்கின்ற நிலைப்பாட்டில் இருந்தது. ஒரு கட்டத்தில் அப்போதைய அரச தலைவரால் அரசியல் குழப்பமொன்று ஏற்படுத்தப்பட்டு மகிந்த ராஜபக்ச தலைமை அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

ரணில் விக்கிரமசிங்கவின் நிலை அப்போது கேள்விக்குறியாக மாறிவிட்டிருந்தது. இந்த வேளையில் கூட்டமைப்பு ஆதரவை வழங்கியதன் காரணமாக ரணில் மீண்டும் தலைமை அமைச்சராக முடிந்தது.

ஆனால் ரணில் தலைமையிலான அரசு தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு எதையும் வழங்கவில்லை. ரணில் வழங்கிய வாக்குறுதிகள் யாவும் வாக்குறுதிகளாகவே இருந்துவிட்டன.

ஆனாலும் நடைபெற்று முடிந்த அரச தலைவர் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளரை கூட்டமைப்பு ஆதரித்தது. இதனால் வடக்கிலும், கிழக்கிலும் உள்ள தமிழர்களின் வாக்குகள் அவருக்கே கிடைத்தன.

சஜித் வெற்றிபெற்றால் தமிழர்களுக்கு ஏதாவது கிடைக்குமென்ற நம்பிக்கை தமிழர்களிடையே நிலவியதையும் மறுக்க முடியாது. ஆனால் சஜித்தால் தோல்வியைத் தழுவவே முடிந்தது. இதில் கூட தமிழர்களுக்குப் பெரும் ஏமாற்றமே கிடைத்தது.

இந்த நிலையில் நாட்டின் புதிய அரச தலைவரால் தமிழர்களுக்குத் தீர்வை வழங்க முடியுமா? என்ற கேள்வி எழுவதைத் தடுக்க முடியவில்லை. ஏனென்றால் இந்தக் கேள்விக்குப் பல காரணங்களைக் கூற முடியும். நடைபெற்று முடிந்த அரச தலைவர் தேர்தலில் தமிழ் மக்கள் புதிய அரச தலைவருக்குத் தமது வாக்குகளை அளிக்கவில்லை. அவருக்கு எதிராகப் போட்டியிட்டவருக்கே தமது வாக்குகளை அமோகமாக அளித்தனர்.

கடந்த தடவை இடம்பெற்ற அரச தலைவர் தேர்தலிலும் இவ்வாறானதொரு நிலையே காணப்பட்டது. மகிந்த ராஜபக்ச தோல்வியைத் தழுவினார். தற்போது தம்பி அரச தலைவராகவும் அண்ணன் தலைமை அமைச்சராகவும் உள்ளனர்.

இவர்கள் இருவருமே தமிழர்களின் ஆதரவைப் பெறாதவர்கள் என்பதால் தமிழர்கள் மீது இயல்பாகவே வெறுப்பைக் கொண்டிருப்பார்களென்பதை மறுத்துவிட முடியாது. இது தமிழர்களுக்குத் தீர்வை வழங்குவதில் ஒரு தடைக்கல்லாகவும் அமைந்துவிடக் கூடும்.

பெரும்பான்மை சிங்கள மக்களின் விருப்பங்களையும் உணர்வுகளையும் புறம்தள்ளிவிட்டு தமிழர்களுக்கு அவர்கள் விரும்புவது போன்று தீர்வை வழங்க முடியாதென அரச தலைவரான கோத்தபாய பகிரங்கமாகவே அறிவித்துவிட்டார்.

மகிந்த ராஜபக்சவும் இதைப்போன்றதொரு கருத்தையே வெளியிட்டுள்ளார். இந்த நாட்டின் முக்கியமான பதவிகள் இரண்டிலும் அமர்ந்திருப்பவர்கள் கூறிய வார்த்தைகளை நாம் சாதாரணமாக எடுத்துவிட முடியாது.

அதேவேளை சிங்களவர்களின் விருப்பத்துடன் தமிழர்களுக்குத் தீர்வு கிடைக்குமென்பது ஒருபோதுமே இயலாத விடயமாகும். சிங்கள அரசியல்வாதிகள் தாம் தப்பித்துக்கொள்வதற்காகவே சிங்கள மக்கள் மீது பழியைப் போடுகின்றனர். ஆனால் சிங்கள மக்களின் மனங்களில் இனவாதமெனும் விஷத்தை விதைப்பவர்கள் இந்த சிங்கள அரசியல்வாதிகளே என்பதை நாம் மறந்துவிட முடியாது.

நடந்து முடிந்த அரச தலைவர் தேர்தலில் சிங்கள மக்கள் மத்தியில் தவறான பரப்புரைகள் மேற்கொள்ளப்பட்டன. ஐக்கிய தேசியக் கட்சியும் சஜித் பிரேமதாசவும் சிங்கள மக்களின் விரோதிகளெனவும் அவர்கள் தமிழர்களுக்குச் சார்பானவர்கள் எனவும் பரப்புரைகள் மேற்கொள்ளப்பட்டன. சஜித்தின் தோல்விக்கு இதுவுமொரு பிரதான காரணமாக அமைந்துவிட்டது.

தேசிய இனப்பிரச்சினை தீர்வு காண முடியாத ஒன்றல்ல. இதை தீர்வு காணாத நிலைக்குள் தள்ளிவிட்டதில் இந்த நாட்டின் அரசியல்வாதிகளுக்குப் பெரும் பங்கு உள்ளது.

சிங்கள, தமிழ் அரசியல்வாதிகள் ஒன்றாக அமர்ந்து விட்டுக்கொடுப்புடனான மனப்பான்மையுடன் பேசி நல்லதொரு முடிவை எட்டும் போது இனப்பிரச்சினை தானாகவே மறைந்துபோய்விடும். ஆனால் அதற்குரிய காலம் விரைவில் கனியுமா? என்பதுதான் இன்றுள்ள கேள்வியாகும். ■

# ஆப்கானிஸ்தானில் அமைதி கிட்டட்டும்!

ஆப்கானிஸ்தான் பிரச்சினைக்கு அமைதியான தீர்வு காண்பதில், தேசிய அளவிலும் பிராந்திய அளவிலும் உலகளாவிய அளவிலும் முயற்சிகள் நடக்கின்றன. போரிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்வதில் அமெரிக்கா தீவிர முனைப்பு காட்டிவரும் நிலையில், கணிக்க முடியாத அதிபராலும், தீவிரமாக இயங்கிவரும் சிறப்புத் தூதர் ஜால்மே காலில்ஸாதாலும் இந்த விவகாரம் உச்சமடைந்துவருகிறது. தற்காலிக போர் நிறுத்த ஒப்பந்தம் ஆப்கானிஸ்தான் மற்றும் தலிபான்களுக்கு இடையே ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பதற்றத்துடன் இருக்கும் அமெரிக்காவுக்கும் அதீத நம்பிக்கை கொண்ட பாகிஸ்தானுக்கும் இடையில் அவசர கோலத்தில் உருவாகியிருக்கும் ஒப்பந்தத்தின் மூலம், ஆப்கன் அரசு, அந்த நாட்டின் அரசியல் வட்டாரம், ஜனநாயக அமைப்பு ஆகியவை ஏமாற்றத்துக்கு உள்ளாகவிருக்கின்றன. பதற்றம், பயம், இறுமாப்பு ஆகியவற்றின் மூலம் ஓர் அமைதி ஒப்பந்தம் ஏற்படுத்தப்படலாம். ஆனால், அப்படியான ஓர் ஒப்பந்தம், அனைத்துத் தரப்பையும் உள்ளடக்கிய, நீடித்து நிலைக்கக்கூடிய அமைதியைக் கொண்டுவராது.

ஒரு பிரச்சினையின் முக்கிய காரணிகளைக் களைவதுதான், நிலையான அமைதித் தீர்வை ஏற்படுத்துவதற்கான அடிப்படை நோக்கமாக இருக்க முடியும். ஆப்கான் பிரச்சினையின் வேர்கள் அடிப்படையில் மத, இன ரீதியிலானவை. வெளிக்காரணிகளும் உள்ளன. ஆப்கான் அரசு மற்றும் சமூகத்தின் அடையாளம், சட்டபூர்வத் தன்மை, இறையாண்மை ஆகியவற்றின் அடிப்படையில் இந்தப் பிரச்சினை நடந்துவருகிறது.

பஷ்தூன்களின் ஆதிக்கம் கொண்ட நாடாக ஆப்கான் இருக்க வேண்டுமா? அல்லது பன்முகத்தன்மை கொண்ட ஒரு நாடாக இருக்க வேண்டுமா? நாட்டின் உண்மையான அடையாளம் என்பது இஸ்லாமிய, மதச்சார்புள்ள அரசா அல்லது அரசியல் சட்ட குடியரசா? பாகிஸ்தானின் கைப்பாவையாக இருக்க வேண்டுமா? அல்லது சுதந்திரமான நாடாக இருக்க வேண்டுமா?

**அமைதி தராத ஒப்பந்தங்கள்**

1979ஆம் ஆண்டில் ஆப்கன் பிரச்சினை தொடங்கியது முதலே, எண்ணற்ற அமைதி முயற்சிகளும் ஒப்பந்தங்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இடதுசாரி அதிபரான நஜிபுல்லா அஹ்மத்ஜாயி அரசு, புர்ஹானுதீன் ரப்பானி தலைமையிலான முஜாகிதீன் அரசு, மேற்கத்திய நாடுகளின் ஆதரவுடன் அமைந்த ஹமீத் கர்ஸாய் மற்றும் அஷ்ரப் கனியின் அரசுகள் அதிகாரப் பகிர்வு, ஜனநாயக அரசு நிர்வாகம் ஆகியவற்றின் அடிப்படையில் அரசியல் தீர்வு காண முயன்றன. ஆனால், அதில் தோல்வியைச் சந்தித்தன.

1994ஆம் ஆண்டில் ஆட்சிக்கு வந்த தலிபான் அரசு, முழு வெற்றியைப் பெறுவது, தூய்மையான இஸ்லாமிய அரசை நிறுவுவது ஆகிய நோக்கங்களில் உறுதியுடன் இருந்தது. தலிபான் அமைப்பு என்பது அந்நிய ஆக்கிரமிப்புக்கு எதிராகப் போராடும் தேசியவாதக் கிளர்ச்சி அமைப்பு அல்ல. மாறாக, பாகிஸ்தானின் புவி வியூகக் கொள்கைகளுக்கு ஏற்ப ஓர் அரசியல் சூழலை மீண்டும் ஏற்படுத்துவதில் உறுதியுடன் செயற்படும் ஒரு சித்தாந்த இயக்கம். ஆப்கனில் பன்னாட்டு படைகள் இருப்பது, தலிபான் அமைப்பின் நோக்கத்துக்கு முட்டுக்கட்டையாக இருக்கிறது.

முதன்மைக் கேள்விகள் இவைதான்: தூய்மையான இஸ்லாமிய அரசை நிறுவும் தாலிபானின் லட்சியமானது, பன்மைத்துவம், அதிகாரப் பகிர்வு, தேர்தல் அடிப்படையிலான அரசியல் ஆகியவற்றுக்குப் பொருத்தமானதா? இறையாண்மை கொண்ட, சுதந்திரமான ஆப்கானிஸ்தானைப் பாகிஸ்தான் ஏற்றுக்கொள்ளுமா? தேசக் கட்டுமானம், ஜனநாயகமயமாக்குதல், பன்மைத்துவம் ஆகியவற்றில் நிகழ்த்தப்பட்டிருக்கும் பலவீனமான சாதனைகளின் அடிப்படையில் அமைதித் தீர்வுக்கான முயற்சிகள் கட்டமைக்கப்படுமா? எந்த ஓர் அமைதி ஒப்பந்தத்தின் நிலைத்தன்மையையும் உறுதிசெய்வதற்கான உத்தரவாதம் இருக்குமா?

1979 மார்ச்சில், 'ஒபரேஷன் சைக்ளோன்' மூலம் பாகிஸ்தானின் உதவியுடன் முஜாஹிதீன்களுக்கு ரகசியமாக ஆதரவளிக்கத் தொடங்கியது அமெரிக்கா. ஆப்கன் விவகாரத்தில் ஒரு தரப்பாக அமெரிக்கா இன்றுவரை தொடர்கிறது. எனினும், பெரும்பாலும் ஆழ்ந்த பரிசீலனையின் அடிப்படையில் அல்லாமல், உள்ளுணர்வின் அடிப்படையிலேயே அமெரிக்காவின் ஆப்கன் கொள்கை இருக்கிறது. அமெரிக்காவின் தற்போதைய அமைதி முயற்சிகள்கூட அந்த நாட்டின் சுயநலன் சார்ந்தும், அடிக்கடி மாறும் அதன் மனநிலையின் அடிப்படையிலும்தான் எடுக்கப்படுகின்றனவே தவிர, ஆப்கனின் கள நிலவரத்தின் அடிப்படையில் - குறிப்பாக ஆப்கன் அரசு மற்றும் மக்களின் பங்கு என்ன என்பதன் அடிப்படையில் அல்ல. ஆப்கன் விவகாரத்தில், நிபந்தனையின் அடிப்படையிலான முன்னெடுப்புகள் தொடங்கி, அமெரிக்காவின் உள்நாட்டுத் தூண்டுதல்கள் அல்லது புவி அரசியல் நடப்புகளின் அடிப்படையிலான நடவடிக்கைகள் வரை, முந்தைய அதிபர்கள் அடிக்கடித் தங்கள் நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டதைப்போலவே ட்ரம்பும் நடந்துகொள்கிறார்.




**வலிமையான தலிபான்**

தற்போதைய ராணுவச் சூழலும் சரி, அரசியல் கட்டமைப்பும் சரி நிலையான அமைதி முயற்சிக்கு உகந்ததாக இல்லை. ஆப்கன் மற்றும் அதன் கூட்டணிப் படைகள் ராணுவ ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் களைப்படைந்தும் பதற்றத்துடனும் இருப்பதைப் போல், தலிபான் அமைப்பு இல்லை. தலிபான் தலைமையும், அதன் பாகிஸ்தான் கூட்டாளிகளும் முழு வெற்றியை அடையும் அளவிலான வலிமை, வளம், காரணிகளைக் கொண்டிருக்கின்றன. பாகிஸ்தான் விடயத்தில், “தொடர்ந்து குரைத்தாலும் கடிப்பதில்லை” எனும் ரீதியிலான அணுகுமுறையை ட்ரம்ப் அரசு தொடர்ந்து மேற்கொண்டுவருவதன் காரணமாக தலிபான் தரப்பின் நம்பிக்கையை வலுப்படுத்தி வருகிறது.

ஆப்கன் அரசையும் மக்களையும் கவனத்தில் கொள்ளாமல் தலிபான் அமைப்புக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் மேற்கொள்ளப்படும் எந்த ஓர் ஒப்பந்தமும் தோல்வியையே தழுவும். 2019ஆம் ஆண்டில் ஆப்கன், 1990ஆம் ஆண்டுகளின் ஆப்கனைவிட அடிப்படையில் வேறுபட்டது. எத்தனையோ குறைபாடுகள் இருந்தாலும், ஆப்கன் அரசு குறிப்பிடத்தக்க அளவிலான திறனையும், சட்டபூர்வத்தன்மையையும் கொண்டிருக்கிறது. வலிமைமிக்க, வளர்ந்துவரும் தேசியப் பாதுகாப்புப் படையும் அதன் வசம் இருக்கிறது.

**மக்கள் ஆதரவு இல்லை**

மறுபுறம், பாகிஸ்தானும் தலிபானும் ஆப்கனின் பெரும்பாலானோரின் வெறுப்புக்கும் அவநம்பிக்கைக்கும் ஆளாகியிருக்கின்றன.

ஆப்கனின் 90 வீதமான மக்கள் தலிபானின் நோக்கத்தை ஆதரிக்கவில்லை என்பது, 2018ஆம் ஆண்டில், ஆசியா பவுண்டேஷன் நிறுவனம் நடத்திய வருடாந்திர ஆப்கன் கணக்கெடுப்பிலும், வியூக ஆய்வுகளுக்கான ஆப்கன் நிறுவனம் நடத்திய தேசிய அளவிலான ஆய்விலும் தெரியவந்திருக்கிறது.

தலிபான்களின் வார்த்தைகளில் சொன்னால், உலகமெங்கும் உள்ள ஜிகாதிகளுக்கு ஆப்கன் என்பது ஒரு 'ஜிகாத் பள்ளி'. எனவே, தாலிபானுடனான எந்த ஓர் ஒப்பந்தமும் வன்முறை சார்ந்த பிற இஸ்லாமியக் குழுக்கள் மத்தியில் நேரடியான தாக்கத்தை ஏற்படுத்தும்.

பாகிஸ்தான், அமெரிக்கா மற்றும் தலிபானின் குவெட்டா {ரா அமைப்பு ஆகியவற்றுக்கு இடையிலான முத்தரப்புப் பேச்சு என்பது ஆப்கன் மற்றும் அதைச் சுற்றியுள்ள பிராந்தியங்களைச் சேர்ந்தவர்களால் ஏற்றுக்கொள்ளப்படாது.

அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கிய, நடைமுறைச் சாத்தியமுள்ள, நீடித்து நிலைக்கக்கூடிய முயற்சிகளே அமைதி ஒப்பந்தத்துக்கு வழிவகுக்க வேண்டும். இது வெற்றியடைய, 1990ஆம் ஆண்டுகளின் இருண்ட காலத்துக்குத் திரும்பிவிடாமல் முன்னேற்றப் பாதையில் ஆப்கன் செல்வதை உறுதிசெய்ய விரும்புகின்ற, ஒத்த கருத்துடைய மற்ற சக்திகளுடன் இந்தியாவும் கைகோக்க வேண்டும்.

அமைதியான, பன்மைத்துவம் கொண்ட, வளமான தேசத்தையே ஆப்கன் மக்கள் விரும்புகிறார்கள். இப்படியான ஓர் அரசியல் சூழலைக் கட்டமைப்பதில், பிற ஆப்கன் குடிமக்களுக்கும் அரசியல் குழுக்களுக்கும் இருக்கும் அதே பங்கு தலிபான்களுக்கும் இருக்கிறது. அமைதியான வளமான ஆப்கானிஸ்தான், அமைதியான முன்னேற்றமடைந்த பிராந்தியம், வன்முறை சித்தாந்தம் கொண்ட இஸ்லாமியக் குழுக்களின் வீழ்ச்சி ஆகிய அனைத்தும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. திணிக்கப்படும் அமைதி அல்லது திணிக்கப்படும் அரசியல் சட்டத்துடன் கூடிய சுதந்திரம் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றை ஆப்கன் மக்கள் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று நிர்ப்ப



# கல்லுண்டாய் வெளியை ஆக்கிரமிக்கும் கட்டுமானம்

## சமூக ஆர்வலர்கள் விசனம்

யாழ்ப்பாணம்,டிசெ.9

கல்லுண்டாய் வெளியில் மயானத்துக்கு அருகிலும், கடற்கரைக்கு அண்மையிலும் இடம்பெறும் உட்கட்டுமானங்கள் தொடர்பாக சமூகவியல் ஆர்வலர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.


கோடைகாலத்தில் கடும் வெப்பத்திலும், மாரிகாலத்தில் கடும் வெள்ளத்திலும் அமிழ்ந்து போகக் கூடிய இடத்தில் ஒரு புறத்தில் வீடமைப்பு அதிகார சபையின் வீட்டுத் திட்டமும், மறு புறத்தில் 5 கோடி ரூபா பெருஞ்செலவில் இளைஞர் சேவை மன்ற கட்டடங்கள் பொருத்தமற்ற இடங்களில் முன்னெடுக்கின்றமை தொடர்பில் சமூகவியல் ஆர்வலர்கள் கவலை வெளியிட்டுள்ளனர். இடம்பெறும் உட்கட்டுமானங்களை மீள்பரீசீலனை செய்யுமாறும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கல்லூண்டாயில் கழிவுக்குதம் ஒரு புறம். தேசிய நீர்வழங்கல் சபையின் கழிவு சுத்திகரிப்பு ஆலை மறுபுறமும் அமைந்து உள்ளன. அதற்கு அருகில் வலி தென்மேற்கு மானிப்பாய்ப் பிரதேச சபையின் கொல்களக் கட்டடம், மயானம் அமைந்துள்ள பிரதேசத்தில் மக்களைக் குடியமர்த்துவதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதனைவிட தேசிய இளைஞர் சேவை கழகத்துக்கான கட்டமும் அங்கு 5 கோடி ரூபா செலவில் முன்னெடுக்கப்படுகிறது.

இவ்வாறான உட்கட்டுமானங்களை மேற்கொள்வதற்கு முன்னர் இடத்தேர்வுகள் தொடர்பில் கள ஆய்வுகள் எதுவும் இடம்பெறாமல், இடவமைப்பு சூழல் காரணிகள் தொடர்பில் ஆய்வுகள் இடம்பெறாமல் முன்னெடுக்கப்பட்ட திட்டங்கள் எந்தளவுக்கு வெற்றி வாய்ப்பை முன்கொண்டு வரவுள்ளன என்பது ஆராயப்பட வேண்டியுள்ளது. யாழ். நகரில் இருந்தும், வலி. தென்மேற்கில் இருந்தும் வரும் கழிவுகளால் சூழல் மாறுபாடு அடையக் கூடிய சூழலில், அபாயகரமான நோய்கள் தோன்றக் கூடிய இடங்களில் உட்கட்டுமானங்கள் இடம்பெறுகின்றமை பொருத்தமானதா என்பதும் ஆராயப்பட வேண்டியுள்ளது. இதேவேளை முன்னாள் இந்து கலாசார அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தி.மகேஸ்வரனால் 2 ஆவது உலக இந்து தமிழ் மாநாட்டை முன்னிட்டு 14 வீடுகள் கல்லுண்டாய் வைரவர் ஆலயத்துக்கு முன்பாக நிர்மாணிக்கப்பட்டன.

அங்கு நிலவிய கடும் வெப்பம், குடிதண்ணீர் அவலம், போக்குவரத்து இன்மை மற்றும் சமூக நல காரியங்களை முன்னெடுக்க முடியாத சூழலில் அங்கு வாழ்ந்த மக்கள் ஓரிரு மாதங்களில் அவ்விடங்களை விட்டு நகர்ந்த வரலாறும் உண்டு. எனவே மக்கள் வாழ்வதற்கான காணிகளைக் கொத்தணியாக வழங்க வேண்டும் என்ற எண்ணங்களைத் தவிர்த்து, பொருத்தமான இடங்களில் கிடைக்கும் காணிகளைப் பெற்று மக்களைக் குடியமர்த்தும் திட்டம் விரைவில் நடைமுறைப்படுத்த முன்வரவேண்டும்என்று சமூகவியலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-50)

## கொழும்புத்துறையில் குடியிருப்புக்குள் வெள்ளம்



யாழ்ப்பாணம் கொழும்புத்துறைப் பகுதி வெள்ள இடரால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. கடந்த சில நாள்களாகப் பெய்து வரும் மழை காரணமாக யாழ்ப்பாணம் நல்லூர்ப் பிரதேச செயலர் பிரிவில் கொழும்புத் துறையிலுள்ள குடியிருப்புப் பகுதிகளுக்குள் வெள்ளம் தேங்கியுள்ளது. அதனால் மக்கள் அயல் கிராமங்களுக்கு இடம்பெயர்ந்துள்ளனர். உதயபுரம், மணியன் தோட்டம், வேளாங்கன்னி தோட்டம் பகுதிகளுக்கு மக்கள் இடம்பெயர்ந்து தங்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்கள் இடம்பெயர்ந்து இரண்டு வாரங்களாகியும், சமைத்த உணவுகளோ, எவ்விதமான அவசர உதவிகளோ அரச அதிகாரிகள் வழங்கவில்லை என்று பாதிக்கப்பட்ட மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (க- 213)

## சேவா மங்கலம் திட்டத்தில் ஆசிரியைக்கு மதிப்பளிப்பு



சாவகச்சேரி.டிசெ.9

தென்மராட்சிக் கல்வி வலயத்தின் சேவா மங்கலம் திட்டத்தின் கீழ் மட்டுவில் சந்திரபுரஸ்கந்தவரோதய மகா வித்தியாலய ஆசிரியை கமலாம்பிகை சிறிதரன் மதிப்பளிக்கப்பட்டார். அவர் சேவையிலிருந்து ஓய்வு பெறுவதையடுத்து, அவர் ஓய்வூதியம் பெறுவதற்கான கோவை மற்றும் அவரது சேவையை மதிப்பளிக்கும் விருது என்பன அண்மையில் வழங்கப்பட்டன. அதிபர் கு. இராஜேந்திரன் தலைமையில், தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன், பிரதிக் கல்விப்பணிப்பாளர் சிவத்திரை சிவநாதன் மற்றும் வலய அலுவலர்கள் முன்னிலையில் ஆசிரியை மதிப்பளிக்கப்பட்டார்.

ஆசிரியை கமலாம்பிகை சிறிதரன் கல்வி வலயத்தில் நான்கு வருடங்கள் தமிழ்ப் பாடல் உதவிக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றி பின்னர் மட்டுவில் சந்திரபுரஸ்கந்தவரோதய மகா வித்தியாலயத்தில், தமிழ்ப் பாட ஆசிரியராகக் கடமையாற்றி வந்தார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-9)

## கூட்டுறவுக்குள்ளேயே அபிவிருத்தி தேவை; அதன் அமைப்புக்களின் ஆர்வம் அவசியம்

### மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.9

கூட்டுறவுக்குள் இருக்கும் அபிவிருத்தி இடைவெளியை முழுமைசெய்யகூட்டுறவுஅமைப்புக்கள் முழுமையாகச் செயற்படவேண்டும் என்றுவடக்குமாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்பொ.வாகீசன் தெரிவித்தார்.

வீரசிங்கம் மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற பெரியாரின் 55ஆவது நினைவு தினத்தில் முதன்மை விருந்தினராகக்கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது;

யாழ்ப்பாண நகரில் சுற்றுலாத்துறை சார்ந்த இடத்தில் இந்த வீரசிங்கம் மண்டபம் அமைப்



பெற்றபெருமை பெரியாரையே சாரும். கூட்டுறவின் அழியாத சின்னமாகவும் இந்த மண்டபம் விளங்குகின்றது. கடந்த காலத்தில் பெரியார் கூட்டுறவுக்கு ஆற்றிய சேவைகள் அவரின் கொள்கைகள் வழிகாட்டல்களாகவும்இங்கே நினைவுப் பேருரை ஆற்றிய சிவதீபனால் விரிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

இவ்வாறு எமது கூட்டுறவுக்குப் பல்வேறு வழிகளிலும் பெருமை சேர்ந்த இப்படிப்பட்ட பெரியார்களை நாம் நினைவு கூருவது காலத்தின் கடமையாகும்.

இன்றைய நிலையில் எமது வடக்கில் கூட்டுறவுத்துறை சார்ந்த குறைபாடுகளுக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுக்கவேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

கூட்டுறவின் சேவைகள் அபிவிருத்திபோன்றவற்றில் காணப்படும் இடைவெளியை நிரப்பவும் புதிய திட்டங்கள் மேற்கொண்டு அரசிடம் இருந்து அதற்கான உதவிகளைப் பெற்றுக்கொள்ளவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்-என்றார். (ஜ-17)

## தென்மராட்சி பிரதேச செயலர் இடமாற்றம்

சாவகச்சேரி.டிசெ.9

தென்மராட்சிப் பிரதேச செயலராகக் கடமையாற்றிய தேவநந்தினிபாபு வடக்கு மாகாண சபைக்கு இடமாற்றம்செய்யப்பட்டுள்ளார்.

அவரது இடத்துக்கு வடமாகாண கல்வி அமைச்சில் கடமையாற்றும் ஜெகூ நியமிக்கப்பட்டுள்ளார்.

பொது நிர்வாக அமைச்சால் அனுப்பி வைக்கப்பட்ட நிர்வாக சேவை அலுவலர்களுக்கான வருடாந்த இடமாற்றல் பட்டியலில் இந்த இடமாற்ற விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது. எதிர்வரும் 2020 பெப்ரவரி பத்தாம் திகதி தொடக்கம் இடமாற்றம் நடைமுறைக்கு வரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க-9)

## வீட்டின் மீது தாக்குதல்



யாழ்ப்பாணம்,டிசெ.9

அரியாலை மாம்பழம் சந்திக்கு அண்மையில் உள்ள வீடு ஒன்றின் மீது, தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. மோட்டார் சைக்கிள்களில் வந்த குழுவினர் நேற்று முன்தினம் இரவு, வீட்டின் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீட்டு உரிமையாளரால் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திலும், யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவிலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (க-ரி)



## இடரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு விளையாட்டுக் கழகத்தினர் உதவி

மன்னார்,டிசெ.9

மன்னார் மாவட்டத்தில் வெள்ள இடரால் பாதிக்கப்பட்டு, தற்காலிக நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள குடும்பங்களுக்கு மன்னார் பனங்கட்டுக்கொட்டு புனித சூசையப்பர் விளையாட்டுக் கழகத்தினர் தமது சொந்த நிதியில் இருந்து உதவிகளை வழங்கினர்.

சாந்திபுரம் தற்காலிக நலன்புரி முகாமில் தங்கியுள்ள குடும்பங்களுக்கு நேற்று முன்தினம் உதவிகள் வழங்கப்பட்டன.

ஜீவபுரம். ஜிம்றோன் நகர். சாந்திபுரம் கிராமங்களின் 13 குடும்பங்களைச் சேர்ந்த 35 பேருக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்கள் கையளிக்கப்பட்டன.

நிவாரணப் பொருள்களை புனித சூசையப்பர் விளையாட்டுக் கழகத்தின் தலைவர், செயலாளர் உட்பட கழக அங்கத்தவர்கள் இணைந்து வழங்கினர். (க-56)

### இடரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ

# முல்லைத்தீவு - கிளி. மாவட்டங்களுக்கு ரூ.7கோடி 50இலட்சம் ரூபா நிதி தேவை

யாழ்ப்பாணம்,டிசெ.9

**முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் வெள்ள இடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை வழங்க, மேலதிக நிதியாக 7 கோடியே 50 இலட்சம் ரூபா தேவை என்று மாவட்டச் செயலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

நாட்டில் நிலவிய மழை காரணமாக வெள்ளப் பெருக்கின் பாதிப்பு அதிகரித்துள்ளது.

வவுனியா மாவட்டத்தில் மட்டும் ஒரே நாளில் 237 மில்லி மீற்றர் மழை கொட்டித் தீர்த்துள்ளது. அதனால் 108 வீடுகள் சேதமடைந்துள்ளன. இதுவரை 403 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 320 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 70 குடும்பங்களைச் சேர்ந்த 204 பேர் தற்போதும் இடம்பெயர்ந்துள்ளனர். இவ்வாறு இடம்பெயர்ந்தவர்களில் அதிகமானோர் வவுனியா வடக்கு நெடுங்கேணியை அண்டிய பகுதி மக்களும், செட்டிகுளம் பகுதி மக்களும் ஆவர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் அடைமழை காரணமாக 7 ஆயிரத்து 121 குடும்பங்களைச் சேர்ந்த 23 ஆயிரத்து 713 பேர் பாதிப்படைந்துள்ளனர். 2 ஆயிரத்து 220 குடும்பங்களைச் சேர்ந்த 6 ஆயிரத்து 817 பேர் இடம்பெயர்ந்து மாவட்டத்தின் 9 இடைத் தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அதேவேளை இரணைமடுக்குளம் முழுமையாகத் திறக்கப்பட்டுள்ளதால் பாதிப்புக்கள் அதிகரிக்கக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இதுவரையில் 10 ஆயிரத்து 519 குடும்பங்களைச் சேர்ந்த 33 ஆயிரத்து 726 பேர் பாதிப்படைந்துள்ளனர். இவர்களில் 323 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 63 பேர் இடம்பெயர்ந்தநிலையில் 15 முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு பாதிக்கப்பட்ட மக்களின் நிவாரண ஏற்பாடுகளுக்காக .கிளிநொச்சி மாவட்டச் செயலர் 5 கோடி ரூபாவும், முல்லைத்தீவு மாவட்டச் செயலர் 2கோடியே 50 இ லட்சம் ரூபாவும் அவசரமாகக் கோரியுள்ளனர். (க-105)



நானாட்டான் செம்மண்தீவு கிராமத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு, செம்மண்தீவு பொதுநோக்கு மண்டபத்தில் தங்கியுள்ள ஆறு குடும்பங்களுக்கு, முருங்கன் விகாராதிபதி மருத்துவப் பொருள்கள் அடங்கிய பொதிகளை நேற்றுமுன்தினம் வழங்கினார். (க-213)

## பாலம் சீரின்மையால் வீடுகளுக்குள் வெள்ளம்

முல்லைத்தீவு,டிசெ.9

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு விசுவமடு மேற்கு 10 ஆம் கட்டை வீதியில் இருமருங்கிலும் உள்ள வீடுகளில் வெள்ளம் தேங்கியுள்ளது. அங்குள்ள பாலம் சீராக அமைக்கப்படாத காரணத்தால் வெள்ளம் வடிந்தோடாமல் தேங்கியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



அந்தப் பகுதியில் 7 வீடுகளில் தொடர்ச்சியாக வெள்ளம் தேங்கியுள்ளது.

10 ஆம் கட்டை வீதி சீரமைக்கப்பட்ட போது, பாலம் கட்டப்பட்டது. அந்த பாலம் வெள்ளம் வடிந்தோடக்கூடியவகையில் கட்டப்படவில்லை. அதனால் வீடுகளுக்குள் வெள்ளம் தேங்கியுள்ளது என்று பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-ரி3)



## வெள்ள இடரால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உடன் உதவிகள்

கிளிநொச்சி,டிசெ.9

கிளிநொச்சி மாவட்டத்தில் வெள்ள இடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி உதவிகள் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார். வெள்ள இடரால் பாதிக்கப்பட்டு, தற்காலிக நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களை நேற்று முன்தினம் நேரடியாகச் சென்று சந்தித்தார் நாடாளுமன்ற உறுப்பினர்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு அடிப்படைத் தேவைகளுக்கேற்ற உடனடி உதவிகளை வழங்குவதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இது தொடர்பில் மாவட்டச் செயலர், பிரதேச செயலர்கள் உள்ளிட்ட பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளுடன் கலந்துரையாடப்பட்டுள்ளது என்று மக்களிடம் அவர் தெரிவித்தார். அதேவேளை பரந்தன், சிவபுரம் உள்ளிட்ட பகுதிகளில் வெள்ள இடரில் சிக்கிய மக்களை மீட்டு, தற்காலிக நலன்புரி நிலையங்களுக்கு ஏற்றிச் செல்லும் நடவடிக்கையில் நாடாளுமன்ற உறுப்பினர், இடர் மீட்புப் பணிக்குழுவினருடன் நேரடியாகக் களத்தில் ஈடுபட்டிருந்தார். (சு-426)

### சாவகச்சேரி பிரதேச சபை

# இடரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 10 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு

தென்மராட்சிப் பிரதேசத்தில் இயற்கை இடர் ஏற்படும் பட்சத்தில் அவசர உதவிகளை வழங்குவதற்கென 10 இலட்சம் ரூபா நிதியை சாவகச்சேரி பிரதேச சபையின் பாதீட்டில் ஒதுக்கீடுசெய்துள்ளது.

ஒதுக்கப்பட்ட நிதியை அந்தந்த வட்டார அங்கத்தவர்களின் கோரிக்கைக்கு அமைவாக, சபையின் உப அலுவலகப் பொறுப்பதிகாரி மற்றும் தொழில் நுட்ப அலுவலர் ஆகியோர் நேரடியாகப் பார்வையிட வேண்டும். அவர்களின் அறிக்கையின் பிரகாரம், அத்தியாவசியமானது எனக் கருதும் தேவைகளை நிறைவேற்ற வேண்டும் என்று கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


வெள்ள இடரால் பாதிக்கப்பட்ட பிரதேச சபை எல்லைக்குட்பட்ட குடும்பங்களுக்கு அவசர உதவிகள் வழங்குவது தொடர்பான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் சாவகச்சேரி பிரதேச சபையில் நடைபெற்றது. அதில் இந்த வருட பாதீட்டில் இயற்கை இடர் ஏற்படும் பட்சத்தில் அவசர உதவிகளைவழங்கவென 10 இலட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்ட விவரம் தெரிவிக்கப்பட்டது. பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பல இடங்களில் வெள்ளத்தால் பாதிப்புகள் ஏற்பட்டு வருவதால், ஒதுக்கப்பட்ட நிதியைப் பயன்படுத்துவது தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.

தவிசாளர் க.வாமதேவன் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில், தென்மராட்சிப் பிரதேச செயலக நிர்வாக அலுவலர், பிரதேச இடர் முகாமைத்துவ அலகின் அபிவிருத்தி அலுவலர், பிரதேசசபையின் உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

அதேவேளைபிரதேசசெயலகத்தினர் வெள்ளத்தால் பாதிக்கப்படும் குடும்பங்களுக்கு உதவிகளை வழங்க வேண்டுமெனக் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. (க-9)

## துரிசு திறப்பு

நாவற்குழிப் பாலத்தின் துரிசு திறக்கப்பட்டுள்ளது. அதனால் பாலத்தின் சுற்றாடலில் நிறைந்து காணப்பட்ட வெள்ளம் கடலுக்குத் திருப்பப்பட்டுள்ளது. கடந்த வாரம் பெய்த கனமழையால், நாவற்குழிப் பாலத்தின் சுற்றாடலில் வெள்ளம் தேங்கியிருந்தது. அதனால் ஏ 9 முதன்மை வீதியை வாகனங்கள் கடப்பதில் அபாய நிலைமை காணப்பட்டது. அதனையடுத்து பாலத்தின் துரிசு திறக்கப்பட்டு கடலுக்குள் வெள்ளம் திருப்பப்பட்டுள்ளது. (சு-9)



மன்னாரில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வட்டுப்பியத்தான் மடுப் பகுதியில் வெள்ளம் தேங்கி நின்ற இடங்களைச் சீர் செய்து, தேவையான இடத்தில் குழாய்களைப் பதிக்கும் நடவடிக்கைகளை மன்னார் பிரதேச சபையினர் நேற்று முன்தினம் மேற்கொண்டனர். (க-213)

# வன்முறைகளை ஒழிப்போம் பெண்கள் திரண்டு போராட்டம்

வவுனியா, டிசெ. 9

பெண்களுக்கெதிரான வன்முறைகளை ஒழிப்பதற்கான பன்னாட்டு தினத்தை முன்னிட்டு, பெண்களுக்கும், பெண் பிள்ளைகளுக்கும் எதிரான வன்முறைகளை ஒழிப்போம் எனும் தொனிப் பொருளில் வவுனியாவில் நேற்றுப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.




டாபிந்து கெலக்டிவ் என்ற அமைப்பினரின் ஏற்பாட்டில், வவுனியா இரண்டாம் குறுக்குத்தெருவில் போராட்டம் இடம்பெற்றது. அதன் பின்னர் நெல்லிஸ்டார் விருந்தினர் விடுதியில் பெண்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கும் நடைபெற்றது. ஆடைத் தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெண்கள் எதிர்கொள்ளும் பால்நிலை வன்முறைகள், பெண்களுக்கு எதிரான வன்முறைகள், அவற்றில் இருந்து எவ்வாறு தம்மைப் பாதுகாத்துக் கொள்ளலாம், தேவையற்ற கர்ப்பங்களை எவ்வாறு தவிர்த்தல், குடும்பத்திட்டமிடல் முறைகள், சட்ட விரோதமான கருக்கலைப்பால் ஏற்படும் பாதகமான விளைவுகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன.

நிகழ்வில் டாபிந்து கெலக்டிவ் அமைப்பின் பிரதிநிதிகள், வவுனியா மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களிலுள்ள ஆடைத்தொழிற்சாலையில் பணிபுரியும் பெண்கள், பெண்கள் அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (சு-ரி4)



## சாதனை மாணவிக்கு வவுனியாவில் மதிப்பளிப்பு

வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரியில் 12 ஆம் ஆண்டில் கல்வி கற்கும் ரோகிதா புஸ்பதேவன், குருதிப் பரிசோதனைக்காக குருதியைத் தானியங்கி முறையில் நோயாளர்களிடம் பெறும் ரோபோ இயந்திரத்தைக் கண்டுபிடித்துச் சாதனைப் படைத்துள்ளார்.

சாதனையாளரான மாணவி ரோகிதா புஸ்பதேவன், வவுனியா மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் வைத்து நேற்று முன்தினம் மதிப்பளிக்கப்பட்டார்.

வவுனியா மாவட்டச் செயலகத்தினர் மற்றும் தமிழ் விருட்சம் அமைப்பினர், கந்தப்பிள்ளை திலீபன் ஆகியோர் இணைந்து நிகழ்வை ஏற்பாடு செய்தனர்.

நிகழ்வில் குருதிப் பரிசோதனைக்காக குருதியைத் தானியங்கி முறையில் நோயாளர்களிடம் பெறும் ரோபோ இயந்திரத்தின் மூலம், மாணவி வவுனியா மாவட்டச் செயலரின் கையைப் பரிசோதனை செய்தார்.

அதனைத் தொடர்ந்து மாணவிக்குப் பொன்னாடை போர்த்தி மதிப்பளித்தனர். நினைவுச்சின்னங்களும் வழங்கப்பட்டன. மாணவியின் கண்டுபிடிப்பை மேலும் மெருகூட்டி அதனை அனைவரும் பயன்படுத்தும் விதமாக உருவாக்குவதற்குப் பண உதவியும் வழங்கப்பட்டது.

மாணவி குருதிப் பரிசோதனைக்காகக் குருதியை நோயாளியிடமிருந்து பெறுவதற்கான தானியங்கி முறைமையைக் (AUTO NEEDEL INJECTOR) கண்டுபிடித்து மாகாண மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்று தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளார். அவரின் வெற்றிக்கு பாடசாலைச் சமூகம் மாத்திரமே முழுமையான காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் வவுனியா மாவட்டச் செயலர் ஐ.எம். ஹனீபா, வவுனியாமாவட்ட மேலதிக செயலர் தி. திரேஸ்குமார், தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் சந்திரகுமார் கண்ணன், வர்த்தக சமூகத்தினர், மருத்துவர்கள், சமூக சேவையாளர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பாடசாலைச் சமூகத்தினர் , அரச மற்றும் அரசசார்பற்ற அலுவலர்கள் , நகரசபை உறுப்பினர் , சட்டத்தரணி எனப் பலரும் கலந்து கொண்டனர். (சு-ரி4)

## 55 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

கிளிநொச்சி, டிசெ. 9

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் 'உயர்த்தும் கரங்கள்' செயற்குழுவால் முன்னெடுக்கப்பட்டு வரும் நிகழ்ச்சித் திட்டத்தில் 55 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டன.

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள பொருளாதார நலிவான மாணவர்கள் 500 பேருக்கு 2020 புதிய கல்வியாண்டுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைவாக கிளிநொச்சி மாவட்டம் வன்னேரிக்குளம் கிராமத்தைச் சேர்ந்த வன்னேரிக்குளம் அ.த.க பாடசாலை, ஐயனார்புரம் பாடசாலை, ஆனைவிழுந்தான் குளம் பாடசாலைகளைச் சேர்ந்த 55 மாணவர்களுக்கு பாடசாலை கற்றல் உபகரணங்கள், புத்தகப் பைகள் வழங்கப்பட்டன.

இதற்கான நிதியை சங்கத்துடன் இணைந்து இயங்கி வரும் நியூசிலாந்து வன்னிநேயம் அமைப்பினர் வழங்கினர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தச் செயற்திட்டத்தில் மூன்று மாவட்டங்களைச் சேர்ந்த 170 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. தொடர்ந்தும் வடக்கு, கிழக்கை உள்ளடக்கிய 8 மாவட்டங்களில் இந்தச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்படும் என்று சங்கம் தெரிவித்துள்ளது. (சு-222)





## குடிதண்ணீர் சுத்திகரிக்கும் நிலையங்கள் திறக்கப்பட்டன

வவுனியா, டிசெ. 9

வவுனியா ஆசிகுளம், ஈஸ்வரிபுரம் ஆகிய பகுதிகளில் குடிதண்ணீர் சுத்திகரிக்கும் நிலையங்கள் நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

இலங்கை றொட்டறிக் கழகம் மற்றும் 'லாம் லங்கா' நிறுவனத்தின் திட்டமிடல் பணிப்பாளர் ஜே.பிரதீபன் தலைமையில் ஒரு கோடியே எழுபது இலட்சம் ரூபா நிதி உதவியில் இவை அமைக்கப்பட்டன. இவற்றை மாவட்டச் செயலர் எம்.ஹனீபா திறந்துவைத்தார்.

நிகழ்வில் ஏனைய விருந்தினர்களாக மாவட்டத் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி வில்வராணம், உதவித்திட்டமிடல் பணிப்பாளர் திருமதி பிறைசூடி, ஆசிகுளம் கிராம அலுவலர் ஜெனகன், சமுர்த்தி அலுவலர், நிறுவனத்தலைவர்கள், கிராம அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இதேவேளை, கடந்த காலங்களில் இலங்கை றொட்டறிக் கழகம், 'லாம்ப் லங்கா' ஆகியவற்றின் நிதி அனுசரணையில் வெலிஓயா, முள்ளியவளை பொன்நகர், கோவில்குடியிருப்பு, துணுக்காய், சாவகச்சேரி போன்ற பகுதிகளிலும் குடிதண்ணீர் சுத்திகரிக்கும் நிலையங்கள் திறந்துவைக்கப்பட்டுள்ளன என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (து)



## பேசாலை வெற்றியன்னையின் வருடாந்தப் பெருவிழா நேற்று

மன்னார், டிசெ. 9

மன்னார் மறை மாவட்டத்தில் பேசாலை பங்கின் பாதுகாவலியாம் புனித வெற்றியன்னை ஆலயத்தின் வருடாந்தப் பெருவிழா நேற்று சிறப்புற இடம்பெற்றது.

பங்குத் தந்தை அருட்பணி எஸ்.கொடுத்தோர் தேவராஜா அடிகளார் தலைமையில் நவநாள்கள் இடம் பெற்று நேற்று பத்தாம் நாள் பெருவிழா இடம்பெற்றது.

பெருவிழாவை முன்னிட்டு மன்னார் மறைமாவட்டக் குரு முதல்வர் அருட்பணி விக்ரர் சோசைஅடிகளார் தலைமையில் வழிபாடுகளும், நற்கருணை பவனியும் நேற்று முன்தினம் இடம்பெற்றன.

மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் பெருவிழா கூட்டுத்திருப்பலியும், அதனைத் தொடர்ந்து திருச்சொரூப பவனியும், அன்னையின் திருச்சொரூப ஆசீரும் நேற்று இடம்பெற்றன. (சு-60)

## வட்டுப்பித்தானில் 30 குடும்பங்கள் இடம்பெயர்வு

மன்னார், டிசெ. 9

மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாகப் பெய்து வரும் கடும் மழை காரணமாக, மன்னார் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வட்டுப்பித்தான் மடு கிராமத்தில் 30 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன.

வட்டுப்பித்தான் மடு கிராமம் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. அதனால் கிராமத்தில் 30 குடும்பங்களைச் சேர்ந்த 120 பேர் இடம்பெயர்ந்து, வட்டுப்பித்தான் மடு கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் தங்கியுள்ளனர்.

மக்களுக்கான உணவு மற்றும் ஏனைய வசதிகளை மன்னார் மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவு வழங்கி வருகிறது. (சு-56)



## புதுக்குடியிருப்பு சபை நடத்திய வாசிப்பு மாத போட்டி முடிவுகள்

முல்லைத்தீவு, டிசெ.9

2019ஆம் ஆண்டுக்கான தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு புதுக்குடியிருப்பு பிரதேச சபையால் நடத்தப்பட்ட போட்டிகளின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

முன்பள்ளி, பாடசாலை மாணவர்களுக்கிடையிலான கதைகூறும் நிகழ்வு, மற்றும் பாடசாலை மாணவர்களிடையே கட்டுரை, பேச்சு, சித்திரம், ஒட்டுச்சித்திரம், பொது விவேகமும் நுண்ணறிவும் போன்ற போட்டிகள் நடத்தப்பட்டன. இதில் வெற்றி பெற்ற மாணவர்களின் விவரம் மாணவர்களுக்கான சான்றிதழும் பரிசுப் பொருள்களும் தேசிய வாசிப்பு மாத இறுதிநாள் நிகழ்வில் வழங்கப்படும் என்று புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் நூலகர் தெரிவித்துள்ளார்.

முன்பள்ளி மாணவர்களுக்கான கதை கூறும் போட்டியில் முதலாம் இடத்தை ஆதிகணபதி முன்பள்ளி மாணவி ம.மதுரகவியும். இரண்டாம் இடத்தை பாரதி முன்பள்ளி மாணவி சு.கன்சிகாவும். மூன்றாம் இடத்தை அகஸ்ரின் முன்பள்ளி மாணவன் பே.டல்சிகனும் பெற்றுள்ளனர். தரம் ஒன்று மற்றும் தரம் 2 மாணவர்களுக்கான சித்திரப் போட்டியில் முதலாம் இடத்தை மு/கருவேலன்கண்டல் அ.த.க.பாடசாலை மாணவி வி.சங்கவியும், இரண்டாம் இடத்தை மு/ஈஸ்வரன் வித்தியாலயம் அ.இதர்ஹனாவும். மூன்றாம் இடத்தை மோ.டனிஸ்டனும் பெற்றுள்ளனர். தரம் மூன்று மாணவர்களுக்கான ஒட்டுச்சித்திரப் போட்டியில் முதலாம் இடத்தை மு/முத்துஐயன்கட்டு இடதுகரை அ,த,க.பாடசாலை மாணவி டெ.பிறமினா, இரண்டாம் இடத்தை மு/கருவேலன்கண்டல் அ,த,க.பாடசாலை மாணவன் சி.சாருகன், மூன்றாம் இடத்தை மு/முத்துவிநாயகர் தமிழ் வித்தியாலய மாணவி சா.ம்க்சிகாவும், தரம் 4, 5 மாணவர்களுக்கான நுண்ணறிவுப் போட்டியில் முதலாம் இடத்தை மு/சுழாமுறிப்பு அ.த.க பாடசாலை மாணவி உ.நிஹாந்தி, இரண்டாம் இடத்தை மு/தண்டுவன் அ.த.க பாடசாலை மாணவன் ஈ.இசைப்பிரியன், மூன்றாம் இடத்தை மு/ஆறுமுகம் வித்தியாலய மாணவி தி.அபிஹாலினியும் பெற்றுள்ளனர். தரம் 7 மாணவர்களுக்கான பேச்சுப் போட்டியில் முதலாம் இடத்தை மு/முத்துஐயன்கட்டு வலதுகரை மகா வித்தியாலய மாணவன் ச.யனுர்சன், இரண்டாம் இடத்தை மு/தண்டுவான் அ,த,க பாடசாலை மாணவி இ.நிலவரசி மூன்றாம் இடத்தை மு/முத்துஐயன்கட்டு வலதுகரை மகா வித்தியாலய மாணவி த.சங்கவி ஆகியோர் பெற்றுள்ளனர். தரம் 8,9 மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டியில் முதலாம் இடத்தை மு/முத்துஐயன்கட்டு வலதுகரை மகா வித்தியாலய மாணவி பி.ஒலிவியா, இரண்டாம் இடத்தை மு/முத்துஐயன்கட்டு வலதுகரை மகா வித்தியாலய மாணவி வா.சாருஜா, மூன்றாம் இடத்தை மு/பண்டாரவன்னியன் மகா வித்தியாலய மாணவி கி.கஜீபா ஆகியோர் பெற்றுள்ளனர்.

தரம் 10,11 மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டியில், முதலாம் இடத்தை மு/முத்துஐயன்கட்டு வலதுகரை மகா வித்தியாலய மாணவி சு.தனுஹா, இரண்டாம் இடத்தை மு/பண்டாரவன்னியன் மகா வித்தியாலய மாணவி ந.விஜயநந்தி, மூன்றாம் இடத்தை மு/சுழாமுறிப்பு அ,த,க,பாடசாலை மாணவி செ.கம்சிகா ஆகியோர் பெற்றுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-ரி3)

## பருத்தித்துறையில் 118 குடும்பங்கள் வெள்ள நிலைமையால் பாதிப்பு

வடமராட்சி, டிசெ. 9

காலநிலை மாற்றம் காரணமாகப் பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் 118 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்று பிரதேச செயலர் ஆழ்வார்ப்பிள்ளை சிறி தெரிவித்தார். இலங்கையில் ஏற்பட்டுள்ள கால நிலை மாற்றம் காரணமாகஇலங்கையின் அனைத்து மாவட்டங்களிலும், பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

வடக்கிலும் மக்கள் பெரும் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளனர். அந்த வகையில் பருத்தித்துறைப் பிரதேசத்தில் பல பகுதிகளைச் சேர்ந்தவர்களும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்குவது தொடர்பில் ஆராயப்படுகிறது என்றும் பிரதேச செயலர் தெரிவித்தார்.

(ஐ-173)

### வடமராட்சி கிழக்கில் சட்டவிரோத

# மணல் அகழ்வை தடுத்து நிறுத்துக

யாழ்ப்பாணம், டிசெ.9

மருதங்கேணி குடத்தனை, குடாரப்புப் பகுதிகளில் எந்தவிதமான அனுமதிகளும் இன்றி நூற்றுக்கணக்கான டிப்பர்களில் மணல் அகழ்வு இடம்பெறுகின்றது. அதனைத் தடுக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மணல் மற்றும் கல் என்பன எடுத்துச் செல்வதற்கு அனுமதிப் பத்திரம் தேவை இல்லை என்று அறிவிக்கப்பட்ட நிலையில், அகழ்வதற்கான அனுமதியையும் பெற்றுக்கொள்ளாது திருட்டு மணல் அகழ்வில் நூற்றுக் கணக்கான டிப்பர்கள் ஈடுபடுகின்றன. முன்பு கடற்கரைகளில் உழவு இயந்திரங்களில் அகழப்பட்டு கொண்டு வரப்பட்டே டிப்பர்களுக்கு மணல் ஏற்றப்பட்டது.

ஆனால் தற்போது நேரடியாகவே டிப்பர்களில் ஏற்றிச் செல்லப்படுகின்றன. இவ்வாறு நேரடியாகவே டிப்பர்களில் ஏற்றிச்செல்வதனால்,கிராமத்தின் மையப் பகுதிகளிலும் மணல் அகழப்படுகின்றது.

இதனைத் தடுக்காது விட்டால் பெரும் இடர் நிகழும் வாய்ப்பும் உள்ளது. இது தொடர்பில் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினால் பொலிஸார் வருவது கிடையாது எ்ன்று மக்கள் குற்றஞ்சாட்டி யுள்ளனர்.

இது தொடர்பில் மருதங்கேணிப் பிரதேச செயலருடன் தொடர்பு கொண்டு கேட்ட போது இந்த விடயம் எனது கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டதும் உடனடியாக பொலிஸாரின் கவனத்துக்குக் கொண்டு சென்றேன்.

அப்போது ஒரு அமைச்சர் அந்தப் பகுதிக்கு வருகை தந்தமையால் அவரின் பாதுகாப்புக்காக பொலிஸார் சென்று விட்டனர் என்று பொலிஸார் பதிலளித்தனர். இருப்பினும் மணல் அகழ்வு தொடர்பில் கேட்ட போது மறுநாள் அவதானிப்பதாகவும் தெரிவித்தனர்.

அதேநேரம் மணல் திருட்டுத் தனமாக அகழ்ந்தாலும் எடுத்துச் செல்லும் அனுமதி தேவை இல்லை என்பதனாலேயே இவ்வாறு அதிக திருட்டு இடம் பெறுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. என்றார்.

(க-105)

## கிளிநொச்சியில் சிறப்புத் தேவையுடையோர் தின நிகழ்வு

கிளிநொச்சி, டிசெ.9

பன்னாட்டு சிறப்புத் தேவையுடையோர் தின நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி மாவட்டக் கூட்டுறவாளர் மண்டபத்தில் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.

மாகாணப் பணிப்பாளர் திருமதி. வனஜா செல்வரட்ணத்தின் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் சிறப்பு விருந்தினராக வட மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருமாகிய பொன்னம்பலம் வாகீசன் கலந்து கொள்ளவுள்ளார்.

(ஐ-222)

## விபத்துக்களில் மூவர் காயம்

சாவகச்சேரி, டிசெ.9

வெவ்வேறு விபத்துக்களில் சிக்கி காயமடைந்த மூவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இந்த விபத்துக்கள் தென்மராட்சி பிரதேசத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றன.

நுணாவில் பகுதியில் ஈருருளியும், உந்துருளியும் மோதியதில் அவற்றில் பயணித்த 68 வயது முதியவரும், 28 வயது குடும்பத்தலைவரும் காயமடைந்தனர்.

காயமடைந்த இருவரும் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு முதியவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குமாற்றப்பட்டார்.

இதேவேளை அல்லாரைப் பகுதியில் உந்துருளி சில்லு சறுக்கி வீழ்ந்ததில் அதே இடத்தைச் சேர்ந்த 30 வயதுடைய குடும்பத் தலைவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

(ஐ-9)

## தொடர் மழைக்குப் பின்னர் வவுனியாவில் நேற்று வெயில்



வவுனியா, டிசெ.9

தொடர் மழையுடனான கால நிலை மாற்றமடைந்து நேற்றுமுன்தினம் வவுனியாவில் வெயிலுடனான காலநிலை காணப்பட்டது.

நாடு முழுவதும் ஏற்பட்ட காலநிலை மாற்றம் காரணமாக வடக்கில் வவுனியா மாவட்டமும் பாதிக்கப்பட்டிருந்தது. அண்மையில் பெய்த தொடர் மழையால் வவுனியாவில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு வரை 330 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 27 பேர் பாதிக்கப்பட்டிருந்தனர். 105 வீடுகள் பகுதியளவில் பாதிக்கப்பட்டிருந்தன. 178 குடும்பங்களைச் சேர்ந்த 554 பேர் தங்களுடைய வீடுகளை விட்டு இடம்பெயர்ந்து இடைத்தங்கல் முகாம்களில் தங்கியிருந்தனர். வவுனியா வெங்கலச்செட்டிகுளம் மற்றும் வவுனியா வடக்கு பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட மக்களே இவ்வாறு இடம்பெயர்ந்திருந்தனர். அவர்களுக்காக ஆறு இடைத் தங்கல் முகாம்கள் அமைக்கப்பட்டிருந்தன.

இவ்வாறான நிலையில் கடும் மழையுடனான கால நிலை நேற்றுமுன்தினம் வவுனியாவில் தொய்வு நிலையை அடைந்தது. நேற்றுமுன்தினம் நண்பகல் வெயிலுடனான காலநிலை காணப்பட்டது என்று தெரிவிக்கப்படுகிறது. வெயிலுடனான காலநிலையின் போது ஆங்காங்கே காணப்பட்ட வெள்ள நீர் வற்றிப்போனது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-ரி4)

## மின் தடை அறிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.9

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்வி நியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடக்கின் பலபகுதிகளில்மின்சாரம் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி எதிர்வரும் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை யாழ்ப்பாண மாவட்டத்தில் உடுப்பிட்டி நாவலடி, வன்னிச்சி அம்மன் கோவிலடி, வல்வெட்டித்துறை ஒரு பகுதி, கொழும்புத்துறை ஒரு பகுதி, நெடுங்குளம் ஒரு பகுதி, உதயபுரம், மணியம்தோட்டம், மணியம்தோட்டம் ஐஸ் தொழிற்சாலை ஆகிய இடங்களிலும், வவுனியா மாவட்டத்தில கணேசபுரம் கிராமம், மகாறம்பைக்குளம் கிராமம் ஆகிய இடங்களில் மின் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

*மூதாட்டியின் கைப்பையை*

## திருடிய இளைஞன் கமராவால் சிக்கினார்

அச்சுவேலி,டிசெ.9

மூதாட்டியின் கைப்பை பறித்துக் கொண்டு தப்பி ஓடிய இளைஞர், மறை காணியின் துணையுடன் பிடிக்கப்பட்டு, அச்சுவேலிப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். இந்தச் சம்பவம் சிறுப்பிட்டி மத்தி மனோன்மணி அம்மன் வீதியில் நேற்று முன்தினம் முற்பகல் இடம்பெற்றது. மோட்டார் சைக்கிளில் வந்த உரும்பிராய் பகுதியைச் சேர்ந்த இளைஞன், மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு, வீட்டு மதில்களுக்கு வெளியே உள்ள பூக்களைப் பறித்துக் கொண்டிருந்தார்.

70 வயதுடைய மூதாட்டி வீதியால் வரும் போது , அவரின் கைப்பை பறித்துக்கொண்டு இளைஞன் மோட்டார் சைக்கிளில் தப்பியோடினார்.

மூதாட்டியின் உறவினர்கள் அந்த வீதியில் உள்ள வீடுகளின் மறை காணிப்பதிவுகளைப் பார்வையிட்டனர். சம்பந்தப்பட்ட இளைஞன் மோட்டார் சைக்கிளில் வந்து பூப் பறிப்பது போன்று நடமாடுவது, மூதாட்டியின் கைப்பையை பறித்துக் கொண்டு மோட்டார் சைக்கிளில் தப்பிச் செல்வது, மோட்டார் சைக்கிளின் இலக்கம் என்பன தெளிவாகப் பதிவாகியிருந்தன.

பறித்துக்கொண்டு சென்ற கைப்பையின் உள்ளே பத்தாயிரம் ரூபா பணம் மற்றும் அலைபேசி மற்றும் ஆவணங்கள் இருந்தன. அந்த அலைபேசியுடன் தொடர்பு கொண்ட உறவினர்கள், நடந்த சம்பவங்கள் மறை காணியில் பதிவாகி இருப்பதை இளைஞனுக்குத் தெரியப்படுத்தினர். நேரில் வருமாறும் தெரிவித்தனர். ஒருமணிநேர இடைவெளியில் நேரில் வந்த இளைஞன் அச்சுவேலிப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (க-11)

## தென்னிலங்கை முதியவர் குளத்தில் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம்,டிசெ.9

தென்னிலங்கையைச் சேர்ந்த முதியவர் ஒருவர் குளத்திலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் புங்கன்குளம் வண்ணான்குளத்தில் இருந்து நேற்றுக் காலை அவரது சடலம் மீட்கப்பட்டது என்று யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் கொழும்புப் பகுதியைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென்னிலங்கையில் இருந்து சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்பு யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த முதியவர், உணவகங்களில் தொழில் புரிந்து வந்துள்ளார். குளத்தில் சடலம் காணப்பட்டதை அடுத்து, பிரதேச மக்கள் யாழ்ப்பாணம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர். சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், சடலத்தை மீட்டு யாழ். போதனா மருத்துவமனையில் சடலப் பரிசோதனைக்காக ஒப்படைத்தனர். (க-106,105)

## விபத்தில் இருவர் காயம்

சாவகச்சேரி,டிசெ.9

வீதியோரத்தில் பறிக்கப்பட்டிருந்த கற்குவியலில் உந்துருளி சில்லு ஏறியதால்,அதில் பயணித்த இருவர் தூக்கி வீசப்பட்டனர். அவர்கள் இருவரும் காயமடைந்தனர்.

இந்த விபத்து கேரதீவு சங்குப்பிட்டிப் பாலத்தை அண்டிய பகுதியில் நேற்று இடம்பெற்றது. விபத்தில் காயமடைந்த சாவகச்சேரி சங்கத்தானையைச் சேர்ந்த இருவரும்,சாவகச்சேரி மருத்துவமல்னயில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-9)

# களஞ்சியப்படுத்திய இடத்திலேயே வளர்ந்துவரும் மரக்கன்றுகள்

## பகிர்ந்தளிப்பதில் தாமதம்

*அச்சுவேலி, டிசெ.9*

*மரம் நடுகை மாதத்தை முன்னிட்டு வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் மரக்கன்றுகளை நடுவதற்காகக் கொள்வனவு செய்யப்பட்ட மரக்கன்றுகள் களஞ்சியப்படுத்தப்பட்ட இடத்திலேயே வளர ஆரம்பித்துள்ளன.*

வலி.தென்மேற்குப் பிரதேச சபையால் வாங்கப்பட்ட பல நூற்றுக்கணக்கான மரக்கன்றுகள், ஒருவருடத்துக்கு மேலாகியும் உரிய இடத்தில் நடப்படாமையால் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்ட இடத்திலேயே கன்றுகள் வேருன்றி வளர்ந்து விட்டன. இந்த நிலை குறித்து விசனம் தெரிவித்துள்ள பிரதேச சபை உறுப்பினர்கள், மரக்கன்றுகளை நடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தவிசாளரைக் கோரியுள்ளனர். சுற்றுச் சூழல் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு வடமாகாண சபையின் அறிவுறுத்தலுக்கமைய வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் 28 கிராம அலுவலர் பிரிவுகளிலும், பொது இடங்களிலும், வீதியோரங்களிலும் மரக்கன்றுகளை நடுவதற்கு பிரதேச சபை முன்வந்தது. சபை நிதியிலிருந்து பல நூற்றுக்கணக்கான மரக்கன்றுகளையும் வாங்கியிருந்தது. ஆனைக்கோட்டை உப அலுவலக வளாகத்தில் மரக்கன்றுகள் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன. மரக்கன்றுகள் ஒரு வருடத்துக்கு மேலாகியும், உரிய இடங்களில் நடப்படாமையால் சகல மரக்கன்றுகளும் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்த இடத்திலேயே வேரூன்றிவிட்டன. இந்த நிலைப்பாட்டை தவிசாளருக்குச் சுட்டிக்காட்டியுள்ள உறுப்பினர்கள், மழைகாலம் முடிவடைவதற்குள் மரக்கன்றுகளை உரிய இடங்களில் நடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-115)

## வடக்கில் உள்ளூராட்சி சபைகளை தரம் உயர்த்தும் திட்டம் கிடப்பில்

யாழ்ப்பாணம்,டிசெ.9

வடக்கு மாகாணத்தில் உள்ளூராட்சி சபைகளைத் தரம் உயர்த்தும் திட்டம் கைவிடப்பட்டுள்ளது என்று சமூக ஆர்வலர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். கடந்த 15 வருடங்களுக்கு முன்னர் முன்னாள் மாவட்டச்செயலர் கே.கணேஷின் தலைமையிலான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், நல்லூர், சுன்னாகம், கரவெட்டி, மானிப்பாய், சுழிபுரம் மற்றும் புத்தூர் பிரதேச சபைகளை நகர சபையாகவும், மிகுதி பிரிபடும் பிரதேசம் பிரதேசசபையாகவும் தரம் உயர்த்துவது தொடர்பில் சிறப்புத் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. அதன் பின்னர் முன்னாள் மாவட்டச் செயலர் கே.கணேஷ் தலைமையில் மானிப்பாய், கரவெட்டி பிரதேச சபைகளைத் தரம் உயர்த்துவதற்கான நடவடிக்கைகள், யாழ். மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் (முன்னாள் திருமதி ம.வசந்தகுமார்) ஊடாக முன்னெடுக்கப்பட்டன. அதன் பின்னர் அதிகாரிகள் மாற்றம் பெற்றுச் சென்றதும், பின்வந்த அதிகாரிகளால் இந்தவிடயம் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்ஊடாகமுன்மொழிவுகள், மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சுக்கு 2019 இல் சமர்ப்பிக்கப்பட்டு அது நல்லாட்சி அரசினால் முன்னளிக்கப்படாது இருந்ததும், இது குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் நாடாளுமன்றத்தில் முன்வைத்து இருந்தமையும் யாவரும் அறிந்ததே. தற்போது வடக்கில் உள்ள உள்ளூராட்சி சபைகளில் மேற்கூறிய சபைகளுக்குத் தற்போது உறுப்பினர்கள் உள்ள போதும் பிரதேச சபைகளைத் தரம் உயர்த்துவது தொடர்பில் சபைகளின் உறுப்பினர்கள் மௌனிகளாக இருக்கின்றனர். எனவே உள்ளூராட்சி சபைகள் தரம் உயர்வு, புதிய பிரதேச செயலகங்கள், பிரதேச செயலகங்கள் இரு கூறிடுதல் போன்ற விடயங்களை முன்னெடுத்து சமூக முன்னேற்றத்துக்கான தயார்ப்படுத்தல்களை மேற்கொள்ள வேண்டியது காலத்தின் தேவையாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-50)

## தொழிற்பயிற்சி கற்கைகளுக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,டிசெ.9

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை, ஜேர்மன் அபிவிருத்திக் கூட்டிணைவு நிறுவனத்தின் அனுசரணையுடன் கட்டுமானத்துறைசார்ந்த தொழிற்பயிற்சிக் கற்கைநெறிகளை ஆரம்பிக்கவுள்ளது.

வடக்கில்அதிகரித்துவரும் கட்டுமானத்துறையில் தொழில் வல்லுநர்களுக்கான தேவையை நிவர்த்தி செய்யும் பொருட்டு காரைநகர் தொழிற்பயிற்சி நிலையத்தில்பயிற்சிகள் இன்று ஆரம்பிக்கப்படவுள்ளன. பயிற்சிக்காலத்தில்நாளாந்தம் கொடுப்பனவுடன், சான்றிதழ்கள் வழங்கப்படும். பயிற்சி நிறைவில் உபகரணத் தொகுதிமற்றும் பாதுகாப்பு அங்கிகள் வழங்கப்படும்.

இந்தக் கற்கைநெறிகளைக் கற்க விரும்புபவர்கள் தங்கள் பதிவுகளை அலுவலக நேரத்தில் மாவட்ட அலுவலகம் 4ஆம்

மாடி, வீரசிங்கம் மண்டபம், இல.12, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் அல்லது காரைநகர் தொழிற்பயிற்சி நிலையத்தில் பதிவுகளை மேற்கொள்ள முடியும் என்று இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை உதவிப் பணிப்பாளர் கு.நிரஞ்சன் அறிவித்துள்ளார். (க)

## நெற்பயிரைத் தாக்கும் மடிச்சுக்கட்டி நோய்

யாழ்ப்பாணம்,டிசெ.9

வலிகாமம் தென்மேற்கில் உள்ள நெற்பயிர்கள் வைக்கோல்களாக விரைவில் மாறவுள்ளன. அந்த அளவுக்கு அங்கு மடிச்சுக்கட்டி நோய் வேகமாகப் பரவி வருகின்றது என்று விவசாயிகள் தெரிவித்துள்ளனர். விவசாயிகள் பொருத்தமான மருந்துகளைப் பயன்படுத்தி வருகின்ற போதும் அதன் தாக்கம் குறைவடையவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. சங்குவேலி, கட்டுடை, நவாலி, வழுக்கையாறு, இடிகுண்டடி மற்றும் வடமராட்சிப் பிரதேசங்களிலும் இந்த நோய்த் தாக்கம் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த நோயின் தாக்கம் சண்டிலிப்பாய் கமநல சேவைகள் நிலையத்தின் கவனத்துக்கும், பிரதேச செயலக விவசாய பிரிவுக்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. அதேவேளை நெற்பயிர்களில் புல்லின் தாக்கம் அதிகரித்துள்ளது. விவசாயிகள் விவசாய விளைநிலங்களை கைவிட்டு விடுவதால் வலி. தென்மேற்கில் அடுத்துவரும் ஆண்டுகளில் புல்லின் தாக்கம் ஏனைய விளைநிலங்களைத் தாக்கும் அறிகுறி தோன்றி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-50)

கடும் மழை, வெள்ளப்பெருக்கு

# இடம்பெயர்ந்தோருக்கு பலரும் உதவிக் கரம்

கிளிநொச்சி, டிசெ. 9
வெள்ளப் பாதிப்பால் இடம்பெயர்ந்து இடைத் தங்கல் முகாம்களில் உள்ள மக்களை அரசியல் கட்சிகளைச் சார்ந்த பலரும் சந்தித்து தங்களாலான உதவிகளை செய்து வருகின்றனர்.
இலங்கையில் ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றம் காரணமாக கிளிநொச்சியில் மக்கள் இடம்பெயர்ந்து இடைத் தங்கல் முகாம்களில் குடியமர்ந்துள்ளனர். அந்த மக்கள் உணவு முதற்கொண்டு அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்து கொள்வதில் பெரும் இடர்பாடுகளுக்கு முகம்கொடுத்துள்ளனர்.
அவ்வாறான மக்களை அரசியல் கட்சிகளைச் சார்ந்த பலரும் சந்தித்து உதவிகளைச் செய்து வருகின்றனர்.
இவ்வாறு பாடசாலைகள் மற்றும் இடைத்தங்கல் முகாம்களில் இருக்கின்ற உறவுகளை கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் சண்முகராஜா ஜீவராசா கடந்த வெள்ளிக்கிழமை இரவு சந்தித்தார். அவர்களுக்கான இரவு நேர உலர் உணவுப் பொருள்களையும் அவர் வழங்கினார். அந்த மக்களுக்குத் தேவையான அவசர தேவைகளை கேட்டறிந்ததுடன் அந்தத் தேவைகளை தனது நண்பர்களின் உதவியுடன் நிறைவேற்றுவதாகவும் அவர் உறுதியளித்தார். (ஐ -35)





முறிகண்டி இந்துபுரம் பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களை வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகன் நேரடியாகச் சென்று பார்வையிட்டார். பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்வதற்கு நடவடிக்கைகளையும் அவர் மேற்கொண்டார். (ஐ-213)



## கலைவிழாவும் பரிசளிப்பும்

வவுனியா,டிசெ.9
வவுனியா சிட்டி கிட்ஸ் முன்பள்ளியின் வருடாந்த கலை விழாவும், பாடசாலை செல்லவுள்ள மாணவர்கள் மதிப்பளிப்பும் வவுனியா நகர சபை மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றன.
முன்பள்ளி நிர்வாக இயக்குநர் எஸ்.நந்தசீலன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி சொர்ணராஜா கலந்து கொண்டார்.
இதன்போது மாணவர்கள் மதிப்பளிக்கப்பட்டதுடன், மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ஐ)



## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவிகள்

மன்னார்,டிசெ.9
மன்னார் மாவட்டத்தில் மழையால் பாதிக்கப்பட்ட 65 குடும்பங்களுக்கு உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டன.
மன்னார் மாவட்டத்தில் பெய்த கடும் மழை காரணமாக மடு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பெரிய பண்டிவிரிச்சான் மற்றும் பாலம்பிட்டி ஆகிய பிரதேசங்களில் வெள்ளப் பாதிப்புக்கள் ஏற்பட்டன.
இதனால் சுமார் 65 வரையான குடும்பங்கள் பாடசாலைகளில் தங்க வைக்கப்பட்டன.
அவர்களுக்கு தேவையான நுளம்பு வலைகள், பாய்கள் போன்றவற்றை தமிழ் ஈழ விடுதலை இயக்கம் வழங்கியுள்ளது.
கட்சியின் தலைவரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதனின் ஏற்பாட்டில் கடந்த வெள்ளிக்கிழமை இந்த உதவிகள் நேரடியாக சென்று வழங்கப்பட்டன. (ஐ-56)



கிளிநொச்சி தருமபுரம் கிராமத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலர்உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன.
லண்டனில் வசிக்கும் கந்தப்பிள்ளை திலீபன் இதற்கான நிதி அனுசரணையை வழங்கியிருந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ- 222)

## மழையால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு கூரை விரிப்புக்கள் வழங்கல்

மன்னார்,டிசெ.9
மழையால் பாதிக்கப்பட்ட மன்னாரைச் சேர்ந்த 10 குடும்பங்களுக்கு கூரை விரிப்புக்கள் வழங்கப்பட்டன.
மன்னார் நகர்ப்பகுதியில் கடந்த சில நாள்களாகப் பெய்த கடும் மழை காரணமாக பல குடும்பங்கள் பாதிக்கப்பட்டன.
அதில் குடிசை ஒழுக்கு காரணமாக அதிகம் பாதிக்கப்பட்டவர்களுக்கு கடந்த செவ்வாய்க்கிழமை கூரை விரிப்புக்கள் வழங்கப்பட்டன.
இந்த உதவியை சமூக சேவையாளரான பெருமாள் சிவகுமாரன் வழங்கினார். (ஐ-213)



## பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகள்

வவுனியா,டிசெ.9
சீரற்ற கால நிலை காரணமாக பாதிக்கப்பட்டு வவுனியா செட்டிகுளம் இலுப்பைக்குளம் பாடசாலையில் தங்க வைக்கப்பட்டுள்ள குடும்பங்களில் உள்ள சிறுவர்களுக்கு உலருணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன.
வவுனியா வெங்கலச்செட்டிகுளம் பிரதேச செயலாளரால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக கனடா வாழ் உறவுகளினால் இந்த உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. முகாமில் தங்கியுள்ள சுமார் 50 சிறுவர்களுக்கு இவ்வாறு பால்மா பொருள்கள், பிஸ்கட் சிற்றுண்டி உணவுப் பொருள்கள் என்பன வழங்கப்பட்டன. தமிழ் விருட்சம் அமைப்பு நேரில் சென்று அவற்றைக் கையளித்தது. (ஐ)



## வெள்ளத்தால் பாதித்தோருக்கு உலர் உணவுப் பொதிகள்

கொடிகாமம்,டிசெ.9
வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலர் உணவுப் பொதிகள் அண்மையில் வழங்கப்பட்டன.
மறவன்புலவு, கைதடி நாவற்குழி தெற்கு, தனங்களப்பு ஆகிய இடங்களைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட 80 குடும்பங்களுக்கு இந்த உதவிகள் வழங்கப்பட்டன.
மறவன்புலவு,தனங்களப்பு ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்களுக்கு மறவன்புலவு பலநோக்கு கூட்டுறவு சங்க மண்டபத்தில் வைத்து வழங்கப்பட்டது.
கைதடி நாவற்குழி தெற்கு பகுதியைச் சேர்ந்தவர்களுக்கு கைதடி நாவற்குழி தெற்கு சனசமூக நிலைய மண்டபத்தில் வைத்து வழங்கப்பட்டது.
ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் லண்டன் கிளையின் நிர்வாகச் செயலர் இ.ராஜ்மோகன் தனது சொந்த நிதியில் இருந்து ஒரு லட்சம் ரூபா பெறுமதியான உணவுப் பொதிகளை வழங்கினார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-159)



## உலர் உணவு பொருள்கள் கையளிப்பு

முல்லைத்தீவு,டிசெ.9
முல்லைத்தீவு சுதந்திரபுரம், இருட்டுமடு, நெத்தலியாறு ஆகிய கிராமங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன.
சுவிஸ் நலிவடைந்தோர் உதவிச்சங்கத்தின் ஊடாக இந்த உதவிகள் அண்மையில் வழங்கப்பட்டன. (ஐ-222)



# 19ஆவது திருத்தத்தை முற்றாக நீக்குவது பொருத்தமற்ற செயல்

## இராஜாங்க அமைச்சர் வாசுதேவ கருத்து

கொழும்பு, டிசெ.9

அரசமைப்பின்19ஆவது திருத்தச் சட்டத்தை நீக்குவதைக் காட்டிலும் தேவையான பொது விடயங்களை மேலதிகமாக இணைத்துக் கொள்வதே பொருத்தமானதாக அமையும். நாடாளுமன்ற அதிகாரத்தைப் பலப்படுத்தும் இந்தச் சட்டத் திருத்தத்துக்கு ஜனநாயக இடதுசாரி முன்னணியின் கொள்கையின்படி முழுமையான ஆதரவை வழங்குவேன் என்று தெரிவித்துள்ளார் இராஜாங்க அமைச்சர் வாசுதேவ நாணயக்கார.

இது தொடர்பாக அவர் தெரிவித்ததாவது:

இடைக்கால அரசு 19ஆவது திருத்தச் சட்டத்தை இல்லாது செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றது என்று ஒரு தரப்பால் கூறப்படுகின்றது. நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவு கிடைக்குமானால் இந்தத் திருத்தம் இல்லாது செய்யப்படும் என்று அரச தரப்பில் கூறப்படுகின்றது.

19ஆவது திருத்தச் சட்டம் அரச நிர்வாகச் செயலொழுங்கு மற்றும் அதிகாரப் பிரயோகம் உள்ளிட்ட விடயங்களில் சிக்கல் நிலையை ஏற்படுத்தியுள்ளது. அதனால்தான் கடந்த அரசில் அரச தலைவர் மற்றும் தலைமை அமைச்சர் ஆகியோரிடையே அதிகாரப் பிரயோகம் தொடர்பான முறுகல் நிலை தொடர்ந்து காணப்பட்டது.

ஆனால் இந்தத் திருத்தம் பல வரவேற்கத்தக்க விடயங்களையும் கொண்டுள்ளது என்பதை அரசியல் கருத்துகளுக்கு அப்பால் ஏற்றுக்கொள்ள வேண்டும். நாடாளுமன்றத்தை அதிகார ரீதியில் பலப்படுத்துவதற்காக 19ஆவது திருத்தத்தில் பல ஏற்பாடுகள் காணப்படுகின்றன.

நாடாளுமன்றத்தின் செயற்பாட்டு ரீதியான அதிகாரங்களைப் பலப்படுத்தி நாடாளுமன்றத்தைப் பலம் மிக்கதாக்க வேண்டும் என்பது ஜனநாயக இடதுசாரி முன்னணியின் கொள்கையாக உள்ளதால் கட்சியின் கொள்கையின்படி இந்த விடயங்களுக்கு ஆதரவு வழங்குவோம்.

19ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நீக்குவதைக் காட்டிலும் விமர்சனங்களுக்கு உட்படுத்தப்பட்ட ஏற்பாடுகள் தொடர்பாக ஒரு தீர்வை முன்வைத்துத் தேவையான விடயங்களை மேலதிகமாக இணைத்துக் கொள்வதே தற்போதைய சூழ்நிலைக்குப் பொருத்தமாக அமையும்- என்றார். (எ-61)



# சஜித்தை எதிர்க்கட்சித் தலைவராக அறிவிப்பதைப் பிற்போடக் கூடாது

## வலியுறுத்துகின்றார் திஸ்ஸ

கொழும்பு, டிசெ.9

பெரும்பான்மை மற்றும் ஏகமனதான முடிவுக்கமைய எதிர்க்கட்சித் தலைவராக சஜித் பிரேமதாச தெரிவு செய்யப்பட்டுள்ளமையை சபாநாயகர் ஏற்றுக் கொண்டுள்ளார்.

சம்பிரதாயங்களைக் காரணம் காட்டி சஜித் பிரேமதாசவை எதிர்க்கட்சித் தலைவராக உத்தியோகபூர்வமாக அறிவிப்பதைக் காலம் தாழ்த்தினால் அது தவறானது.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பெரும்பான்மை மற்றும் ஏகமனதாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. யாரேனும் ஒருவர் சம்பிரதாயங்களைக் காரணம் காட்டி அதைக் காலதாமதம் செய்வாராக இருந்தால் அரசமைப்புப் பேரவையின் கடமைகளை அவர் மீறுகின்றார் என்றே கருத வேண்டியுள்ளது.

அடுத்த அரசமைப்புப் பேரவை கூடும்போது எதிர்க்கட்சித் தலைவருக்கான உறுப்புரிமை வழங்க வேண்டியது கட்டாயமானதாகும்.

அந்தப் பொறுப்பை மீறிச் சம்பிரதாயம் என்ற அடிப்படையில் அல்லது நாடாளுமன்றத்தால் அறிவித்தல் விடுத்து எதிர்க்கட்சித் தலைவரை அழைக்காதுவிட்டால் அது தவறானதாகும்.

எதிர்க்கட்சித் தலைவர் நியமிக்கப்பட்டிருப்பாராயின் அவருக்கான அழைப்பு விடுக்கப்பட வேண்டும். நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவராக சஜித் பிரேமதாசவை ஏற்றுக் கொள்வதாக சபாநாயகர் அறிக்கை விடுத்துள்ளார்.

அதற்கு அப்பால் நாடாளுமன்றம் கூடும்வரை அவர் பார்த்துக்கொண்டிருந்தால் அல்லது நாடாளுமன்றத்தின் ஊடாக வேறு ஏதேனும் நடவடிக்கைகள் இடம்பெறும்வரை அவர் காத்திருந்தால் அது தவறானதாகும்- என்றார். (எ-31)

# சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிக்கு மேலதிக பதவி

கொழும்பு, டிசெ.9

சட்டமா அதிபர் தப்புல டி லிவேராவின் ஊடகத் தொடர்பாளராகவும், பேச்சாளருமாகச் செயற்படும் அரச சட்டத்தரணி நிஷாரா ஜயரத்ன, அந்தப் பதவிக்கு மேலதிகமாக அரச தலைவர் செயலகத்தின் மேலதிக செயலாளராக (சட்டம்) நியமிக்கப்பட்டுள்ளார்.

சட்ட மா அதிபர் திணைக்களத்தில் அரச சட்டத்தரணி நிஷார முன்னெடுக்கும் கடமைகளுக்கு மேலதிகமாக, பகுதி நேரமாக அரச தலைவர் செய்லகத்தின் சட்டம் தொடர்பிலான பதில் மேலதிக செயலராக அவர் செயற்படுவார் எனச் சட்ட மா அதிபர் திணைக்களத்தின் நிர்வாக விடயங்களுக்கு பொறுப்பாக புதிதாக நியமிக்கப்பட்டுள்ள மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் அரச தலைவர் சட்டத்தரணி சுமதி தர்மவர்தன சுற்றறிக்கை ஊடாக சட்ட மா அதிபர் திணைக்களத்தின் அனைத்து அதிகாரிகளுக்கும் அறிவித்துள்ளார்.

2019ஆம் ஆண்டின் 65ஆம் இலக்க சுற்றறிக்கை ஊடாக அவர் இந்த விடயத்தை அறிவித்துள்ளார்.

அரச தலைவர் கோத்தபாய ராஜபக்ச பதவி ஏற்றதும் சட்ட மா அதிபர் திணைக்களத்தின் செயற்பாடுகள் சற்று மந்தகதியடைந்துள்ளன என்று சட்ட வல்லுநர்கள் பலரும் குற்றம் சுமத்தியுள்ள நிலையில், சுயாதீன நிறுவனமான சட்ட மா அதிபர் திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் அரச தலைவர் செயலகத்தின் மேலதிக பணிக்காக அமர்த்தப்பட்டுள்ளார்.

அதேவேளை, சட்ட மா அதிபர் திணைக்களத்தின் மற்றொரு அரச சட்டவாதியான இந்துனி புஞ்சிஹேவா, தலைமை அமைச்சர் அலுவலகத்தின் மேலதிக செயலர்களில் ஒருவராக நியமிக்கப்பட்டுள்ளார். (எ-61)



இலங்கைக்கான சீனத் தூதுவர் செங் சுவான் முன்னாள் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவை நேற்று முன்தினம் சந்தித்துள்ளார். முன்னாள் அரச தலைவரின் எதிர்கால திட்டங்கள் தொடர்பாக தனது வாழ்த்துக்களையும் சீனத் தூதுவர் தெரிவித்தார் என்று கூறப்பட்டுள்ளது. (எ)

# தேர்தலுக்கான கட்டுப்பணம் எதிர்காலத்தில் அதிகரிக்கும்

கொழும்பு, டிசெ.9

எதிர்காலத்தில் நடக்கும் தேர்தல்களில் போட்டியிடும் வேட்பாளர்கள் தேர்தல் ஆணைக்குழுவுக்குச் செலுத்த வேண்டிய கட்டுப்பணம் மற்றும் ஏனைய கட்டணங்கள் எதிர்காலத்தில் அதிகரிக்கப்படவுள்ளன. அதற்கான சட்ட வரைபு நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

அரச தலைவர் தேர்தலில் போட்டியிடும் சுயேச்சை வேட்பாளர் செலுத்த வேண்டிய கட்டுப்பணம் 30 இலட்சம் ரூபாவாகவும், ஏற்றுக் கொள்ளப்பட்ட அரசியல் கட்சி வேட்பாளர் செலுத்த வேண்டிய கட்டுப்பணம் 25 இலட்சம் ரூபாவாகவும் அதிகரிக்கப்படவுள்ளன என்று கூறப்படுகின்றது.

பொதுத் தேர்தலில் போட்டியிடும் சுயேச்சை வேட்பாளர் 12 ஆயிரத்து 500 ரூபாவையும், அரசியல் கட்சி வேட்பாளர் 7 ஆயிரத்து 500 ரூபாவையும் கட்டுப்பணமாகச் செலுத்த வேண்டும்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் சுயேச்சை வேட்பாளர் 10 ஆயிரம் ரூபாவையும், அரசியல் கட்சி வேட்பாளர் 7 ஆயிரத்து 500 ரூபாவையும் கட்டுப்பணமாகச் செலுத்த வேண்டும் என்றும் சட்டத்தில் மாற்றம் கொண்டுவரத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று தேர்தல்கள் ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (எ)

# 30 தூதுவர்களது பதவிகளுக்கு வேட்டு?

வெளிநாடுகளில் தூதுவர்களாகக் கடமையாற்றும் 30 இலங்கையர்களின் சேவையை முடிவுக்கு கொண்டு வர வெளிவிவகார அமைச்சு தீர்மானித்துள்ளது என்று தெரியவருகின்றது.

தூதுவர்கள் அனைவரும் டிசெம்பர் 30ஆம் திகதிக்குள் இலங்கை திரும்புமாறு அறிவிக்கப்பட்டுள்ளது என்றும், கடந்த அரசில் அரசியல் மற்றும் தனிப்பட்ட நெருக்கம் காரணமாக தூதுவர்களாக நியமிக்கப்பட்டவர்களையே திருப்பி அழைக்க அரசு தீர்மானித்துள்ளது என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்தத் தூதுவர்கள் தமது கடமைகளைச் சரியாக செய்தனரா என்பதை கண்டறிய விசாரணைகளை நடத்தவும் வெளிவிவகார அமைச்சு தீர்மானித்துள்ளது. தூதுவர்கள் நீக்கப்படுவதால், ஏற்படும் வெற்றிடங்களுக்குப் புதிய தூதுவர்களை அடுத்தாண்டு ஜனவரி மாத இறுதிக்குள் நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் கூறப்படுகின்றது. (எ)

# ஜனநாயகத்தை நசுக்கிவிடாமல் வாழ்வுரிமையைப் பேணுங்கள்

*புதிய அரசிடம் வலியுறுத்துகின்றது தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கம்*

தலைமன்னார், டிசெ. 9

ஆட்சியாளர்கள் ஜனநாயகத்தை நசுக்காமல் வலுக் குன்றாத சாமானிய தனி மனித வாழ்வுரிமை இருப்பை நிலை நிறுத்த வேண்டும். இந்த விடயத்தில் மனித உரிமை ஆர்வலர்களும் சிவில் அமைப்புக்களும் கரிசனை கொள்ளவேண்டும் என்று தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கம் வலியுறுத்தியுள்ளது.

இது பற்றி அந்த இயக்கம் அனுப்பிய செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஆட்சி மாற்றத்தின் பின்னர் நாட்டின் ஜனநாயக விரோத நகர்வுகள் தாராளமாகவேயுள்ளன. நீண்ட காலமாக போரின் பிடிக்குள் அகப்பட்டிருந்த மக்களை மீண்டும் அச்சமூட்டும் சூழலுக்குள் இது இட்டுச் செல்வதாகவே உணர்கின்றோம். புதிய அரசதலைவர் பதவியேற்று ஒரு மாதம் ஆகின்றபோதும், நாட்டில் பாதுகாப்பு மற்றும் சட்டம், ஒழுங்கு அமைச்சர் நியமிக்கப்படவில்லை. அமைச்சர்களுக்கான துறைகள் இன்னும் அரசிதழில் வெளியிடப்படவில்லை. பத்தொன்பதாவது திருத்தத்தின் பிரகாரம் அரசதலைவர் அமைச்சுப் பதவிகளை வகிக்க முடியாது என்று கூறப்படுகின்றது.

அப்படியாயின் இந்த நாட்டில் தற்போது சட்ட ஆட்சி நடைபெறவில்லையா? ஜனநாயக ஆட்சி அதிகாரத்தின் முதுகெலும்பு அரசமைப்பு. இதை மீறுவது சட்ட ஆட்சித் தத்துவத்துக்குச் சாவு மணியடிக்கும் ஜனநாயகப் படுகொலை அல்லவா? ரணிலுக்காக பத்தொன்பதாவது திருத்தத்தை மேற்கொண்டதில் முதன்மையாக இருந்த நாடாளுமன்ற உறுப்பினர்களான சட்டத்தரணி கலாநிதி ஜெயம்பதி விக்கிரமரட்ண, எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் அமைதியாக இருப்பதும் வேடிக்கையாகவுள்ளது.

கடந்த வருடம் ஒக்ரோபர் புரட்சியின்போது இலங்கையின் ஜனநாயகத்தைப் பாதுகாக்கப் போகின்றோம் என்று நீதிமன்றம் சென்ற சட்டத்தரணிகளும், சிவில் அமைப்புக்களும் அமைதி கொள்வதன் சூழ்ச்சி என்ன? நாட்டின் இறைமையைப் பாதுகாப்பதே அரசியல் அமைப்புதானே! அதைக் கேள்விக்குட்படுத்த முடியுமா? எதிர்க்கட்சிகளும் சிங்கள முற்போக்குவாதிகளும் கல்வியியலாளர்களும் ஏன் அமைதியாக இருக்கிறார்கள் என்பதே புரியாத புதிராக உள்ளது.

இராணுவப் பிரசன்னத்தை நோக்கி ஜனநாயக ஆட்சி முறை நகர்த்தப்படுகின்றதா? என்ற ஐயம் எழுகின்றது. இராணுவத்துக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அரச நியமன விதிமுறைகளை மீறி அரச புலனாய்வுத்துறைப் பணிப்பாளராக இராணுவ பிரிகேடியர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். இன்னும் பல துறைகளுக்கு இராணுவத்தினர் நியமிக்கப்படவுள்ளனர் என்று அறிகின்றோம். அரச அலுவலகங்களுக்குச் சென்று இராணுவம் அரசியல்வாதிகளின் படங்களை வலுக்கட்டாயமாக அகற்றுகின்றது. தமிழர் தாயகமெங்கும் இராணுவத்தினர் காவலரண்களையும் வீதிச் சோதனைச் சாவடிகளையும் அமைந்துள்ளனர். சுவிஸ் தூதரகப் பணியாளர் கடத்தல் விவகாரம் உட்பட இவை எல்லாம் இராணுவ மயமாக்கலையே கோடி காட்டுகின்றன.

இந்த நாட்டில் அரசமைப்பின் அடிப்படையில் ஜனநாயகத்தின் பிரகாரம் சட்ட ஆட்சி நடைபெற வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பும் வேண்டுகையும் ஆகும். ஆட்சியாளர்கள் ஜனநாயகத்தை நசுக்காமல் வலுக் குன்றாத சாமானிய தனி மனித வாழ்வுரிமை இருப்பை நிலை நிறுத்த வேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம். என்றுள்ளது. (த)

# நிறைவேற்று அதிகார ஒழிப்பு தொடர்பில் பேசமுடியா நிலை

## *ஜே.வி.பி. விசனம்*



கொழும்பு, டிசெ.9

நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரச தலைவர் முறைமையை நீக்குவது தொடர்பாகப் பேசும் சூழல் நீக்கப்பட்டுள்ளது என்று மக்கள் விடுதலை முன்னணி விசனம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி கருத்துத் தெரிவித்த போது இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த ஏப்ரல் 21 பயங்கரவாத தாக்குதலுடன் தேசிய பாதுகாப்பு என்ற கருத்தை உயர்த்திக் கொண்டு சென்றதால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

அதனால் நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரச தலைவர் முறைமையை நீக்குவது தொடர்பில் எவரும் பேச முடியாது. எது எப்படிப் போனாலும் அரசமைப்பின் 19 ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் நாட்டுக்கு கிடைத்த ஜனநாயக ரீதியிலான சுயாதீன ஆணைக்குழுக்களைப் பாதுகாப்பது அவசியமாகும்.- என்றார். (எ)

# நிலக்சன் ஞாபகார்த்த விருதை அன்ட்கேசிகா பெற்றுக்கொண்டார்

யாழ்ப்பாணம், டிசெ. 9

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக பட்டமளிப்பு விழாவில் ஊடகத்துறையில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற மாணவருக்காக தங்கப் பதக்கம் விருது நேற்றுமுன்தினம் நடந்த பட்டமளிப்பில் வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் ஊடக மாணவனும் ஊடகவியலாளருமான அமரர் சகாதேவன் நிலக்சன் ஞாபகார்த்த தங்கப் பதக்கமாக செல்வி அன்ட்கேசிகா லோ றன்ஸ் ராஜ்குமாருக்கு வழங்கப்பட்டது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஊடக மாணவனாகப் படித்துக் கொண்டு ஊடகவியலாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்த நிலக்சன் 2007 ஆம் ஆண்டு ஆவணி மாதம் முதலாம் திகதி அதிகாலை 5 மணியளவில் அவருடைய வீடு புகுந்த ஆயுததாரிகள் நிலக்சனின் பெற்றோர் முன்பாகவே துப்பாக்கிச் சூடு நடத்திப் படுகொலை செய்திருந்தனர்.

அவருடைய ஞாபகார்த்தமாக யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் அவருடன் ஒன்றாய்க் கற்ற 2004 உயர்தர மாணவர்களால் 'நிலா நிதியம்' ஊடாக விருது வழங்கப்படுகின்றது.

இந்த நிதியத்தின் ஆரம்ப நிகழ்வாக சான்றிதழ் 2017 ஆம் ஆண்டு நடைபெற்ற நிலக்சனின் 10ஆம் ஆண்டு நினை வேந்தலின்போது யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கலைப் பீடாதிபதியிடம் கையளிக்கப்பட்டு பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திடம் நிதி கையளிக்கப்பட்டது.

அமரர் சகாதேவன் நிலக்சன் ஞாபகார்த்த தங்கப் பதக்கம் கடந்த ஆண்டு தொடக்கம் வழங்கப்பட்டு வருகின்றது.

கடந்த வருடம் பல்கலைக்கழகத்தில் கற்ற மாணவி தினேஸ் விஜயதர்சினி விருதைப் பெற்றுக் கொண்டிருந்தார். (த)

# சிறிய கலவரங்களை பெரிதாக்கி சிலர் பணம் சம்பாதிக்கின்றனர்

## பியநந்த தேரர் குற்றச்சாட்டு



கொழும்பு, டிசெ.9

நாட்டில் நடக்கும் சிறிய இனக் கலவரத்தையும் காணொலியாக எடுத்து வெளிநாட்டுக்கு அனுப்பி அதன் ஊடாகப் பணம் சம்பாதிக்கும் நடவடிக்கையைச் சில அரசியல்வாதிகள் மேற்கொண்டுள்ளனர் என்று அமெரிக்காவின் லொஸ் ஏஞ்ஜல்ஸ் நகர சிறிலங்கா பௌத்த விகாரையின் விகாராதிபதி வல்பொல பியநந்த தேரர் தெரிவித்துள்ளார்.

தனியார் ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

முஸ்லிம் அரசியல்வாதிகள் செய்வது ஒரு வியாபாரம். அவர்கள் மத்திய கிழக்கு நாடுகளுக்கும், அடிப்படைவாதக் குழுக்களுக்கும் வேண்டிய பிரகாரமே செயற்படுகின்றனர். இலங்கையில் இடம்பெறும் சிறிய ஒரு இனக் கலவரத்தைக் கூட காணொலியாக எடுத்து வெளிநாட்டுக்கு அனுப்பினால், அந்த அரசியல்வாதிகளுக்கு கோடிக் கணக்கில் பணம் கிடைக்கின்றது.

அதேபோன்று அரசியல் மாற்றமொன்று வரும்போது இலங்கையிலுள்ள முஸ்லிம் அரசியல்வாதிகளும், அவர்களது செயலாளர்களும் அரசியல் புகலிடம் வேண்டி ஐரோப்பிய நாடுகளிடம் செல்கின்றனர்.

முஸ்லிம் அரசியல்வாதிகள் மட்டுமல்லர், தமிழ் அரசியல்வாதிகளும் இதனையே செய்கின்றனர். கனடாவின் டொரொன்டோ நகரில் இலங்கைத் தமிழ் மக்கள் இலட்சக் கணக்கில் உள்ளனர். அவர்களில் பெரும்பாலானவர்கள் அரசியல் புகலிடம் கோரி அந்த நாட்டுக்குச் சென்றவர்கள். அவர்கள் பொய்யான தகவல்களைக் கூறுகின்றனர்.

அந்த நாட்டு அதிகாரிகள் இலங்கை மக்களின் குள்ளநரித்தனம் பற்றி அறிந்தவர்கள் அல்லர். அந்த நாடுகளிலுள்ள தமிழ் மக்கள் எமது நாட்டில் இடம்பெறும் இனவாத கலவரக் காணொலிகளைக் காட்டிப் புகலிடக் கோரிக்கைகளை முன்வைக்கின்றனர். அதனால் ஐரோப்பாவிலுள்ள மக்கள் எமது நாட்டுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளவும் பயப்படுகின்றனர். எமது விகாரைக்கு வரும் அமெரிக்கர்கள் என்னிடம் இதைக் கூறியுள்ளனர். இது ஓர் ஆபத்தான நிலைமையாகும். -என்றார். (எ)

# புதிய அரசின் கொள்கையால் சுற்றுலாத்துறை முன்னேறும்

## *அமைச்சர் பிரசன்ன கூறுகின்றார்*

புதிய அரசின் கொள்கை அறிக்கை சுற்றுலாத் துறையின் வளர்ச்சிக்கு அதிக வாய்ப்புக்களை ஏற்படுத்தியுள்ளது என்று சுற்றுலா மற்றும் வானூர்திச் சேவைகள் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.



சுற்றுலா மற்றும் வானூர்திச் சேவைகள் அமைச்சில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சான்றிதழ் வழங்கும் நிகழ்வொன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

எதிர்காலத்தில் ஆயிரம்கோடி அமெரிக்க டொலர் வருமானத்தை ஈட்டுவ்தே எமது நோக்கம். எதிர்வரும் 2020- 2025ஆம் ஆண்டு காலப்பகுதிக்குள் இந்த இலக்கை எட்டுவதே எமது இலக்கு. அதற்கான வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன-என்றார். (எ)

# கொன்சவேடிவ் கட்சியின் கருத்து அரசியல் நாடகமே

## கெஹலிய ரம்புக்வெல தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.9



இலங்கையில் இரு இராஜ்ஜிங்கள் உருவாக ஒத்துழைப்பு வழங்கப்படும் என்ற பிரிட்டன் கொன்சவேடிவ் கட்சியின் நிலைப்பாடானது அரசியல் நாடகத்தையே வெளிக்காட்டுகின்றது என்று இராஜாங்க அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

கண்டியில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான ராஜித சேனாரத்ன சுவிஸ் தூதரக அதிகாரி கடத்தப்பட்டார் எனக் கூறப்படும் சம்பவம் தொடர்பாகக் கருத்துக்களை வெளியிட்டிருந்தார்.

ஜெனிவா தீர்மானத்துக்கு அமைவாகப் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு மருத்துவ பரிசோதனை மேற்கொள்ள வேண்டியது அத்தியாவசியமான ஒன்றாகும். ஆனால் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்க ஒத்துழைப்பு வழங்கப்படவில்லை. நேரில் பார்த்ததைப் போன்றுதான் ராஜித சேனாரத்ன கருத்து வெளியிட்டிருந்தார்.

அவரிடம் சாட்சி பெற்றுக்கொள்வதும் முக்கியமானதாகும். அவரது கருத்துக்கள் பன்னாட்டு ரீதியாக அரசு தொடர்பான பிழையான எண்ணத்தை ஏற்படுத்துகிறது. இவ்வாறு இலங்கை தொடர்பான தேவையில்லாத மற்றும் பொய்யான கருத்துக்கள் ஏற்பட்டமைக்கு இவரும்தான் பொறுப்புக்கூறவேண்டும்.

இது தொடர்பாக இவரிடம் நிச்சயமாக வாக்குமூலம் பெற்றுக்கொள்ள வேண்டும். அதேநேரம் இன்னுமொரு விடயத்தையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். பிரிட்டனின் கொன்சவேடிவ் கட்சியின் பொதுத் தேர்தலுக்கான விஞ்ஞாபனத்தில் 53ஆவது பக்கத்தில் இலங்கையில் இரண்டு இராஜ்ஜியங்கள் உருவாக ஒத்துழைப்பு வழங்கப்படும் என மிகத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

இவர்கள்தான் அன்றிலிருந்து ஜனநாயகம் தொடர்பாக பேசி வருகிறார்கள். இலங்கைக்கு எதிராக இவர்கள் இவ்வாறு செயற்படுவது ஒன்றும் புதிய விடயமல்ல.

இது தொடர்பாக இலங்கை அயலுறவு அமைச்சும் நடவடிக்கை எடுத்துள்ளது. இது முற்றுமுழுவதும் அரசியல் நோக்கத்துக்காக மேற்கொள்ளப்பட்ட ஒரு நாடகமாகும். இந்த அரச தலைவர் தேர்தலில் பிரிவினைவாதிகள் தோல்வியடைந்துள்ளார்கள். இதனை அனைவரும் உணர்வார்கள்.

நாம் 30 வருடப் போரை இல்லாது செய்தவர்கள். எம்மால் எதிர்காலத்தில் சிறப்பான ஆட்சியைக் கொண்டு செல்ல முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது. தற்போது பொதுத் தேர்தலுக்குத்தான் நாம் ஆயத்தமாகி வருகிறோம். பெரும்பாலும் எமது வெற்றிச் சின்னத்தில்தான் நாம் களமிறங்குவோம். இதில் எவ்வித இடையூறுகளும் ஏற்படா என நாம் உறுதியாக நம்புகிறோம். - என்றார். (எ)

# 19ஆவது திருத்தத்தை நீக்க மகிந்த ராஜபக்ச விரும்பார்

## செல்வம் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.9

அரச தலைவர் கோத்தபாய ராஜபக்ச 19ஆவது திருத்தத்தை இல்லாது செய்ய முயன்றால், தலைமை அமைச்சரின் அதிகாரங்கள் குறைக்கப்படும். தற்போதைய தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்ச அதற்கு உடன்படுவாரா என்பது சந்தேகம்தான் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

அதிகாரங்களுடன் அரச தலைவராகப் பதவி வகித்த மகிந்த ராஜபக்ச அதிகாரங்களற்ற பொம்மைத் தலைமை அமைச்சராக இருக்க விரும்ப மாட்டார். 19ஆவது திருத்தத்தை ஒழிப்பதற்கான முயற்சியில் அவர்களுக்கு இடையே பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புண்டு.

பெரும்பான்மையினத்தவர்களின் வாக்குகளால் தெரிவானவர் பதவியேற்று இருவாரங்களுக்கு மேலாகியுள்ள நிலையில் அவர் வடக்கு, கிழக்கு மக்களின் தேவைகள், பிரச்சினைகள் தொடர்பில் அதிக அக்கறை காண்பிப்பதாகத் தெரியவில்லை. புதிய அரசு பதவியேற்றுள்ள குறுகிய காலத்தில் சிங்களவர்களின் மனங்களைக் குளிர்விப்பதற்கே அவர்கள் முயற்சிப்பார்கள். தமிழ் மக்கள் சார்ந்து ஏதேனும் செய்தால் சிங்களவர்கள் மனஸ்தாபம் அடைவார்கள் என்று ஆட்சிப் பீடம் கருதுகின்றது.

எதிர்க்கட்சித் தலைவராகச் சஜித் பிரேமதாச நியமிக்கப்பட்டுள்ளார். எதிரணியிலுள்ள கூட்டமைப்பும் அவருடன் இணைந்து பணியாற்றத் தயாராக உள்ளது. ஆனால் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர், எதிர்க்கட்சித் தலைவர் விவகாரங்கள் தொடர்பில் எம்மால் கருத்துத் தெரிவிக்க முடியாது. அது கூட்டமைப்புக்குச் சம்பந்தம் இல்லாத விடயம்.

அரச தலைவர் கோத்தபாய ராஜபக்சவுடனான முதலாவது சந்திப்பில் இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தின்படி அதிகபட்ச அதிகாரங்களை வழங்கி அதை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளமை மகிழ்ச்சியளிக்கின்றது. அதை வரவேற்கின்றோம். தமிழ்களுக்கான அரசியல் தீர்வு விடயத்தில் இந்தியாவைப் புறந்தள்ளி எம்மால் எதையும் சாதித்து விடக் கூடாது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். அதைப் போன்று இந்திய இலங்கை உடன்படிக்கையின்படி தீர்வுக்கான அழுத்தத்தை வழங்க வேண்டிய தார்மீகப் பொறுப்பு இந்தியாவுக்கு உண்டு. - என்றார். (எ-31)

# எரிபொருள் விலைச் சூத்திரம் தொடர்பாக முடிவில்லை

கொழும்பு, நவ.9

மாதாந்த எரிபொருள் விலைச் சூத்திரத்தைச் செயற்படுத்துவது தொடர்பாகவோ அல்லது இரத்துச் செய்வது தொடர்பாகவோ இறுதி முடிவு எடுக்கப்படவில்லை என்று நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் எதிர்காலத்தில் கலந்துரையாடி இறுதி முடிவு எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் வில்லச் சூத்திரம் கடந்த அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது. உலக சந்தையில் எரிபொருள் விலை அதிகரிப்பு, குறைவுக்கு ஏற்ப மாதாந்தம் 10ஆம் திகதி இலங்கையில் எரிபொருள் விலைகளில் மாற்றம் செய்யப்பட்டு வந்தது. தற்போது புதிய அரசு பதவிக்கு வந்த நிலையில், கடந்த அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட எரிபொருள் விலைச் சூத்திரத்தை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று மின்சக்தி எரிசக்தி அமைச்சராகப் பதவியேற்ற மகிந்த அமரவீர தெரிவித்திருந்தார். (எ)

# பொதுச் சின்னம் தொடர்பாக கட்சித் தலைவர்களே முடிவு

## லசந்த அழகியவண்ண தெரிவிப்பு

பொதுத் தேர்தலில் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் முன்மொழியவுள்ள சின்னம் தொடர்பாகத் தனிப்பட்ட கருத்துக்களை வெளியிடுவதில் பயனில்லை என்று இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்துள்ளார்.

நாட்டில் நடைபெறவுள்ள பொதுத் தேர்தல் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

பொதுத் தேர்தலில் வெற்றி பெறும் நோக்குடன் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியும் இணைந்து ஒரு பொது இலக்கை நோக்கிச் செயற்பட வேண்டிய தேவை காணப்படுகின்றது. இரு கட்சிகளினதும் தலைவர்கள், புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளனர். அவர்கள் கூடி எடுக்கும் தீர்மானமே முடிவாக இருக்கும். கட்சியிலுள்ள பிரதிநிதிகளான நாம் கட்சித் தலைவர் மீது பொறுப்பை ஒப்படைத்துள்ளோம். ஏனையவர்களும் அவ்வாறு செயற்படுவதுதான் பொருத்தமானது. தனிப்பட்ட கருத்துக்களைத் தெரிவிப்பதில் எந்தப் பயனும் இல்லை. - என்றார். (எ)

# தூதரகப் பணியாளர் கடத்தல் திட்டமிட்ட போலி நாடகமாம்!

கொழும்பு, டிசெ.9

இலங்கையில் உள்ள சுவிஸ் தூதரகத்தில் பணியாற்றும் ஊழியர் கடத்தப்பட்டார் என்று கூறப்படும் சம்பவம் நாட்டுக்கு அவப் பெயரை ஏற்படுத்துவதற்காக அரங்கேற்றப்பட்ட ஒரு போலியான நாடகமாகும் என்று பயணிகள் போக்குவரத்து, மின்சக்தி, சக்திவலு அமைச்சர் மகிந்த அமரவீர குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்னவிடமும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

அரசுக்கும் இது ஒரு பிரச்சினையாகும். நீதிமன்றம் இந்த விடயம் தொடர்பாக ஒரு நிலைப்பாட்டை முன்வைத்திருக்கின்றது. ஆனால் இந்தச் சம்பவம் தொடர்பாக அறிந்த ஒரேயொரு இலங்கையர் ராஜித மாத்திரமே என்று எண்ணத் தோன்றுகின்றது. கடத்தப்பட்டார் என்று கூறப்படும் அந்தப் பணியாளரை அவர் சந்தித்துள்ளார் என்றும் கூறியிருக்கின்றார்.

சுவிஸ் தூதரகப் பெண் ஊழியர் கடத்தப்பட்டார் என்று கூறப்படும் சம்பவம் நாட்டுக்கு அவப் பெயரை ஏற்படுத்துவதற்காக அரங்கேற்றப்பட்ட நாடகமாகும். அதில் எந்தவித உண்மையும் இல்லை. இந்த விடயம் தொடர்பாக நாம் பன்னாடுகளுக்குத் தெளிவுபடுத்துவோம். அவ்வாறான போலியான நாடகத்தில் சுவிஸ் தூதரகமும், தூதரக ஊழியரும் தொடர்புபட்டிருப்பார்களேயானால் அவர்கள் தொடர்பாக அரசு என்ற ரீதியில் முறையான நடவடிக்கை முன்னெடுக்கப்படும். இராஜதந்திரச் சலுகைகளைப் பயன்படுத்தி நாட்டுக்குப் பாதகமான செயல்களைச் செய்வதற்கும், நாட்டுக்கு அவப் பெயரை ஏற்படுத்துவதற்கும் யாருக்கும் அதிகாரம் கிடையாது. இந்த விடயம் தொடர்பாகத் தீர்க்கமாக ஆராய்ந்து வெகு விரைவில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். - என்றார். (எ-61)

# 50 மில்லியன் ரூபாவை உடனடியாக வழங்கவும்

## மாவட்ட நீரியல்வளத்துறைத் திணைக்கள பணிப்பாளர் அமைச்சருக்குக் கடிதம்

யாழ்ப்பாணம், டிசெ. 9

மன்னார் மாவட்ட மீனவர்களின் வாழ்வாதாரத்துக்காக உடனடியாக 5 கோடி ரூபா பெறுமதியான பொருள்களை வழங்க வேண்டும் என்று மீன்பிடி நீரியல்வளத்துறை அமைச்சரிடம் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறைப் பிரதிப் பணிப்பாளர் ஏ. விக்கிரமசிங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

மன்னார் மாவட்டத்தின் அபிவிருத்திக் குழுக் கூட்டம் நாளை நடைபெறவுள்ள நிலையில், இந்த விடயத்தையும் கருத்திற் கொள்ளுமாறு கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

குறித்த துறைசார் அமைச்சருக்கும் மாவட்டச் செயலகத்துக்கும் அனுப்பிய கடிதத்தில் இந்த விடயம் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளன.

இலங்கையின் ஏனைய மாவட்டங்களைவிடவும் கடந்த ஆண்டு குறைந்தளவிலான ஒதுக்கீடுகளே எமக்குக் கிடைத்துள்ளது. அதிலும் குறிப்பாக மீனவர்கள் நலன் சார் திட்டங்களான கழிப்பறை வசதிக்காக 6.75 மில்லியனும் வீட்டுத் திருத்தத்துக்காக 1.4 மில்லியனும் மட்டுமே ஒதுக்கப்பட்டது. இதனால் எமது மாவட்டத்துக்கான தேவை அதிகமாகவே உள்ளது. இதன் காரணமாக மன்னார் மாவட்டத்துக்கு கீழ் வரும் தேவைகளை உடன் பெற்றுக்கொள்ள ஆவன செய்யுமாறு கோருகின்றோம்.

இயந்திரப் படகுகள் 100. அதற்கான வெளி இணைப்பு இயந்திரம் 100. மிதப்பைகள் 100 என்பன அவசியமாகத் தேவைப்படுகின்றன. கல்வனைஸ் பைப், நடுவதனைத் தடைசெய்ய வேண்டும். அதே போன்று கடல் நீர் தரைக்குள் வருவதால் ஏற்படும் உவர்நீரைத் தடுப்பதற்காகத் தடுப்பணைகள் அமைக்கப்பட வேண்டும்.

கோடை காலத்தில் வாய்க்கால் அமைக்கும் பணி உடனடியாக 2 கிலோமீற்றர் தூரத்துக்கு அமைக்கப்பட வேண்டும். கரையோரப் பகுதிகளை வன உயிரினங்கள் திணைக்களத்திடமிருந்து விடுவிக்க வேண்டும்.

இவ்வாறான பணிகளுக்கு அடுத்த ஆண்டில் அதிக நிதி தேவைப்படும் நிலையில் குறைந்த பட்சம் 50 மில்லியன் ரூபாவையேனும் பெற்றுத் தர நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்று கடிதத்தில் கோரப்பட்டுள்ளது. (த-105)

## விபத்தில் தம்பதி காயம்

சாவகச்சேரி,டிசெ.9

வெள்ளம்வெளியேறுவதற்காக வெட்டப்பட்டிருந்த பள்ளத்தில் உந்துருளி சில்லு இறங்கியதால், அதில் பயணித்த கணவனும், மனைவியும் காயமடைந்தனர் இந்தவிபத்துஎழுதுமட்டுவாழ் பகுதியில் ஏ-9 முதன்மை வீதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

கோப்பாய் இருபாலையில் உள்ள வீட்டுக்குத் திரும்புகையில் விபத்து இடம்பெற்றது.

இருபாலைத் தெற்கைச் சேர்ந்தகணவன்மனைவி காயமடைந்தனர். அவர்கள் சாவகச்சேரிமருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். (சு-9)

## சனசமூக நிலையத்துக்கு அடிக்கல்

வவுனியா, டிசெ.8

வவுனியா சகாயமாதாபுரத்தில் சனசமூக நிலையமொன்றை அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தானின் 20 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டின் கீழ் சனசமூக நிலையம் அமைக்கப்படவுள்ளது.

நிகழ்வில் வவுனியா நகரசபை பிரதித் தவிசாளர் ச.குமாரசாமி, வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை பிரதித் தவிசாளர் மகேந்திரன், வேலைத்திட்டத்துக்கான பொறியியலாளர்கள், அபிவிருத்தி அலுவலர்கள், கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ)

## ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டு: மூவர் கைது

வவுனியா,டிசெ.9

ஹெரோயின் போதைப் பொருளை வைத்திருந்த குற்றச்சாட்டில் மூன்று இளைஞர்கள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

வவுனியா பொலிஸ் புலனாய்வுப்பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலையடுத்து, தேக்கவத்தையில் வைத்து இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிமிருந்து 1010 மில்லிக்கிராம் ஹெரோயின் போதைப் பொருள் மீட்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட இளைஞர்கள் மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படுவர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (சு-110)

## சட்டவிரோதமாக குளம் அமைப்பு; காத்தான்குடிமக்கள் ஆர்ப்பாட்டம்

மட்டக்களப்பு, டிசெ.8

சட்ட விரோதமாக குளம் அமைத்து வெள்ள நீர் வழிந்தோடுவதை தடுத்துள்ளமையை கண்டித்து காத்தான்குடியில் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டப் பேரணி முன்னெடுக்கப்பட்டது.



மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனைப் பற்று ஆரையம்பதி பிரதேச செயலர் பிரிவுக்குட் பட்ட கர்பலா நகர், கர்பலா வீதி ஈனிசியர் புரம் பிரதேசத்தில் சட்ட விரோதமாக குளம் அமைத்து காத்தான்குடி வெள்ள நீர் வழிந்தோடுவதை தடுத்துள்ளமையை கண்டித்தும், வெள்ள நீரை வடிந்தோடச் செய்ய பாரம்பரிய தோணாக்கால்வாயை திறந்து விடுமாறு வலியுறுத்தியுமே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஜும்மா தொழுகையைத் தொடர்ந்து ஆர்ப்பாட்டப் பேரணி ஆரம்பமானது. காத்தான்குடி நகர சபை தவிசாளர் எஸ்.எச்.எம். அஸ்பர் மற்றும் காத்தான்குடி நகர சபை உறுப்பினர்களின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தப் பேரணி காத்தான்குடி01 முதலாம் குறிச்சி பெரிய மீரா ஜும்ஆ பள்ளிவாயலில் இருந்து ஆரம்பமாகி காத்தான்குடி பிரதேச செயலகம் வரை சென்றடைந்தது.

சம்மந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க கோரி காத்தான்குடி பிரதேச செயலர் ஊடாக மட்டக்களப்பு மாவட்டச் செயலருக்கான மனு ஒன்றும் கையளிக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் இயற்கையாக ஓடும் வழியை மறித்து ஊரை வெள்ளக் காடாக்காதே, போன்ற பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியிருந்தனர். (ஐ)

## கல்வியங்காடு சந்தையை ஆராய்ந்தார் முதல்வர்

யாழ்ப்பாணம்,டிசெ.9

யாழ்ப்பாணம், கல்வியங்காடு பொதுச் சந்தை நிலவரங்களை நேரில் ஆராய்ந்தார் யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் இ.ஆனல்ட்.

சந்தைக்காக அருகே முதன்மை வாசல் இருந்தாலும் பருத்தித்துறை வீதியின் ஊடாக உள்ள பாதை, ஒருவர் உட்புகுவதற்கே போதுமானதால், அந்தப் பாதையில் நெரிசல் ஏற்படும். அதனை அகலிப்பதோடு, மீன் சந்தையில் இருந்து மரக்கறிச் சந்தைக்கு வருபவர்கள் வீதியைச் சுற்றி வரும் நிலை காணப்படுகின்றது.

மீன் சந்தையின் பின்புறமும் பாதை ஏற்படுத்தி, மரக்கறிச் சந்தைக்கு வருவதற்கு வாய்ப்பும், ஏற்படும்.

இரு சந்தைகளுக்கு இடைப்பட்ட பிரதேசம் தற்போதும் மண் பிரதேசமாகவே இருப்பதால், அதனைச் சீர் செய்து மீன் சந்தை பாதுகாப்பாக இருப்பது போன்று மரக்கறிச் சந்தையையும் பாதுகாப்பாக மாற்றியமைத்து தருமாறு வர்த்தகர்கள் எழுத்தில் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இது தொடர்பிலேயே மாநகர முதல்வர் மற்றும் உறுப்பினர்கள் சந்தைக்கு நேரில் சென்று நிலமைகளை ஆராய்ந்தனர். வர்த்தகர்களுடனும் கலந்துரையாடினர்.

இதன்போது முதன்மை வாசலின் அருகே இருக்கும் மாடிப்படியை அகற்றுவதற்கு வர்த்தகர்கள் இணங்கினால், அது தொடர்பில் பரிசீலிக்க முடியும். அதேநேரம் மீன் சந்தையில் இருந்து மரக்கறிச் சந்தைக்கு வருவதற்கு எவ்வாறு பாதையை ஏற்படுத்த முடியும் என்பது தொடர்பில் பொறியியலாளர்களுடன் உரையாடி ஒரு பொருத்தமான தீர்வைப் பெற்றுத் தருவதாக மாநகர முதல்வர் இ.ஆனல்ட் தெரிவித்தார். (சு-105)

## 3 திட்டங்களுக்கான நிதியை அரசு விடுவிக்கவேண்டும்

### சாள்ஸ் எம்.பி. கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 9

கடந்த அரசின் காலத்தில் மன்னார் மாவட்டத்துக்கு அனுமதிக்கப்பட்ட 3 திட்டங்களுக்கான நிதியை அரசு விரைவில் விடுவிக்கவேண்டும் என்றுதமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன் வலியுறுத்தினார்.

மன்னார் மாவட்டத்தின் இந்த ஆண்டுக்கான இறுதி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நாளை நடைபெறவுள்ளது. 3 திட்டங்களைச் செயற்படுத்த கடந்த வருடம் 252 மில்லியன் ரூபா நிதி வழங்குவது என்று அரசு கூறியிருந்தது.

எனினும், திட்டம் ஆரம்பிக்கப்படாமலேயே கை நழுவிச் செல்லுமா என்ற நிலை காணப்படுகின்றது.

இதன்படி நானாட்டான் நகர அபிவிருத்திக்காக நகர அபிவிருத்தி அமைச்சின் ஊடாக 60 மில்லியன் ரூபா அனுமதிக்கப்பட்டது. 5 வாய்க்கால்கள் சீரமைப்புக்கு 100 மில்லியன் ரூபா அனுமதிக்கப்பட்டது. மாவட்ட மருத்துவமனையில் புதிதாகக் கொள்வனவு செய்யப்பட்டுள்ள சீ.ரீ ஸ்கானருக்கான கட்டடம் அமைக்க 92 மில்லியன் ரூபா அனுமதிக்கப்பட்டது.

எனினும் பணிகள் இன்றுவரை ஆரம்பிக்கப்படவில்லை. எனவே இவற்றுக்குரிய நிதியை அரசு விடுவிக்க வேண்டும்- என்றார். (த-105)

# புற்றுநோய்க்கான மருந்துக்காக ரூபா 1,000 மில்லியன் ஒதுக்கீடு!

கொழும்பு, டிசெ. 9

மஹரகம புற்றுநோய் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் நோயாளர்களுக்கு தேவையான அத்தியவசிய மருந்துகளின் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்காக தேசிய திறைசேரியிலிருந்து ஆயிரம் மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

புற்றுநோய் ஔடதங்கள் தொடர்பில் கடந்த காலத்தில் பெரிய தட்டுபாடுகள் ஏற்டபட்டிருந்தன. இநத விடயம் தொடர்பில் அவதானம் செலுத்திய சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாரச்சி மற்றும் செயலாளர் பி.எம்.எஸ்.சால்ஸ் ஆகியோர் திறைசேரியின் செயலருடன் கலந்துரையாடியுள்ளனர். இதன் பின்னரே நிதி ஒதுக்கிடப்பட்டது. இதேவேளை அவசரக் கொள்வனவு முறையிலும், அத்தியாவசிய ஔடதங்கள் கொள்வனவு செய்யப்பட்டு வைத்தியசாலைக்கு வழங்கப்பட உள்ளன.

இந்த நிலையில் புற்றுநோய்ச் சிகிச்சைக்கான ஔடதங்களை கொள்வனவு செய்யும் நிறுவனங்களிலிருந்தும் ஔடதங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டு வருகின்றன. இதனால் எதிர்வரும் காலங்களில் ஔடதத் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்து கொள்ளக்கூடிய சாத்தியம் உண்டு என்று அரச தரப்புத் தகவல்கள் தெரிவித்துள்ளன. (ம)

## நாங்கள் கைகொடுத்துத்தான் ஜனாதிபதியானார் கோத்தா!

### அமைச்சர் அமரவீர தெரிவிப்பு



கொழும்பு, டிசெ. 9

ஜனாதிபதித் தேர்தலில் சுதந்திரக் கட்சி கோத்தபாய ராஜபக்ஷவுடன் இணைந்ததாலேயே அவர் வெற்றி பெற்றார். தேர்தலில் நாம் தனித்து பயணித்திருந்தால் கோத்தபாய ராஜபக்சா வெற்றி பெற்றிருக்க மாட்டார் என்கிறார் அமைச்சர் மகிந்த அமரவீர. பொதுத் தேர்தலிலும் கூட்டணியாக பயணிப்போம் எனவும் அவர் கூறினார்.

சுதந்திரக் கட்சி மற்றும் பொதுமக்கள் முன்னணியின் கூட்டணி குறித்து பொதுமக்கள் முன்னணியின் ஒரு சிலர் விமர்சனக் கருத்துகளை முன்வைத்து வருகின்ற நிலையில் சுதந்திரக் கட்சியின் நிலைப்பாடு குறித்து வினாவிய போதே அவர் இதனைக் கூறினார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

சுதந்தரக் கட்சி கடந்த காலங்களில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கீழ் பல வேலைத் திட்டங்களை முன்னெடுத்தது. ஐக்கிய தேசிய கட்சியின் தனித் தீர்மானம் ஒன்றினை முன்னெடுக்கும் நகர்வுகளை நாம் தடுத்தோம். அதே போல் சுதந்திரக் கட்சி இம்முறை ஜனாதிபதி தேர்தலில் மிகவும் முக்கியமான தீர்மானம் எடுத்தது. அதுவே ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சா வெற்றிபெறவும் எதுவாக அமைந்தது. இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் கோத்தபாய ராஜபக்சா 13 இலட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் சுதந்திரக் கட்சிக்கு 14 இலட்சம் வாக்குகள் கிடைத்தது. இம்முறை தேர்தலில் அது முழுமையாக எமக்கு கிடைத்திருக்கும் என கூற முடியாது. ஆனால் எமது ஆதரவு வாக்குகளே ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சாவை வெற்றிபெறச் செய்தது என்பது உண்மையான கூற்று. ஒரு வேளை நாம் இந்த தேர்தலில் தனித்த பயணம் ஒன்றினை முன்னெடுத்திருந்தால் சுதந்திர கட்சியின் ஆதரவை கோத்தபாய ராஜபக்சாவிற்கு வழங்காது இருந்திருந்தால் அவர் இந்த தேர்தலில் வெற்றி பெற்றிருக்க மாட்டார் - என்றார். (ம)

## கூட்டுறவாளர்கள் 90 பேர் மதிப்பளிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.9

யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை இந்த ஆண்டில் 90 வரையிலான கூட்டுறவாளர்களைப் பாராட்டி மதிப்பளித்துள்ளது.

கூட்டுறவுப் பெரியார் வீரசிங்கத்தின் 55 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு, கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் 90 கூட்டுறவாளர்களும் மதிப்பளிக்கப்பட்டனர்.

மாவட்டக் கூட்டுறவுச் சபையின் தலைவர் தி.சுந்தரலிங்கம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வடக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் பொ.வாகீசன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு பாராட்டுப் பெற்றவர்களுக்குப் பரிசில்கள் வழங்கி மதிப்பளித்தார்.

இதில் கூட்டுறவுச் சங்கங்களைச் சேர்ந்த முப்பது பணியாளர்களும், கூட்டுறவு அமைப்புக்களின் அறுபது வரையிலான அங்கத்தவர்களும் பாராட்டுப் பெற்றனர்.

ஒவ்வொரு வருடமும் கூட்டுறவு பெரியாரின் நினைவு தினத்தில் கூட்டுறவாளர்கள் பாராட்டி மதிப்பளிக்கப்பட்டு வருகின்றனர். (க-17)



## இராணுவத்துக்கு புதிய பேச்சாளர்

கொழும்பு, டிசெ. 9

இலங்கை இராணுவத்தின் புதிய ஊடகப் பேச்சாளராக பிரிகேடியர் சந்தன விக்ரமசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

இவரது நியமனம் எதிர்வரும் 17ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் எனவும் குறிப்பிடப்படுகின்றது. தற்போதைய ஊடகப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் சுமித் அத்தபத்து கடந்த இரண்டு வருட காலமாக இராணுவ ஊடகப் பேச்சாளராக கடமையாற்றினார். மேஜர் ஜெனரல் சுமித் அத்தபத்து இராணுவ தலைமையகத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ம)

## பாடசாலை அதிபர் மீதான குற்றச்சாட்டுக்கள் பொய்!

### விசாரணை அறிக்கையில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 9

யாழ்ப்பாணம் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை அதிபர் மீது அதே பாடசாலையின் உப அதிபரும் இலங்கை ஆசிரியர் சங்கத்தினரும் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தபோதும் அவற்றில் ஒன்று கூட நிரூபிக்கப்படவில்லை. குற்றச்சாட்டுக்கள் பற்றி விசாரணை நடத்திய சுயாதீன விசாரணைக்குழு இதைத் தெரிவித்துள்ளது.

பாடசாலை அதிபர் செல்வி சாந்தினி மாணிக்கம் மீது இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தியதோடு நிதி மோசடி மற்றும் முறைகேடுகள் குறித்து விசாரணை நடத்துமாறு வடக்கு ஆளுநரிடம் கடந்த மார்ச் மாதம் முறையிட்டிருந்தது. ஆளுநர் விசாரணைக் குழுவை நியமித்தார்.

சுகாதார அமைச்சின் மூத்த உதவிச் செயலர் செ.பிரணவநாதன் வடக்கு மாகாண விவசாய அமைச்சின் நிர்வாக அலுவலர் மே. சாந்த சீலன் ஆகியோர் தலைமையிலான குழு குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரணை நடத்தியது.

விசாரணை அவதானிப் பின்படி விசாரணைக் குழு, தனது அவதானிப்புக்கள் தொடர்பான முடிவுரையில் தெரிவித்துள்ளதாவது:

குறித்த பாடசாலை அதிபர் தனது இயலுமைக்கு அப்பால்சென்று பாடசாலை அபிவிருத்தி மற்றும் பிற செயற்பாடுகளில் ஆர்வம் காட்டிவருகிறார்.

இவ்வாறான முறைப்பாடுகள், அவர் ஆர்வத்துடன் பணிபுரிதலில் பாதிப்பை ஏற்படுத்தும். குறித்த பாடசாலையின் அதிபருக்கும் உப அதிபருக்கும் இடையில் முரண்பாடு உருவாகியமைக்கு உப அதிபருக்கான அதிகார கையளிப்பு எழுத்து மூலமாக வழங்கப்படாமையே காணமாக அமைகின்றது. என்று குறிப்பிட்டுள்ளது.

அதுமட்டுமன்றிச் சில சிபார்சுகளையும் விசாரணைக்குழு விசாரணை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதிபர் மீதான குற்றச்சாட்டுக்கள் ஆதாரமற்றவை என்று பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினரும் பெற்றோரும் என்று கூறிவந்தனர். விசாரணை நடத்திய பின்னர் விசாரணை அறிக்கை வெளிப்படுத்தப்படாதிருந்தது. அதை வெளிப்படுத்தவேண்டும் என்றும் அபிவிருத்திச் சங்கத்தினரும் பெற்றோரும் தொடர்ச்சியாக அழுத்தம் கொடுத்துவந்திருந்தனர். (த-ரி1)

## நுளம்பை கட்டுப்படுத்த புகையூட்டல்

யாழ்ப்பாணம்,டிசெ.9


யாழ்ப்பாண மாநகர பிரதேசத்தில் நுளம்பைக் கட்டுப்படுத்துவதற்கான புகை அடிக்கும் பணிகள் 4 பிரிவுகளாக இடம்பெற்று வருகின்றன.

கிளிநொச்சி பொதுச்சுகாதாரப் பிரிவைச் சேர்ந்த புகை அடிக்கும் பிரிவினர் வரவழைக்கப்பட்டு புகையூட்டும் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. டெங்கின் தாக்கம் காணப்படும் இடங்களில் புகை அடிக்கும் பணிகள் துரிதமாக இடம்பெற்று வருகின்றன.

கடந்த வியாழக்கிழமை யாழ். மாநகரப் பிரதேசத்தில் இந்தப் புகை அடிக்கும் பணிகள் நான்கு பிரிவுகளாக இடம்பெற்றன.

வண்ணார்பண்ணை, நாவாந்துறை, யாழ்.நகர். கொழும்புத்துறை போன்ற பிரதேசங்களில் டெங்கின் தாக்கம் கூடுதலாகக் காணப்படுவதை அடுத்து புகை அடிக்கும் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-17)

# டெல்லியில் நேற்று 43 உயிர்களைக் காவுகொண்ட தீ விபத்தின் மேலதிக ஒளிப்படங்கள்...



## மிகப்பெரும்...

சர்வதேச மனித உரிமைகள் தினத்தையும், முல்லைத்தீவு காணமாலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் முன்னெடுத்து வரும் தொடர் போராட்டத்தின் 1,008 ஆவது நாளையும் பிரதிபலிக்கும் முகமாக இந்தப் போராட்டம் முல்லைத்தீவில் பெரும் எடுப்பில் முன்னெடுக்கப்படவுள்ளது.

வடக்கு - கிழக்கில் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களுக்கான பொறுப்புக்கூறலை இலங்கை அரசு செய்வதற்காக அந்தவிடயத்தினை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திடம் ஒப்படைப்பதற்குரிய நடவடிக்கைகளை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையும், சர்வதேச நாடுகளும் கூட்டிணைந்து எடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தியே மேற்படி வடக்கு, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவினர்கள் கவனவீர்ப்பில் ஈடுபடவுள்ளனர்.

தமது கோரிக்கையொன்றை ஐ.நா சபையிடம் வழங்குவதற்காக ஐக்கிய நாடுகள் சபையின் யாழ்ப்பாணப் பிராந்திய அலுவலகத்தில் அவர்கள் மனுவொன்று கையளிக்கவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-06)

## பட்டமளிப்பு...

விவசாய பீடம், மற்றும் மருத்துவ பீடத்தைச் சேர்ந்த ஆயிரத்து 369 உள்வாரிப் பட்டதாரிகளுக்கும், உயர் பட்டப் படிப்புகள் பீடத்தைச் சேர்ந்த 64 பட்ட பின்படிப்பு பட்டதாரிகளுக்கும், 31 டிப்ளோமாதாரிகளுக்கும் பட்டங்களும், தகைமைச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. 348 வெளிவாரிப்பட்டதாரிகளின் பெயர்கள் வாசிக்கப்பட்டு பட்டங்கள் உறுதிப்படுத்தப்பட்டன பட்டமளிப்பு வைபவத்தைத் தொடர்ந்து, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீட இசை மற்றும் நடனத்துறைகள் இணைந்து வழங்கும் கலாசார நிகழ்வுகள் கைலாசபதி கலையரங்கில் நேற்று இடம்பெற்றன.

பட்டமளிப்பு வைபவத்தின் ஒரு பாகமாக அமையும் நினைவுப் பேருரைகளான சேர்.பொன் இராமநாதன் நினைவுப்பேருரை எதிர்வரும் 12ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கும், சீமாட்டி லீலாவதி இராமநாதன் நினைவுப் பேருரை எதிர்வரும் 13ஆம் திக்தி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கும் கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளன.

சேர்.பொன் இராமநாதன் நினைவுப் பேருரையை கலாநிதி.செ.யோகராசா (முன்னாள் மொழித்துறைத் தலைவர் மற்றும் பேராசிரியர் கிழக்குப்பல்கலைக்கழகம்) 'ஈழத்து நவீன இலக்கிய உருவாக்கத்தில் பெண் ஆளுமைகள் (1900 1950)' என்ற தலைப்பிலும், சீமாட்டி லீலாவதி இராமநாதன் நினைவுப்பேருரையை திருமதி லட்சுமி இராமசுவாமி(கலைமாமணி.முனைவர்) 'நாட்டிய இலக்கண நூல்களில் சுவை பற்றிய குறிப்புகள் மற்றும் நாட்டியத்தில் அவற்றைக் கையாளுதல்' என்ற தலைப்பிலும் ஆற்றுவர். (கரி1)

## டெல்லியில்...

ணை கள் இடம்பெற்று வருகின்றன.

உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு இந்திய மதிப்பில் 2 லட்சம் ரூபாவை உதவித் தொகையாக அறிவித்துள்ளார் இந்தியப் பிரதமர் மோடி. (ம)

## பிரியங்கவுக்கான...

பிரிட்டனிலுள்ள புலி ஆதரவாளர்கள் சிலருக்கு சைகையால் அச்சுறுத்தல் விடுத்த வழக்கில் பிரிகேடியர் பிரியங்க பெர்னான்டோவை குற்றவாளி என லண்டன் வெஸ்ட் மினிஸ்டர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. அவருக்குரிய தண்டனையாக 2 ஆயிரத்து 400 பவுண்ட்ஸ் தண்டப்பணம் செலுத்துமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இந்த நிலையிலேயே இந்தத் தண்டப் பணத்தை அரசு செலுத்த வேண்டும் என்று கோரியுள்ளார் கம்மன்பில. கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார் அவர். (ம)

## யாழ். ...

வளாகத்துக்குள் புகுந்துள்ளனர் என்று தெரிவித்தே அவர்கள் பல்கலைக்குள் சென்றனர். இதனால் அங்கு நேற்று மாலை சிறு பதற்றம் ஏற்பட்டது.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

சிறப்பு அதிரடிப்படையினர் 6 பேர் 3 மோட்டார் சைக்கிள்களிலும் பொலிஸார் இருவர் ஒரு மோட்டார் சைக்கிளிலும் வந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர்கள் இருவரை சிறப்பு அதிரடிப்படையினரும் பொலிஸார் துரத்தி வந்தனர். இளைஞர்கள் இருவரும் பல்கலைக்கழக வளாகத்துக்குள் நுழைந்ததால் சிறப்பு அதிரடிப் படையினரும் பொலிஸாரும் ஆயுதங்களுடன் அவர்களை வளாகத்துக்குள் துரத்திச் சென்றனர். எனினும் துரத்தி வந்த இளைஞர்களைக் கண்டறிவதில் சிக்கல் ஏற்பட சிறப்பு அதிரடிப்படையினர் அங்கு கலை நிகழ்வுகளுக்காக நின்றிருந்த மாணவர்களை மிரட்டியுள்ளனர். இதனால் அத்துமீறி பல்கலைக் கழகத்துக்குள் ஆயுதங்களுடன் சிறப்பு அதிரடிப்படையினர் நுழைந்தனர் எனவும் அவர்கள் வெளியேறாத வகையில் பிரதான வாயிலை மூடுமாறும் மாணவர்கள் நிர்வாகத்திடம் வலியுறுத்தினர். எனினும் பிரதான வாயில் மூடப்படாத நிலையில் சிறப்பு அதிரடிப் படையினரும் பொலிஸாரும் அங்கிருந்து வெளியேறினர்.

இதனால் தம்மை அச்சுறுத்திய சிறப்பு அதிரடிப் படையினரை வெளியேற அனுமதித்ததாகவும் அத்துமீறி நுழைந்த சிறப்பு அதிரடிப் படையினர் அச்சுறுத்திய சம்பவம் தொடர்பில் நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும் பெருமளவு மாணவர்கள் பல்கலைக்கழகத்தின் பிரதான வாயில் கூடினார்கள். இதனால் அவ்விடத்தில் சில மணிநேரம் பதட்டமான சூழல் காணப்பட்டது. (ம)

## சுவிஸ்...

குறித்த தூதரக அதிகாரி குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் வாக்குமூலம் அளிப்பதற்காக டிசெம்பர் 9ஆம் திகதிக்கு முன்னதாக நாட்டில் இருந்து வெளியேற முடியாதவாறு கொழும்பு முதன்மை நீதிமன்றத்தினால் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்த சூழ்நிலையில் அவர் வாக்குமூலம் அளித்துள்ளார்.

இலங்கைக்கான சுவிட்சர்லாந்து தூதரகத்தில் பணியாற்றும் குறித்த அதிகாரி அடையாளம் தெரியாத தரப்பினரால் கடத்திச் செல்லப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுக்கு அமைவாக அண்மையில் வெளிவிவகாரத் துறை அமைச்சு அறிக்கையொன்றையும் வெளியிட்டிருந்தது.

அதில் குறிப்பாக சுவிட்ஸர்லாந்து தூதரகத்தினால் வழங்கப்பட்ட தகவல்களுக்கும், விசாரணைகளின் அடிப்படையில் பெறப்பட்ட தொழில்நுட்ப சான்றுகளுக்கும் இடையில் பரஸ்பர முரண்பாடுகள் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி குறித்த பெண் அதிகாரியிடம் விசாரணை நடத்துவதற்கு குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினால் சுவிஸ் தூதரகத்திடம் அனுமதி கோரப்பட்ட போதும் அதற்கு அனுமதி வழங்கப்படாத நிலையில் அவர் வெளிநாட்டுக்கு செல்ல முடியாதவாறு தடையுத்தரவு பெறப்பட்டது. இந்த நிலையிலேயே விசாரணைக்காக குறித்த பெண் அதிகாரி குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கு நேற்று மாலை அழைத்து வரப்பட்டார். (ம)

## வவுனியாவில்...

வித்துள்ளனர். நேற்றுக் காலையில் இருந்து அனைத்து தனியார் கல்வி நிலையங்களின் கற்பித்தல் செயற்பாடுகளும் இடைநிறுத்தப்பட்டு அவை மூடப்பட்டிருந்தன. இதனால் மாணவர்கள் பலரும் தனியார் வகுப்புக்களுக்கு வந்து மீண்டும் வீடு திரும்பிச் சென்றதை அவதானிக்க முடிந்தது. (க-ரி4)

## அமைச்சின்...

1990ஆம் ஆண்டு பதுளை மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளராக நியமிக்கப்பட்ட நிலையில் பதுளை, நுவரேலியா, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் 11 ஆண்டுகள் உதவித் தேர்தல் ஆணையாளராகவும், அதன் பின்னர் திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலராகவும் பணியாற்றிய நிலையில் திருகோணமலை மாவட்ட மேலதிக மாவட்டச் செயலராக அவர் நியமிக்கப்பட்டார்.

இதன் பின்பு மட்டக்களப்பு மாவட்டச் செயலராக பதவி உயர்வு பெற்ற நில்லையில் அதன் பின்பு யாழ்ப்பாணம் மாவட்டத்திலும் தற்போது கிளிநொச்சி மாவட்டச் செயலராகவும் பணியாற்றும் நிலையில் இன்று முதல் அமைச்சின் செயலராகப் பதவி உயர்வு பெற்றுச் செல்கின்றார். (ம-105)

## தமிழ்...

ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது சர்வதேச நியமங்களின் அடிப்படையில் இலங்கை கடவுச்சீட்டு தரப்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே நாம் குறித்த சர்வதேச நியமங்களுக்கு கட்டுப்பட்டவர்களாக இருத்தல் அவசியம். புதிய கடவுச்சீட்டுக்கான படம் எப்படி இருக்க வேண்டும் என்ற வழிகாட்டுதல்கள் அனைத்து நாடுகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

அதன் படி கடவுச்சீட்டிலுள்ள படத்தில் முகத்தில் எந்த விதமான செயற்கை அடையாளங்களும் இருக்க முடியாது. ஆகையால் நாம் நெற்றியில் பொட்டிருப்பதை தவிர்க்கச் சொல்கிறோம். கூடுதலாக ஐரோப்பிய நாடுகளுக்குச்செல்லும் பெண்களே பாதிப்படைகின்றனர். அதாவது பொட்டு உள்ள படத்தை கடவுச்சீட்டில் கொண்டிருக்கும் பெண்கள் சில சந்தர்ப்பங்களில் பொட்டு இடாது சில நாடுகளுக்கு போகும் அவர்களை சில நாடுகளின் குடிவரவு குடியகல்வு திணைக்கள அதிகாரிகள் நிறுத்தி வைத்த சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

அது மட்டுமன்றி குறித்த நாடுகளுக்கான நுழைவிசைவுகளைப் பெறுவதும் இவர்களுக்கு சவாலாகவே இருக்கின்றது. இக்காரணங்களை வைத்து நுழைவிசைவுகள் நிராகரிக்கப்பட்ட சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. ஆகவே இது அவர்களின் நன்மைக்காகவேயன்றி வேறு தனிப்பட்ட காரணங்கள் கிடையாது. இருப்பினும் இது தொடர்பில் முரண்களும் ஏற்பட்டிருக்கின்றன. நாம் இது தொடர்பில் மக்களுக்கு விளக்கங்களை கொடுத்து வருகிறோம் - என்றார். (ம)

## தென்னை...

றுக் காலை குளிப்பாட்டிக்கொண்டிருந்தபோதே குழந்தை மீது தென்னை மரம் சரிந்து விழுந்து ள்ளது. இதனையடுத்து படுகாயமடைந்த இருவரும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். சிகிச்சை பயனளிக்காமல் குழந்தையின் உயிர் பிரிந்தது. அவரது அம்மம்மா தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றார்.

(ம-ரி.6.105.222)

## 'ஓடர்' மாறியதால் துப்பாக்கியை தூக்கிய பெண்!

நியூயோர்க், டிசெ. 9

அமெரிக்காவின் டென்னிசி மாநிலத்தின் மெம்பிஸ் நகரில் துரித உணவகமான மெக் டொனால்டின் கிளை உணவகம் செயற்பட்டு வருகிறது. ஆசியா வெஸ்டெர் (வயது-20) என்ற இளம்பெண் உணவை ஓடர் செய்துள்ளார். அந்த நிறுவனப் பணியாளர் அதனைக் கொண்டு வந்துள்ளார்.

உணவைத் தொட்டுச் சாப்பிடுவதற்கு வெஸ்டெர் ஓடர் செய்த ஜெல்லிக்கு பதிலாக தக்காளி சோஸ் (கெட்ச் அப்) கொண்டுவரப்பட்டு பரிமாறப்பட்டது. பணியாளரிடம் வெஸ்டர் விவாதித்து கோபமடைந்த இளம்பெண் பணியாளரை நோக்கித் துப்பாக்கியை நீட்டியுள்ளார். அந்தப் பணியாளர் அலறியடித்து ஓடினார். அங்கிருந்தவர்களும் அதிர்ச்சியில் உறைந்தனர். பின்னர் பொலிஸார் அவரைக் கைது செய்தனர். அவர் துப்பாக்கியை எடுத்து நீட்டிய காணொலி மறைகாணியில் (சிசிரிவி) பதிவாகியிருந்தது. (ஓ.5)





நத்தார் கொண்டாட்டங்கள் களைகட்டத் தொடங்கியுள்ளன. அமெரிக்காவின் விஸ்கொன்ஸின் மாநிலத்தில் லிபர்ரி போல் மாநகரத்தில் நத்தார் அலங்காரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சிறுவர்கள் உள்ளிட்ட பலரும் அங்கு சென்று நத்தார் மரங்களையும், வர்ண மின்குமிழ் அலங்காரங்களையும் பார்த்துப் பிரமிக்கின்றனர். (ஓ.5)

## கைக்கடிகாரம் ஓடர் செய்தவருக்கு ஆணுறையை வழங்கிய நிறுவனம்

வொஷிங்டன், டிசெ. 9

அமேசன் போன்ற முன்னணி இணைய வணிக நிறுவனம் மூலமாக அலைபேசி தொடக்கம் வீட்டு உபயோகப் பொருள்கள் வரை வாங்குவது அதிகரித்து வருகின்றது. சிலவேளைகளில் நாம் விரும்பிக் கேட்கின்ற பொருள் ஒன்றாகவும், வழங்கப்படுகின்ற பொருள் ஒன்றாகவும் இருக்கின்றது. இவ்வாறுதான் அண்மையில், 'பிளக் பிரைடே' அதிரடித்தள்ளுபடிவிற்பனையில் அமெரிக்காவில் 300 பவுண்ட் (சுமார் ரூ.66 ஆயிரம்) மதிப்பிலான ஆடம்பர கைக்கடிகாரம் ஓடர் செய்தவர்களுக்கு ஆணுறை, பற்தூரிகை போன்ற பொருள்கள் விநியோகம் செய்யப்பட்டுள்ளமை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. இது அமேசன் நிறுவனத்தின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. இதற்காக வாடிக்கையாளர்களிடம் அந்த நிறுவனம் மன்னிப்பு கேட்டுள்ளது. பொருள் ஓடர் செய்தமைக்காக செலுத்திய பணத்தை அப்படியே திருப்பித் தருவதாகவும் கூறி உள்ளது. (ஓ.5)

## ஏமன் போர்: இராணுவம் மூலம் தீர்வு காண முடியாது

### சூடான் தலைமை அமைச்சர் தெரிவிப்பு

கார்டொம், டிசெ. 9

ஏமன் போருக்கு இராணுவம் மூலம் தீர்வு காண முடியாது என்று சூடான் தலைமை அமைச்சர் அப்துல்லா ஹம்தக் தெரிவித்துள்ளார்.

தென்மேற்கு ஆசிய நாடான ஏமன் நாட்டில், சன்னி பிரிவைச் சேர்ந்த அரச தலைவர் மன்சூர் ஹைதிக்கும் ஷியா பிரிவைச் சேர்ந்த ஹவுத்தி கிளர்ச்சிப் படைக்கும் இடையே கடந்த 2015ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகிறது. இதில் அரச தலைவர் மன்சூர் ஹைதிக்கு ஆதரவாக சவுதி அரேபியா செயல்படுகிறது. ஹவுத்தி கிளர்ச்சிப் படைக்கு ஈரான் ஆதரவு அளிக்கிறது.

மேலும் ஐக்கிய அமீரக ஆதரவு ஏமன் தென்பகுதி பிரிவினைவாதிகள், ஏமன் அரசுக்கு எதிராகச் சண்டையிட்டு வந்தனர். ஏமனில் ஐந்து ஆண்டுகளாக நடைபெறும் போர் காரணமாக ஆயிரக்கணக்கான மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. லட்சக்கணக்கான மக்கள் பசிக் கொடுமையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் சவுதி, ஏமன் போரை படிப்படியாக முடிவுக்கு கொண்டுவர முயற்சி எடுத்து வருகிறது.

இதன் காரணமாக அங்கு தற்போது போர் நிறுத்தம் நடைமுறையில் உள்ளது.

இந்த நிலையில் ஏமன் போரை முடிவுக்கு கொண்டுவருவது குறித்து சூடான் தலைமை அமைச்சர் அப்துல்லா ஹம்தக் கூறும்போது, ஏமன் போரை இராணுவம் மூலம் தீர்வு காண முடியாது.

அது எங்கள் தரப்பிலிருந்து வந்தாலும் சரி உலகின் எந்த தரப்பிலிருந்து வந்தாலும் சரி. போரை அமைதி மற்றும் அரசியல் ரீதியான பேச்சுக்கள் மூலமே தீர்வு காண முடியும் என்று தெரிவித்துள்ளார். (ஓ.5)

## சீனாவுக்கு கடனா?

### உலக வங்கியை விமர்சித்த ட்ரம்ப்

வொஷிங்டன், டிசெ. 9

சீனாவுக்கு கடன் வழங்கும் உலக வங்கியின் முடிவை அமெரிக்க அரச தலைவர் ட்ரம்ப் விமர்சித்துள்ளார்.

இதுகுறித்து ட்ரம்ப் தனது கீச்சகப் பக்கத்தில், ஏன் உலக வங்கி சீனாவுக்கு கடன் வழங்குகிறது. இது சாத்தியமா? சீனாவிடம் பணம் ஏராளமாக இருக்கிறது. இதனை நிறுத்துங்கள், என்று பதிவிட்டுள்ளார். ஐந்தாண்டுக்கான குறைந்த வட்டியில் கடன் திட்டத்துடன் சீனாவுக்கு நிதி வழங்க உலக வங்கி அண்மையில் ஒப்புக் கொண்டது. இதனைத் தொடர்ந்து உலக வங்கியை ட்ரம்ப் விமர்சித்துள்ளார்.

மேலும், அமெரிக்க வரிப் பணத்தை பயன்படுத்தி, மனித உரிமைகள் மீறல் மற்றும் பலவீனமான நாடுகளில் இராணுவ ரீதியாகவோ அல்லது பொருளாதார ரீதியாகவோ ஆதிக்கம் செலுத்த முயற்சிக்கும் பணக்கார நாடுகளுக்கு உலக வங்கி கடன் வழங்கக்கூடாது என்றும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

சீனாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே வர்த்தகம் தொடர்பாக பனிப் போர் நிலவி வரும் நிலையில் சீனாவுக்கு கடன் வழங்கும் உலக வங்கியின் முடிவை அமெரிக்கா விமர்சித்துள்ளது. (ஓ.5)



## ஒரே நாளில் இரண்டு ஏவுகணைகளை ஏவியது சீனா

பீஜிங், டிசெ. 9

ஒரே நாளில் 6 மணி நேர இடைவெளியில் இரண்டு ஏவுகணைகளை ஏவி சீனா சாதனை படைத்துள்ளது. சான்சி மாகாணத்தில் உள்ள தையுவான் ஏவுதளத்தில் இருந்து கியூசௌ ஏவுகணை உள்ளூர் நேரப்படி காலை 10.55 மணிக்கு விண்ணில் செலுத்தப்பட்டது. இந்த ஏவுகணை அனுப்பப்பட்ட ஜிலின்1 காவோபென் 02பி என்ற தொலை உணர்வு செயற்கைக்கோளை பூமியின் சுற்று வட்டப் பாதையில் நிலைநிறுத்தியது. இந்த செயற்கைக்கோள் விவசாயம், வன இயல், வளங்கள் மற்றும் சுற்றுச்சூழலுக்கான தரவு மற்றும் சேவைகளை வழங்கும்.

இதனைத் தொடர்ந்து, அதே ஏவுதளத்தில் இருந்து மாலை 4.52 மணிக்கு 6 சிறிய செயற்கைக்கோள்களுடன் மற்றொரு கியூசவ் 1ஏ ஏவுகணை ஏவப்பட்டது. இரண்டு ஏவுகணைகளிலும் செலுத்தப்பட்ட 7 செயற்கைக்கோள்களும் திட்டமிட்டபடி புவிவட்டப் பாதையில் நிலைநிறுத்தப்பட்டு வெற்றிகரமாக இயங்கி வருகின்றன. (ஓ.5)

## திருமண விழாவில்

# தொடர்ந்து நடனம் ஆடாததால் பெண் முகத்தில் துப்பாக்கிச் சூடு!

சித்ரகூட், டிசெ. 9



உத்தரபிரதேச மாநிலம் சித்ரகூட் பகுதியில் உள்ள திக்ரா கிராமத்தைச் சேர்ந்தவர் சுதிர் சிங்(45). இவர் கிராம பஞ்சாயத்து தலைவராக இருக்கிறார். இவரது மகள் திருமணம். கடந்த மாதம் 30ஆம் திகதி கோலாகலமாக நடைபெற்றது.

இசைக்கச்சேரியுடன், நடன நிகழ்ச்சிக்கும் சுதிர்சிங் ஏற்பாடு செய்து இருந்தார்.

அன்று இரவு பெண்கள் தங்கள் குழுவினருடன் நடனம் ஆடிக்கொண்டிருந்தனர்.

அப்போது ஒரு பிரபலமான பாடல் இசைக்கப்பட்டது. நடனமாடிய பெண் ஹீனா தேவி பல பாடல்களுக்கு தொடர்ந்து நடனமாடியதால் சிறிய நேரம் ஓய்வு எடுத்துக்கொண்டிருந்தார். இதனால் ஆத்திரம் அடைந்த பூல் சிங் நாட்டுத் துப்பாக்கியால் ஹீனா தேவியை நோக்கி சரமாரியாக சுட்டார். இவர் சுதிர்சிங் உறவினர் ஆவார். இதற்கிடையே தன் பங்குக்கு சுதிர்சிங்கும் துப்பாக்கியால் சுட்டார்.

நடன பெண் ஹீனா தேவியின் முகத்தில் துப்பாக்கிக் குண்டு பாய்ந்தது. அவரது வாய் தாடை கிழிந்து குருதி கொட்டியது.

திருமண விழாவில் கலந்து கொள்ள வந்திருந்த சுதிர்சிங்கின் உறவினர்கள் மிதிலேஷ், கமலேஷ் ஆகிய 2 சிறுவர்கள் மீதும் துப்பாக்கி குண்டு பாய்ந்தன. இவர்களின் கை மணிக்கட்டு மற்றும் காலில் காயம் ஏற்பட்டது. இந்தச் சம்பவத்தால் அங்கு பதற்றமும், பரபரப்பும் ஏற்பட்டது. திருமணத்துக்கு வந்திருந்தவர்கள் உயிர் பிழைக்க அங்கிருந்து ஓட்டம் பிடித்தனர்.

இது தொடர்பில் பொலிஸார் முறைப்பாடு பதிவு செய்தனர். தலைமறைவான பஞ்சாயத்து தலைவர் சுதிர்சிங் அவரது உறவினர் பூல்சிங் ஆகியோரைக் கைது செய்தனர்.

காயம் அடைந்த நடன பெண் ஹீனா தேவி லக்னோவில் உள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

அங்கு அவரது தாடையில் சத்திரசிகிச்சை செய்யப்பட்டது. தற்போது அவரது நிலை சீராக உள்ளது. (ஒ.5)

## பிரியாணி சமைக்க

# 2 கிலோ வெங்காயம் திருடிய நபர் கைது!

மதுரை, டிசெ. 9



மதுரையில் பிரியாணி சமைக்க 2 கிலோ வெங்காயம் திருடியவர் மறைகாணி (சிசிரிவி) காட்சி மூலம் சிக்கி உள்ளார். வெங்காயத்தின் விலை நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில் தமிழகம் முழுவதும் வெங்காயத்துக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

வெங்காய பதுக்கல்காரர்கள் தங்களுக்கு ஏற்றவாறு விலையை நிர்ணயித்து வெங்காயத்தின் விலையை ஏற்றி விடுகிறார்கள் என குற்றச்சாட்டு எழுந்துள்ளது. சென்னை கோயம்பேடு காய்கறிச் சந்தையில் வட மாநிலங்களில் இருந்து வரும் வெங்காயம் ஒரு கிலோ 180 ரூபாவுக்கு விற்பனையாகிறது.

மதுரை கோமதிபுரத்தில் உள்ள பல்பொருள் அங்காடிக்கு உரிமையாளர் இல்லாத நேரத்தில் சென்ற 50 வயது மதிக்கத்தக்க நபர் ஒருவர், அரிசிக்கு ஆயிரத்து 500 ரூபாய் பணம் தரவேண்டும் என்று கேட்க கடைப் பணியாளரும் உரிமையாளரிடம் அலைபேசியில் கேட்டுள்ளார். அரைதூக்கத்தில் இருந்த உரிமையாளரும் அரிசி வியாபாரி வந்திருக்கிறார் என்று நினைத்து பணம் கொடுக்கக் கூறியுள்ளார்.

கடைக்கு வந்து பார்த்தபோது, பணம் வாங்கிச்சென்றது அரிசி வியாபாரி அல்லர் என்பது தெரியவந்ததால், மறைகாணி காட்சிகளை ஆய்வு செய்த போது, அந்த மர்ம ஆசாமி மதிய வேளையில் ஆள் இல்லா நேரத்தைப் பயன்படுத்தி கடைக்குள் புகுந்துள்ளார். அபோது கடை ஊழியர் அலைபேசியில் பேசியபடியே கடைக்குள் அங்குமிங்கும் செல்வதை நோட்டமிட்டு, 2 கிலோ வெங்காயம், பிரியாணி அரிசிப் பொதி, பிஸ்கெட் என்று ஒவ்வொன்றாக திருடி பையில் போடுவதையும், பின்னர் கடையின் பெண் பணியாளரிடம் பேச்சுக்கொடுத்து ஆயிரத்து 500 ரூபா பணத்தை ஏமாற்றி வாங்கிச் செல்வதையும் கண்டு அதிர்ந்து போனார்.

இதுதொடர்பாக அண்ணாநகர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. இதற்கிடையே அடுத்தடுத்த நாள்களின் மறைகாணிக் காட்சிகளை ஆய்வு செய்தபோது அந்த நபர் தொடர்ச்சியாக பல நாள்கள் வெங்காயம் மற்றும் பிரியாணி அரிசி திருட்டில் ஈடுபட்டு வந்தமை வெளிச்சத்துக்கு வந்தது. இதையடுத்து, சனிக்கிழமை மாலையில் கூட்டம் அதிகமாக இருக்கும் நேரத்தில் கைவரிசை காட்டும் திட்டத்தில் கடைக்குள் நுழைந்த வெங்காயத் திருடனை கடையின் உரிமையாளர் மடக்கிப் பிடித்தார். விசாரணையில் அவர் கொன்றை வீதியை சேர்ந்த அப்துல்ரகுமான் என்பதும் பிரியாணி சமைக்க வெங்காயத்தையும் அரிசியையும் திருடிச்சென்றது தெரியவந்தது.

அப்துல்ரகுமானைப் பிடித்து கடைக்காரர் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்க, திருடிய வெங்காயம் உள்ளிட்ட அனைத்து பொருள்களுக்கும், முழுமையாகப் பணம் கொடுத்து விடுவதாக கூறி அப்துல் ரகுமானின் உறவினர்கள் சமரச பேச்சு நடத்தி வருகின்றனர்.

திருடும் அளவுக்கு வெங்காயத்தின் மதிப்பு உயர்ந்து விட, புதிதாக திருமணம் செய்த மணமக்களுக்கு வெங்காயம் பரிசு கொடுப்பது போல காணொலியும் வெளியாகி உள்ளது. (ஒ.5)

## இன்றைய நாள்

**மேடம்:** அனுகூல பலன் தேடி வரும். நற்குணம் உள்ளவரின் நட்பு கிடைக்கும். தொழிலில் உற்பத்தி, விற்பனை வியத்தகு வளர்ச்சி பெறும். தாராளமாக பணம் செலவு செய்வீர்கள்.

**இடபம்:** திட்டமிட்ட பணிகளில் தாமதம் உருவாகலாம். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற அதிக உழைப்பு தேவைப்படும். சேமிப்பு பணம் குடும்ப செலவுக்கு பயன்படும்.

**மிதுனம்:** ஆன்மிக நம்பிக்கையுடன் பணிகளில் ஈடுபடுவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரித்து புதிய சாதனை உருவாகும். ஆதாய பண வரவு கிடைக்கும்.

**கடகம்:** புதியவர்களின் அன்பை பெறுவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை செழிக்கும். பணம் கொடுக்கல், வாங்கல் சீராகும். விரும்பிய உணவு உண்டு மகிழ்வீர்கள். குடும்பத்துடன் சுற்றுலா சென்று வர திட்டமிடுவீர்கள்.

**சிம்மம்:** உங்கள் மனதில் குழப்பம் ஏற்படலாம். தொழிலில் அளவான உற்பத்தி, விற்பனை இருக்கும். புதிய இனங்களில் பண செலவு அதிகரிக்கும். புத்திரரின் நற்செயல் மனதை மகிழ்விக்கும்.

**கன்னி:** உங்களின் கவனக் குறைவால் சிரமம் ஏற்படலாம். நண்பரிடம் விவாதம் பேச வேண்டாம். தொழில், வியாபாரம் தாமத கதியில் இயங்கும். அளவான பண வரவு கிடைக்கும். மாணவர் பாதுகாப்பற்ற இடங்களில் செல்லக் கூடாது.

**துலாம்:** உற்சாக மனதுடன் பணி புரிவீர்கள். உங்களின் செயல் திறனை நண்பர் பாராட்டுவார். தொழில் வளர்ச்சியில் புதிய பரிமாணம் ஏற்படும். பணவரவும் நன்மையும் அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** திட்டமிட்டு பணிபுரிவீர்கள். எதிர்பார்ப்பு சிறப்பாக நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் வியத்தகு முன்னேற்றம் ஏற்படும். உபரி பண வரவு கிடைக்கும்.

**தனுசு:** மாறுபட்ட சூழ்நிலை தொந்தரவு தரலாம். தொழில், வியாபாரத்தில் இதமான அணுகுமுறை நன்மை தரும். பணச் செலவில் சிக்கனம் பின்பற்றவும். சீரான ஓய்வு உடல் நலம் பாதுகாக்கும்.

**மகரம்:** செயல் நிறைவேற அதிக முயற்சி தேவைப்படும். தொழிலில் உற்பத்தி, விற்பனை சுமாராக இருக்கும். அதிக நிபந்தனையுடன் பணம் கடன் பெற வேண்டாம்.

**கும்பம்:** செயல்களில் எளிமையை பின்பற்றுவீர்கள். நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி ஏற்படும்.

**மீனம்:** பணி நிறைவேறுவதில் தாமதம் இருக்கும். குடும்ப விஷயம் பிறரிடம் பேச வேண்டாம். கடின உழைப்பால் தொழிலில் சீரான வளர்ச்சி உருவாகும். பெண்கள் நகை இரவல் கொடுக்கக் கூடாது.

# மலையகத்துக்கு மற்றுமொரு சர்வதேசப் பதக்கம் கிட்டியது

## உடபுஸ்ஸல்லாவ மைந்தன் மணிவேல் சத்தியசீலன் வென்றார்



கொழும்பு, டிசெ. 9

நுவரெலியா மாவட்டம் உடபுஸ்ஸல்லாவ எமஸ்டன் தோட்டத்தை சேர்ந்த மணிவேல் சத்தியசீலன் தற்போது மலேசியா கூச்சிங் சேவாக் விளையாட்டு அரங்கில் நடைபெற்று வரும் 21ஆவது ஆசியமெய்வல்லுனர் போட்டியில் கலந்துக் கொண்டு வேகநடை போட்டியில் தங்கப்பதக்கம் வென்றார்.

மலேசியாவில் நடைபெற்று வரும் 21ஆவது ஆசிய மெய்வல்லுனர் போட்டியில் 30 நாடுகளைச் சேர்ந்த 3000க்கும் மேற்பட்ட வீர வீராங்கனைகள் கலந்துக் கொண்டுள்ளனர். இதில் ஆண்களுக்கான வேகநடைப் போட்டியில் மேற்படி சாதனையை நிலைநாட்டினார் மணிவேல் சத்தியசீலன். (ம)



## கராத்தே ஆசிரியருக்கு மதிப்பளிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 9

ஜப்பானில் அண்மையில் இடம் பெற்ற சர்வதேச ரீதியிலான கராத்தே தொடரில் வெண்கலப்பதக்கம் வென்ற சிவில் பாதுகாப்புத் திணைக்கள கராத்தே ஆசிரியர் எஸ்.விஜயராஜ் வெற்றிக் கிண்ணம் வழங்கி மதிப்பளிக்கப்பட்டார். (ம-23)

# கே.ஸி.ஸி.ஸி கிண்ணத்துக்கான கூடைப்பந்தாட்ட முடிவுகள் சில

யாழ்ப்பாணம், டிசெ. 9

அமரர் பா.மயூரதன் ஞாபகார்த்தமாக நடத்தப்படும் கூடைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கொக்குவில் இந்துக் கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்கள் சிலவற்றின் முடிவுகள்.

நேற்றுமுன்தினம் மாலை 4 மணிக்கு இடம்பெற்ற பெண்களுக்கான ஆட்டத்தில் கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பமிலியன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் பமிலியன்ஸ் விளையாட்டுக் கழக அணி 51:50 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது.

மாலை 5 மணிக்கு இடம்பெற்ற ஆண்களுக்கான ஆட்டத்தில் கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பற்றிசியன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் பற்றிசியன்ஸ் விளையாட்டுக் கழக அணி 55:34 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றது

இரவு 7 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி 75:68 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது. (ம-23)



## கராத்தே தொடரில் பருத்தித்துறை கராத்தே மாணவர்கள் சாதித்தனர்

யாழ்ப்பாணம், டிசெ. 9

திறந்த கராத்தே தோ தொடரில் பருத்தித்துறை தற்காப்புக் கலையக கராத்தே பயிலக மாணவர்கள் 2 தங்கப் பதக்கங்கள், 2 வெள்ளிப் பதக்கங்கள், 3 வெண்கலப் பதக்கங்கள் என்று 7 பதக்கங்களைப் பெற்றனர்.

கொழும்பு சுகததாஸ உள்ளக விளையாட்டரங்கில் நேற்றுமுன்தினம் இந்தப் போட்டிகள் இடம்பெற்றன.

பரிதியன் 11 வயதுப் பிரிவு ஆண்களுக்கான குமித்தே போட்டியில் வெள்ளிப்பதக்கமும், காட்டாப் போட்டியில் வெண்கலப் பதக்கமும், அருள்தாஸ் 21 வயதுப் பிரிவு ஆண்களுக்கான காட்டப் போட்டியில் தங்கப்பதக்கமும், ரதுசன் 12 வயதுப் பிரிவு ஆண்களுக்கான குமித்தே போட்டியில் தங்கப்பதக்கமும், காட்டப் போட்டியில் வெண்கலப் பதக்கமும், கென்சி 10 வயதுப் பிரிவு பெண்களுக்கான குமித்தே போட்டியில் வெண்கலப் பதக்கமும், பவித்திரா 9 வயதுப் பிரிவு பெண்களுக்கான காட்டாப் போட்டியில் வெள்ளிப் பதக்கமும் பெற்றனர். (ம-23)

## இன்றைய மோதல்கள்


யாழ்ப்பாணம், டிசெ. 9

இலங்கைப் பாடசாலைகள் கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் வடக்கு வலய பாடசாலைகளுக்கு இடையிலான 15 வயதுக்குட்பட்ட இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலையின் கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று காலை 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வேம்படி மகளிர் உயர்தரப் பர்டசாலை அணியை எதிர்த்து உடுவில் மகளிர் கல்லூரி அணி மோதவுள்ளது. காலை 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியை எதிர்த்து வேலணை மத்திய கல்லூரி அணி மோதவுள்ளது. பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அணியை எதிர்த்து யூனியன் கல்லூரி அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து திருக்குடும்பக் கன்னியர் மட அணி மோதவுள்ளது. (ம-23)


# ரொனால்டோ கோல் பெற்றபோதிலும் தோல்வியைச் சந்தித்தது யுவன்டஸ்!

இத்தாலியக் கழகங்களில் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் யுவென்டஸ் அணி தோல்வியடைந்தது.

யுவென்டஸை எதிர்த்து லஜியோ மோதியது. ஆட்டத்தின் 25ஆவது நிமிடத்திலேயே யுவன்டஸின் முதலாவது கோலைப் பதிவுசெய்தார் ரொனால்டோ. 45ஆவது நிமிடத்தில் பதிலடி கொடுத்தது யுவன்டஸ். 74ஆவது நிமிடத்தில் லஜியோ மற்றொரு கோலைப் பதிவுசெய்ய முடிவில் 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது யுவன்டஸ். (ம)



# இலங்கைத் தொடருக்கான பாகிஸ்தான் அணி அறிவிப்பு



லாகூர், டிசெ. 9

இலங்கை கிரிக்கெட் அணிக்கெதிரான டெஸ்ட் தொடரில் விளையாடும், பாகிஸ்தான் அணி விவரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

16பேர் கொண்ட இந்த அணியில், அனுபவ துடுப்பாட்ட வீரரான பவாட் அலாமுக்கு வாய்ப்புக் கிடைத்துள்ளது.

டெஸ்ட் போட்டிகளில் பெரிதும் அனுபவமில்லாத 34 வயதான பவாட் அலாம், இறுதியாக கடந்த 2009ஆம் ஆண்டு நியூஸிலாந்து அணிக்கெதிரான டெஸ்ட் போட்டியில் விளையாடியிருந்தார்.

இறுதியாக 2015ஆம் ஆண்டு பங்களாதேஷ் அணிக்கெதிரான ஒரு நாள் போட்டியிலேயே, அவர் பன்னாட்டு போட்டியொன்றைச் சந்தித்திருந்தார். தற்போது சுமார் 10 ஆண்டுகளுக்குப் பின்னர் மீண்டும் அணியில் இடம்பிடித்துள்ளார். இதுவரை அவர் 3 டெஸ்ட் போட்டிகளில் மட்டுமே விளையாடியிருந்தாலும், முதற்தரப் போட்டிகளில் 12 ஆயிரம் ஓட்டங்களைப் பெற்றுள்ளார்.

இதுதவிர வேகப்பந்து வீச்சாளரான உஸ்மான் ஷான்வாரி, முதல்முறையாக டெஸ்ட் கிரிக்கெட்டுக்கு அழைக்கப்பட்டுள்ளார். அவர் இதுவரை 17 ஒருநாள் மற்றும் 16 ரி20 போட்டிகளில் விளையாடியுள்ளார்.

மேலும், வேகபந்து வீச்சாளரான இம்ரான் கான், மொஹமட் அப்பாஸ், நயீம் ஷா மற்றும் ஷஹீன் அப்ரிடி ஆகியோருக்கும் அணியில் இடம்கிடைத்துள்ளது.


அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளரான ஹசன் அலி, ஏற்கனவே உபாதைக் காரணமாக இத்தொடரிலிருந்து விலகியமை குறிப்பிடத்தக்கது.

இதேபோல, சகலதுறை வீரர் இப்தீகார் அஹமட் மற்றும் வேகபந்து வீச்சாளரான கடந்த ஆஸ்திரேலியா தொடரில் விளையாடிய மொஹமட் மூஸா கான் ஆகியோர் அணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

அணியின் முழுமையான விவரம், அசார் அலி தலைமையிலான அணியில், அபீட் அலி, அசாட் சபீக், பாபர் அசாம், பவாட் அலாம், ஹரிஸ் சொஹைல், இமாம் உல் ஹக், இம்ரான் கான், காஷிப் பாத்தீ, மொஹமட் அப்பாஸ், மொஹமட் ரிஸ்வான், நயீம் ஷா, ஷாயீன் ஷாஅப்ரிடி, ஷான் மசூத், யாசிர் ஷா, உஸ்மான் ஷான்வாரி ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

கடந்த 2009ஆம் ஆண்டு இடம்பெற்ற தீவிரவாத தாக்குதலுக்குப் பிறகு, இலங்கை கிரிக்கெட் அணி, பாகிஸ்தானுக்கு கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டு இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது. ஐ.சி.சி. டெஸ்ட் தொடரின் ஓர் அங்கமாக நடைபெறவுள்ள இரண்டுபோட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் போட்டி, டிசம்பர் 11ஆம் திகதி தொடக்கம் 15ஆம் திகதி வரை ராவல் பிண்டி மைதானத்தில் நடைபெறவுள்ளது. இரண்டாவது டெஸ்ட் போட்டி, டிசெம்பர் 19ஆம் திகதி தொடக்கம் 23ஆம் திகதி வரை கராச்சி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அண்மையில் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுவதற்காக ஆஸ்திரேலியா சென்ற பாகிஸ்தான் அணி, இரண்டு போட்டிகளிலுமே படுதோல்வியை சந்தித்தது. ஆகையால், 10 ஆண்டுகளுக்கு பிறகு நடைபெறும் சிறப்பு மிக்க டெஸ்ட் தொடரில் வெற்றிபெற்றே ஆக வேண்டுமென்ற கட்டாயத்தில் பாகிஸ்தான் அணி உள்ளது. (ஒ.5)



## மோசமான களத்தடுப்பு எச்சரிக்கிறார் யுவராஜ்

கொல்கத்தா, டிசெ. 9

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான முதல் ரி20 ஆட்டத்தில், இந்திய அணியின் களத்தடுப்பு மிகவும் மோசமாக இருந்தது என்று இந்திய அணியின் முன்னாள் சகலதுறை வீரர் யுவராஜ் சிங் தெரிவித்துள்ளார்.

ஹைதராபாத்தில் நடந்த முதலாவது ரி20 ஆட்டத்தில் இந்திய அணி 6 இலக்குகள் வித்தியாசத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணியை வீழ்த்தியது.

இந்த ஆட்டத்தில் மேற்கிந்தியத்தீவுகளின் வீரர் ஹெட்மயர் கொடுத்த இரண்டு பிடியெடுப்பு வாய்ப்புக்களை இந்திய அணியின் வொசிங்டன் சுந்தர் நழுவ விட்டார்.

மேற்கிந்தியத்தீவுகள் அணியின் தலைவர் பொலார்ட் கொடுத்த பிடியெடுப்பு வாய்ப்பை ரோகித் சர்மா தவறவிட்டார். மேற்கிந்தியத் தீவுகள் அணி 200 ஓட்டங்களைத் தாண்டுவதற்கு இது வழிவகுத்தது.

இது தொடர்பில் இந்திய அணியின் முன்னாள் சகலதுறை ஆட்டக்காரர் யுவராஜ் தனது கீச்சகத்தில், இந்தியாவின் களத்தடுப்பு மோசமாக இருந்தது. இளம் வீரர்கள் பிடியெடுப்பு வாய்ப்புக்களை வீணடிப்பது கண்டிக்கத்தக்கது, என்றார். (ஒ.5)



## அண்டர்சன் அணிக்கு மீண்டும் திரும்பினார்

லண்டன், டிசெ. 9

தென்னாபிரிக்காவுக்கு எதிராக டெஸ்ட் தொடரில் விளையாட உள்ள இங்கிலாந்து அணியில், அனுபவ வேகப் பந்துவீச்சாளர் ஜேம்ஸ் அண்டர்சன் இடம் பெற்றுள்ளார். கடந்த ஓகஸ்ட் மாதம் ஆஸ்திரேலிய அணியுடன் நடந்த ஆஷஸ் டெஸ்ட் தொடரின் முதல் போட்டியிலேயே காயம் காரணமாக வெளியேறிய அண்டர்சன் (வயது37) அதன் பிறகு களமிறங்காமல் ஓய்வெடுத்து வந்தார். தற்போது காயம் முழுவதுமாகக் குணமடைந்து உடல் தகுதி பெற்ற நிலையில், தென்னாபிரிக்க டெஸ்ட் தொடருக்கான அணியில் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

சாகிப் மகமூத் நீக்கப்பட்டுள்ள நிலையில், மார்க் வூட் மற்றும் ஜொனி பேர்ஸ்டோ அணிக்கு திரும்பியுள்ளனர்.

இங்கிலாந்து அணி: ஜோ ரூட் (அணித் தலைவர்), ஜேம்ஸ் அண்டர்சன், ஜோப்ரா ஆர்ச்சர், ஜொனி பேர்ஸ்டோ, ஸ்டூவர்ட் பிராட், ரோரி பர்ன்ஸ், ஜோஸ் பட்லர், ஸாக் கிராவ்லி, சாம் கரன், ஜோ டென்லி, ஜாக் லீச், மேத்யூ பார்கின்சன், ஓலி போப், டொமினிக் சிப்லி, பென் ஸ்டோக்ஸ், கிறிஸ் வோக்ஸ், மார்க் வூட். (ஒ.5)

# பெண்களுக்கான ஐ.பி.எல். நடத்த 4 ஆண்டுகளாகும்

### பி.சி.சி.ஐ. தலைவர் தெரிவிப்பு



கொல்கத்தா, டிசெ. 9

பெண்களுக்கான ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டி நடத்த வேண்டும் என்று நீண்ட நாள்களாகக் கோரிக்கை விடுக்கப்பட்டு வருகின்றது. கடந்த ஆண்டு ஐ.பி.எல். போட்டிக்கு முன்பாக பல நாட்டு வீராங்கனைகள் பங்கேற்ற 20 பந்துப் பரிமாற்றக் கண்காட்சி போட்டி நடைபெற்றது.

இந்த நிலையில் பெண்களுக்கான ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டி குறித்து இந்திய கிரிக்கெட் சபைத் தலைவர் சவுரவ் கங்குலி தெரிவித்ததாவது:

பெண்களுக்கான ஐ.பி.எல். போட்டியை நடத்துவதில் உள்ள நடைமுறைச் சிக்கல்களை நாம் புரிந்து கொள்ள வேண்டும். போட்டியை நடத்த நிறைய வீராங்கனைகள் இருக்க வேண்டியது அவசியமானதாகும். அடுத்த 4 ஆண்டுகளில் சிறந்த வீராங்கனைகளை உள்ளடக்கிய 7 அணிகள் கொண்ட பெண்கள் ஐ.பி.எல். போட்டியை நடத்தலாம். முதலில் மாநில கிரிக்கெட் சங்கங்கள் பலமான பெண்கள் அணியை உருவாக்க வேண்டும். கடந்த சில ஆண்டுகளாக பெண்கள் கிரிக்கெட் போட்டிக்கு நல்ல வரவேற்பு கிடைக்கின்றது. இந்திய கிரிக்கெட் சபையும் பெண்கள் கிரிக்கெட் வளர்ச்சிக்கு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. எம்மிடம் 150 முதல் 160 வீராங்கனைகள் இருந்தால் பெண்கள் ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியைத் தொடங்குவதற்கான நடவடிக்கையை முன்னெடுக்கலாம். தற்போது எம்மிடம் 50 முதல் 60 வீராங்கனைகள் தான் இருக்கிறார்கள். இந்திய கிரிக்கெட் சபையின் நடவடிக்கையால் வீராங்கனை களின் எண்ணிக்கை அதிகரிக்கும், என்று தெரிவித்தார். (ஒ.5)

# மே.தீவுகளிடம் இந்தியா தவிடுபொடி






இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது ரி20 ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 8 இலக்குகளால் அபார வெற்றி பெற்றது. மேற்கிந்தியத் தீவுகள் அணி நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 20 பந்துப்பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 170 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக டுபி 54 ஓட்டங்களைப் பெற்றார். பன்ட் ஆட்டமிழக்காமல் 33 ஓட்டங்களையும், கோக்லி 19 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் வில்லியம்ஸ், வால்ஸ் இருவரும் தலா 2 இலக்குகளையும், கொட்ரெல், பார்ரி, கோல்டர் மூவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர். பதிலுக்குக் களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 18.3 பந்துப்பரிமாற்றங்களில் 2 இலக்குகளை மாத்திரம் இழந்து 172 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது. சிம்மன்ஸ் அதிகபட்சமாக 67 ஓட்டங்களையும், லூயிஸ் 40 ஓட்டங்களையும், பூரன் 38 ஓட்டங்களையும் பெற்றனர். (ம)


## மரண அறிவித்தல்



பிறப்பு 21 . 12 . 1986

இறப்பு 08 . 12 . 2019

### திருமதி காமல் குகதர்சன்

வவுனியா செட்டிக்குளத்தைப் பிறப்பிடமாகவும் இல26, புதுவீதி கொய்யாத்தேரட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி காமல் குகதர்சன் நேற்று (08.12.2019) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் இதயராஜ் நாகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகளும் அன்ரன் செல்வரெட்ணம் (பெரியண்ணை) ஜெயராணி தம்பதிகளின் பாசமிகு மருமகளும் குகதர்சனின் (மருத்துவ பிரதிநிதி - Sunshine) அன்பு மனைவியும் அஸ்மியா, அக்ஷயன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் நிலானி (லண்டன்), இதயறஞ்சினி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் மயூரா பிரியதர்சினி, சாளினி (ஆசிரி - ஆய்வுகூடம்), சுதர்சன் (ஜேர்மன்), சர்மினி ஆகியோரின் பாசமிகு அண்ணியும் மோகன்ராஜ் (லண்டன்), சசினி (டென்மார்க்) ஆகியோரின்பாசமிகு மைத்துனியும் சிறோசன் (மருத்துவ பிரதிநிதி - Indoscan Pvt Ltd), போல்நியூமன் (Dealmage), பானுஷா (ஜேர்மன்), திவாகர் (ICL Marketing Pvt Ltd) ஆகியோரின் உடன்பிறவா சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புதுவீதி, கொய்யாத்தோட்டம்

தகவல்: குடும்பத்தினர்.

## காணவில்லை

2 ஆம் வட்டாரம் மேற்கு, நெடுந்தீவைச் சேர்ந்த

**க. இராமசந்திரன் (குணம்)**

வயது 54, உயரம் 162 cm என்பவரை 02.12.2019 அன்று மாலை 2 மணிக்கு பின்னர் காணவில்லை. அவர் தொடர்பான தகவல் அறிந்தவர்கள் அறியத்தரவும்.



077 353 8443, 077 589 0070

## மரண அறிவித்தல்

மலர்வு 23 - 04 - 1952



உதிர்வு 08 - 12 - 2019

### வல்லிபுரம் ஜெகநாதன் (ராசு)

(மகாவிஷ்ணு கட்டடப்பொருள் விற்பனை நிலைய உரிமையாளர்)

யாழ்ப்பாணம் 395/2, நாவலர் வீதி, நல்லூரைப்பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் ஜெகநாதன் நேற்று (08.12.2019) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல 395/2, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர் நிரஞ்சன் -077 905 0185


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.12.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.